www.tamilarangam.net

# எரிமலை

ஜூன் 2001




## பொங்கும் கடல்
## குமுறும் எரிமலை
## என்ன செய்யும் எம்மை ...

www.erimalai.com

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# அக்கறைப்பூக்கள்




எரிமலை இதழை நான் மாதம் தவறாமல் படித்து வருகின்றேன். அதன் மூலம் நமது தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டு என்மனம் மிகுந்த வேதனையடைகின்றது. தமிழீழம் ஒன்றுதான் தமிழர்கள் படும் இன்னலைப் போக்கும் என்பதில் எவ்வித ஐயமும் கிடையாது.

இரா.சுப்பிரமணியம்
திண்டுக்கல், தமிழ்நாடு




வில்லுக்குளத்துப் பறவை உண்மைச் சம்பவத்தின் தொகுப்பில் இந்திய அழிவுப் படையின் இரக்கமற்ற கொடுந் தாக்குதலில் சறோ அக்கா என்ற ஈழத்தாய்க்கு நேர்ந்த கொடுமையையும், அவர் சோறிட்டவர்களில் ஒருவனே எதிரியின் கைக்கூலியாக மாறி அந்த ஈழத் தாயைக் கொன்ற நயவஞ்சகமும் விழி கசிந்து நெஞ்சு கனக்கச் செய்தது. புனிதப் பல் ஆய்வுக் கட்டுரை மதத்தின் பெயரால் மக்களை மூடநம்பிக்கை என்ற மயக்க நிலையில் ஆழ்த்தும் அயோக்கியர்களின் எண்ணங்களுக்கு சாவுமணி அடிப்பதாக இருந்தது. மண்ணுக்குப் பட்ட கடன் தீர்த்த கணங்கள்- படித்தேன் விழுப்புண் ஏற்று உயிரிழக்கும் நிலையிலும் எதிரியை முற்றாக ஒழித்து தாய்மண் காக்க மன உறுதியுடன் சமராடிய களப்போராளியின் வீரம் தாய்த் தமிழீழ விடுதலை வெகு தொலைவில் இல்லை என்பதைக் கட்டியம் கூறி நிற்கிறது. பொங்குதமிழ் மங்காதிருக்க பண்டிதர் திரு. ச.வே பஞ்சாட்சரம் எழுதிய மொழி ஆய்வுக் கட்டுரை பண்டைய தமிழ் நிலங்களையும் தமிழன் தன் நிலப்பரப்பை எப்படியெல்லாம் இழந்து நிற்கிறான் என்பதையும் இனியும் தமிழன் விழிக்காவிடின் ஏற்படப்போகும் நிலையையும் மிகத்தெளிவாகக் கூறியுள்ளார்.

அ.சேக்முகமது.
சென்னை, தமிழ்நாடு







தமிழீழ மண்ணின் உள்ளக்குமுறல்களையும் வீர காவியங்களையும் மற்றும் பல அம்சங்களைத் தாங்கி வெளிவரும் எரிமலையைப் பாராட்டுகின்றேன். தமிழீழ மண்ணில் இனவெறி இராணுவம் புரியும் அட்டூழியங்களையும், மனித உரிமைமீறல்களையும் புகைப்படம் மற்றும் செய்திகள் மூலம் உலக சமூகம் அறியும் வகையில் அம்பலப்படுத்தி தமிழீழ விடுதலைப் போரின் மிகச்சிறந்த பிரச்சார ஆயுதமாக எரிமலை விளங்குகின்றது. புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்பதை இலட்சியமாகக் கொண்டு இரவு பகல் பாராது தமது உயிரையே அர்ப்பணித்துக்கொண்டு தமிழ் இனத்தின் காவலனாக பெரியாரின் பேரன் தம்பி பிரபாகரனின் தலைமையில் போராடி வருகின்றார்கள் தமிழீழ விடுதலைப் புலிகள். அவர்களின் கனவு நனவாகும் காலம் வெகுதொலைவில் இல்லை.

த.பாலாஜி
கர்ணாம்பட்டு, தமிழ்நாடு

திரு. ஜெயராஜ் எழுதிய தலைவர் பிரபாகரனின் அதிர்ச்சியூட்டும் நகர்வுகள் கட்டுரை படித்தேன். ஓர் இராணுவ ஆய்வாளர் புலிகள் கைக்கொள்ளும், தாக்குதல் பாணி, இராணுவ வரலாற்றுப் புத்தகங்களின் பக்கங்களில் எங்குமாய் சங்கத் தமிழ் நகரில் இருந்து பொங்கும் எரிமலைக்கு, நிச்சயிக்கப்பட்ட தேசம் என்ற தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரை மிகவும் அருமை பயனுள்ளதாக இருந்தது. உலக வரைபடத்தில் இன்னும் பல நிச்சயிக்கப்பட்ட தேசங்கள் கண்டிப்பாய் இருக்கும். அவற்றின் வரலாறையும் போராட்டங்களையும் அடுத்த வெளிப்படும் எரிமலை இதழ்களில் வெளிப்படுத்தினால் நன்றாக இருக்கும்.

ஆ. மகாலிங்கம்
மதுரை, தமிழ்நாடு

சுதந்திரத்திற்காக போராடுவதைத் தவிர எமக்கு வேறுவழி யில்லை என்ற தேசியத் தலைவரின் சிந்தனையைப் படித்தபோது என்னையறியாமலே என்னில் இன உணர்ச்சி பொங்கி எழுந்தது. ஒன்றே குலம் என்று போராடும் மாமனிதரின் எழுச்சிக் குரல் சிந்திக்க வைத்தது. தோளோடு தோள் சேர்த்துப் போராடும் அன்பு சகோதர சகோதரிகளுக்கு விரைவில் வெற்றிச்செய்தி வரும் என்பது உண்மையாகும்.

டி.எஸ் தென்றல்சேகர்
தென் கடப்பந்தாங்கல், தமிழ்நாடு

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எரிமலை

ஜூன் 2001

# உள்ளே...

## கட்டுரைகள்


| | |
|---|---|
| அனுபவத்தில்கூட பேரினவாதம் பாடம் கற்க மறுக்கிறது. | பக்கம் - 20 |
| எட்டப்பட்ட உடன்படிக்கை.... | பக்கம் - 22 |
| குழந்தைப் பருவத்தைப் பாதிப்பது யுத்தம் மட்டுமா? | பக்கம் - 32 |
| ஒப்பறேசன் பார்பறோசாவில்.... | பக்கம் - 38 |
| தமிழீழ வரலாறு | பக்கம் - 40 |
| அடைகாத்த வனமும் அலை எழுந்த விதமும் | பக்கம் - 42 |
| குடாரப்பு - நோமண்டி | பக்கம் - 44 |


## வாழ்த்து


| | |
|---|---|
| வெள்ளி விழாக்காணும் தமிழ்ப்பணி | பக்கம் - 10 |


## செவ்வி


| | |
|---|---|
| வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் | பக்கம் - 50 |


## சிறுகதை


| | |
|---|---|
| நாகங்கள் - ஆவரங்கால் சுதன் | பக்கம் - 14 |
| விலங்கு - சு.மகேந்திரன் | பக்கம் - 28 |
| ஓயாத கால்கள் | பக்கம் - 36 |


## கவிதை


| | |
|---|---|
| மடுவுக்குப்போதல் - நிலாந்தன் | பக்கம் - 12 |
| போராளிகளின் படைப்புக்கள் | பக்கம் - 41 |


## அறிவியல்


| | |
|---|---|
| 'குவகிராவ்ட்' | பக்கம் - 24 |


## தொகுப்பு


| | |
|---|---|
| நினைவுக் குறிப்பு | பக்கம் - 47 |
| பதிவுகள் | பக்கம் - 49 |
| மீள்பார்வை மே 2001 | பக்கம் - 51 |
| கண்கள் கூறும் வார்த்தைகள் | பக்கம் - 52 |



**04** பிரபாகரனின் போர்வியூகத்தில் அக்கினிச்சுவாலையும் எரிந்து ....





**16** சிசிலியின் ஆழக்கடலில்....





**26** தீர்ப்பெழுதும் கரங்கள் பெண்ணுடையதாகட்டும்.






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பலம் பொருந்திய சக்தியாகி ஒன்றிணைந்து போராடுவோம்

'ஆயுதங்களைக்கையளிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பாமல் எதற்காக எமது விடுதலை இயக்கம் ஆயுதங்களை ஏந்தியது. எதற்காக நாம் பதினைந்து ஆண்டு காலத்திற்கு மேலாக ஆயுதப் போராட்டத்தை நடத்தினோம். இதற்கான காரணிகள் என்ன என் பதை சிங்கள மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆயுதப் போராட்டம் தோன்றி வளர்ந்த எதார்த்தப் புறநிலைகளை ஆராய்ந்து பார்த்து அதன் காரணிகளை நீக்கிவிட உருப்படியான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டால் ஆயுதப் பிரச்சினை தானாகத் தீர்ந்துவிடும்.

அதனைவிடுத்து ஆயுதங்களைப் போட்டதும் இனப்பிரச்சினை தீர்ந்துவிடும் எனக்கருதுவது மிகத்தவறான கண்ணோட்ட மாகும். பூதாகாரமாக வளர்ந்துவிட்ட இனப் பிரச்சினையும், அதனால் எழுந்த சுதந்திர வேட்கையின் புரட்சிகர வெளிப்பாடாகவே ஆயுதப் போர்வடிவம் தோற்றம்கண்டது. ஆகவே இனப்பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்படாதவரை ஆயுதப்பிரச்சினை தீரப்போவதில்லை. இதனை சிறீலங்கா ஆட்சியாளர்களும் சிங்கள மக்களும் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள் என நம்புகிறேன்.

எமது மக்களுக்கு ஒரு சுபீட்சமான எதிர்காலத்தையும், நிரந்தரமான அமைதி யையும், சுதந்திரமான வாழ்க்கையையும் பெற்றுக் கொடுப்பதற்கு எமது விடுதலை இயக்கம் தொடர்ந்து போராடும்.

இன்று எமது மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்வது எமது இயக்கம் தான். எமது இயக்கத்தை ஒரு பலம் பொருந்திய தேசிய சக்தியாக கட்டியெழுப்பு வதற்கு தமிழ் மக்கள் எமது இயக்கத்தின் பின்னால் அணிதிரளவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்'

**தமிழீழத் தேசியத் தலைவர்**
**திரு. வே. பிரபாகரன் அவர்கள்**

( 'எனது மக்களின் விடுதலைக்காக' நூலிலிருந்து )





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தலைவாசல்





**கலை பண்பாட்டு**

**அரசியல் சமூக ஏடு**

s

இருபதாம் ஆண்டு

ஜூன்

2001

திருவள்ளுவர் ஆண்டு 2032

s

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும்
தொடர்புகட்கு

s

**எரிமலை**

தாய்மண் வெளியீடு



தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 01 - 43 58 11 42
Fax: 01 - 43 58 11 91
e.mail:editor@erimalai.com


## உலக சமூகத்திற்கு ஒரு பாடம்.

சிறீலங்கா அரசு சமார்தியமாக காய்களை நகர்த்தியுள்ளது. சிங்களப் பேரினவாத நலன்களுக்கு அச்சுறுத்தலாக உருவாகிவந்த நோர்வே சிறப்புப் பிரதிநிதி திரு. எரிக் சொல்கெய்ம் அவர்களின் இணக்கப் பேச்சுக்களுக்கான முன் முயற்சியை சந்திரிகா சாதுரியமாக தடுத்து நிறுத்தியுள்ளார். இதன்மூலம் மற்றுமொரு பேச்சுக்கள் ஊடான இணக்க முயற்சி “தோல்விக்கு” உள்ளாக்கப்பட்டுள்ளது. உலக சமூகம் உரத்த குரலில் ஆதரவு தெரிவித்த ஒரு முயற்சிக்கு ஏற்பட்டுள்ள இந்த அவச்சாவானது சிங்களத்தின் கடும்போக்கை வெளிக்காட்டியுள்ளதுடன் தமிழீழத்திற்கான நியாயங்களை பலருக்கும் உணரவைத்துள்ளது.

சிங்களத்தின் போலியான சனநாயக முகம், பரப்புரைகள் என்பனவற்றிற்குப் பின்னேயொரு திட்டமிடப்பட்ட அரக்கத்தனம் செயற்படுவதை தமிழர்களும், அவர்களது தேசியத் தலைமையான புலிகள் இயக்கமும் உரத்த குரலில் எடுத்துச் சொல்லிவந்துள்ளனர். தமிழீழ மக்களின் தேசிய உரிமைகளை நிராகரிப்பதில் சிங்களத்தின் பச்சைக்கட்சியும், நீலக்கட்சியும் ஒரே வர்ணத்தையே வெளிக் காட்டுவதை தமிழர்களின் வரலாறு பல ஆதாரங்களை வழங்குகின்றது. எனினும், உலகின் தலைமைச் சக்திகள் சந்திரிகாவின் இரட்டை நாக்குகளுக்கும், சனநாயக முகமூடிக்கும் அதிக முன்னுரிமை கொடுத்தன. சிங்களம் இந்த ஆட்டத்தில் ஒரு எல்லைவரை சென்று விளையாடி தமிழர்களை பயங்கரவாதிகளாகவும், கிரிமினல்களாகவும் மாற்றிட முயன்றது. தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் மதிநுட்பம் ஆட்டத்தின் போக்கை மாற்றியுள்ளது. அவசர அவசரமாக ஆட்டத்தை விட்டு வெளியேற சிறீலங்கா முயல்கின்றது.

இந்தப் புறச்சூழலில் உலகசமூகம் சிறீலங்காவிற்கும், தமிழீழத்திற்குமான உறவின் இயல்பான நிலையை அங்கீகரித்தல் தொடர்பான கேள்விக்கு சரியான விடையை கண்டிடல் வேண்டும்.

தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமை உட்பட அனைத்து உரிமைகளையும் அங்கீகரித்து, நேர்மையான இணக்க முயற்சிகளுக்குத் தேவையான அரசியல் - இராசதந்திர தளத்தை உருவாக்கிட வேண்டும். மேலும், தமிழர்களை பயங் கரவாதிகள் என வகைப்படுத்தும் சிங்கள அரக்கத்தனத்தை நிராகரிக்கும் இராசதந்திர உறுதியை உலகசமூகம் வெளிக்காட்டுவது இணக்க முயற்சிகளுக்குத் தேவையான நேர்மையை வெளிக்காட்டுவதாக அமையும்.

மாறாக, உலகசமூகம் மீள ஒருமுறை சிங்களத்திற்கு சந்தர்ப்பம் வழங்க முற்படின் அது சிங்களத்தின் இனப்படுகொலை அரசியலுக்கு முண்டு கொடுப் பதாகவே கணிக்கப்படும். எதுவிதமான உறுதியான செய்திகளுமற்ற உலக சமூகத்தின் வாய்ச்சொற்கள் தமிழர்களிற்கு வெறுப்பைத் தருகின்றன. நேர்மை பற்றிய நியாயமான சந்தேகத்தை எழுப்புகின்றன. புவிசார் அரசியல், வணிக அரசியல் போன்ற வறட்டுத்தனமான சொற்களின் வர்ணிப்புக்களுக்கு ஓய்வு கொடுத்துவிட்டு, உலக சமூகம் செயற்பட வேண்டும் என தமிழர்கள் விரும்பு கின்றனர்.

தமிழர்கள் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என அறிக்கைகள் விடும் சில உலகசமூக நாடுகள் நோர்வே முயற்சிகளுக்கு ஏற்பட்டுள்ள தோல்வியை, நோக்கை சிதைக்காத ஆய்வுக்குட்படுத்த வேண்டும். தமது தவறுகள் அங்கு என்ன என்பதை கற்றுணர வேண்டும். சிங்களப் பேரினவாதத்திற்கு ஆயுதப்பயிற்சியும், பொருளாதார உதவிகளும் வழங்கியவாறு இணக்கத்தை ஏற்படுத்த முடியாது என்ற உண்மைகூட காரணங்களிலொன்று என்கின்ற பெருஉண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். மாறாக, தமிழர்களின் கோரிக் கைகளை நேர்மையாக ஏற்றுக்கொண்டு தமது வலுவை அதற்காகப் பிரயோகித் திருப்பின் எரிக் சொல்கெயம் இலகுவாக கழற்றிவிடப்பட்டிருக்கமாட்டார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிரபாகரனின் போ

எம்மால் மேற்கொள்ளப்பட்ட ஒருதலைப் பட்சமான யுத்தநிறுத்தத்தை உறுதியான வகையில் கடைப்பிடிப்பதற்காக நாம் நிறைய விலைகளைக் கொடுத்தோம். எதிரியின் தொடர்ச்சியான தாக்குதல்களில் நாம் பல போராளிகளை இழந்தோம். பதில் நடவடிக்கையாக எதிரிமீது ஒரு வலிந்த தாக்குதலை மேற்கொள்ளமுடியாதவாறு எமது தலைமையின் கட்டளைக்குக் கீழ்ப் படிந்திருந்த போராளிகளுக்கோ மனதில் பொறுமையிழந்த உணர்வும், எதிரிக்கு நாம் யார் என்று காட்டவேண்டுமென்ற ஓர்மமும், மேலெழுந்தவண்ணம் இருந்தன.

இந்தச் சூழலில்தான் சிறீலங்கா அரசும், இராணுவமும் புலிகள் பலவீனமடைந்து விட்டார்கள் என்ற தப்புக் கணிப்போடு புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத் தைப் புறக்கணித்து, யுத்தநிறுத்தம் மேற் கொண்ட நான்கு மாத காலத்தையும் ஆனையிறவை மீளக்கைப்பற்றுதலுக்கான பாரியளவிலான இராணுவப் பலத்தயாரிப் பிற்கு பயன்படுத்திக்கொண்டன. ஆனை யிறவு புலிகளின் கைகளில் வீழ்ந்தமைக் குக் காரணம் புலிகளின் சூட்டுப் பலம் என்றும், குறிப்பாக அவர்கள் பாவித்த பல குழல் றொக்கற் செலுத்திகள்தான் என இராணுவத் தலைமைகள் அரசுக்குக் கூறியி ருந்தன. அரசோ அவசர அவசரமாக உலக நாடுகளிடமிருந்து பலநூறு கோடி ரூபாய்க் கணக்கான செலவில் 40 குழல்களைக் கொண்ட பலகுழல் றொக்கற் செலுத்தி களையும், கிபிர் மற்றும் மிக்-27 குண்டுவீச்சு விமானங்களையும், தாக்குதற் கடற்கலங் களையும், யுத்த டாங்கிகள், கவச வாகனங் கள், ஆட்லறிகள், மோட்டார் குண்டு செலுத் திகள் என பல்வேறு நவீன ஆயுதங்களை யும் இராணுவத்திற்கு வேண்டிக் குவித்தது. இவை யாழ். குடாநாட்டிற்கும் நகர்த்தப் பட்டன. அத்தோடு இராணுவத்திற்கு விசேட பயிற்சிகளும், இராணுவ நடவடிக்கைகளுக் கான ஒத்திகைப் பயிற்சிகளும் வழங்கப்பட் டன. இவர்களுக்கான இராணுவப் பயிற்சி களை அமெரிக்க ஆயுதப் படையினரே முன்னி ன்று வழங்கினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு ஆனையிறவுக்கான பெரும் யுத்த தயார்ப்படுத்தல் நடந்துகொண்டிருந்தன.

சிறீலங்கா அரசையும், படையினரையும் பொறுத்தளவில் போரில் ஆனையிறவுத் தளம் கொண்டிருக்கக்கூடிய முக்கியத்துவத்தால், ஆனையிறவு என்பதை சிங்கள இனத்தின் கௌரவப் பிரச்சினையாகவே கருதினர். அதை என்ன விலைகொடுத்தாவது மீட்டெடுத்து தமது கௌரவத்தைக் காப்பாற்றிவிட வேண்டுமென் பதிலும், இதன்மூலம் பேச்சுவார்த்தை மேசை யில் விடுதலைப் புலிகளின் பேரம் பேசும் பல த்தை குறைத்துவிடலாம் என்பதிலுமே முக்கிய குறியாக அரசும், படையும் இருந்தன.

ஆனால் ஆனையிறவு என்பதன் மூலோ பாய முக்கியத்துவம் ஒருபுறமிருக்க உணர்வு ரீதியாகப் போராளிகளைப் பொறுத்தவரையில் எமது தாயகபூமி என்பது மட்டுமல்லாது, இந்த மண்ணில்தான் கடந்த பத்து வருடத்தில் 3000ற் கும் மேற்பட்ட போராளிகளின் உடலும், உதிர மும், உணர்வும் கலந்து கிடக்கின்றது. இந்த விலை கொடுத்து வென்ற பூமியை விடக் கூடாது என்பதில் இறுக்கமான, உறுதி யான முடிவோடுதான் களம் பொருத போராளிகள் காத்திருந்தனர். 'ஒன்று நாங்கள் எல்லோரும் போராடி மடிய வேண்டும். அல்லது வருகிற எதிரியின் கதையை இதற்குள் வைத்து முடிக்கவேண்டும் என்ற உறுதியோடுதான் சண்டைக்குக் காத்திருந்தோம்' என்று தனது வைராக்கியத்தை வெளிப்படுத்தினாள் ஒரு போராளி. அரசின் 40 குழல் றொக்கற் செலுத் திகள் கொள்வனவு, கிபிர், மிக்-27 குண்டு வீச்சு விமானங்கள் கொள்வனவு, யுத்த டாங்கி கள், ஆட்லறிகள் கொள்வனவு என்ற வெளிப் படையான செய்திகள் போராளிகளின் மனோ திடத்தைச் சிதைத்திருக்கும் என்று எதிரி எண் ணியிருக்க எமது தலைவர் வகுத்திருந்த மிக வும் புதிய தந்திரோபாயமானதும், நுட்ப மானதுமான முறியடிப்புச் சமருக் கான ஏற்பாட்டில் மும்முரமாக ஈடு பட்டுக்கொண்டிருந்தார்கள் போராளி கள்.

தலைவரின் திட்டத்திற்கேற்ப வியூக மிடப்பட்டிருந்த முன்னரங்க நிலையில் கிளாலிக் கரையிலிருந்து தொண்டமானாறு நீரேரிவரை உள்ள பகுதியை மூன்றாகப் பிரித்து கிளாலிக் கரையிலிருந்து 1600 மீற்றர் வரையான பகுதிக்கு லெப். கேணல் கோகுல னும், அதிலிருந்து யாழ். கண்டி வீதி (ஏ9) வரை யான பகுதிக்கு லெப். கேணல் வீரமணியும், அதிலிருந்து தொண்டமானாறு நீரேரி வரை யான பகுதிக்கு லெப். கேணல் லோறன்ஸ்சும் பகுதிப் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட் டிருந்தனர். கண்டிவீதிக்கு மேற்குப்பக்கமாக சோதியா படையணியும், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியும், மாலதி படையணி யும், கண்டிவீதிக்குக் கிழக்காக மாலதி படை யணியும், சோதியா படையணியும் என முன் னரங்கத்தில் நிலை அமைத்திருந்தனர். மேற்காக உள்ள சோதியா படையணியை அதன் சிறப்புத் தளபதி லெப். கேணல் துர்க் காவும் (முறியடிப்புச்சமரில் வெற்றிகரமாகப் பணியாற்றியமைக்காக கேணல் நிலைக்கு





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பதவியுயர்த்தப்பட்டவர்), சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியை அதன் துணைத்தளபதி மேஜர் கோபித்தும் (முறியடிப்புச்சமரில் வெற்றிகரமாகப் பணியாற்றியமைக்காக லெப். கேணல் நிலைக்கு பதவியுயர்த்தப்பட்டவர்), மாலதி படையணியை அதற்குப் பொறுப்பாக நின்ற சுகியும், ஏ9க்கு கிழக்காகவுள்ள சோதியா படையணியை அதன் தாக்குதல் தளபதி லெப். கேணல் சுதந்திராவும் கவனித்து வந்தனர்.

இரண்டாவது கட்ட பாதுகாப்பு நிலையை சுட்டாவின் பொறுப்பில் எல்லைப்படை, சிறப்பு எல்லைப்படை வீரர்கள் நிலைகள் அமைத்துக் காத்திருந்தனர். இச்சமர் முனையானது கேணல் பால்ராஜ் தலைமையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. எதிரியானவன் கிளாலிக்கடலினூடாக தரையிறக்கம் மேற்கொள்ளுவதைத் தடுப்பதற்காகவும், முன்னேறும் படைக்கான சூட்டாதரவையோ விநியோகத்தையோ மேற்கொள்ள விடாதவாறு கிளாலிக் கடற்பகுதியில் தளபதி அறிவு தலைமையிலான கடற்புலிகளின் தாக்குதல் படகுத் தொகுதியுடன் கடற்புலிகள் தயார் நிலையில் நின்றனர். இம்முறியடிப்புச் சமர் படையணிகளுக்கான மோட்டார், ஆட்லறிச் சூட்டாதரவையும் இராணுவத்தினருக்கெதிரான பீரங்கித்தாக்குதல்களை மேற்கொள்ளவும் கண்டிவீதிக்கு கிழக்கே மோட்டார் ஒருங்கிணைப்பாளராக அமுதாவும், கண்டி வீதிக்கு மேற்கே ஒருங்கிணைப்பாளராக ரமேஸ்சும் இவ்விருவருக்குமான ஒருங்கிணைப்பாளராக வர்ணனும் நியமிக்கப்பட்டு, கேணல் கிட்டு பீரங்கிப்படையணியை கேணல் பானு வழிநடாத்த ஒழுங்குபடுத்தப் பட்டிருந்தது. இம்முறியடிப்புச் சமரின் படையணிகள் கேணல். தீபனின் தலைமையில் செயற்படத் தலைவரால் பணிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு யுத்தநிறுத்தத்திற்கு உடன்படாத அரசின் உள்நோக்கத்தைப் புரிந்து சகல ஒழுங்குபடுத்தலுடனும் ஏற்பாட்டுடனும் எதிரியின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தனர் புலிகள். அதிலும் முன்னரங்கப் பகுதியில் மூன்றில் இரண்டு பகுதியை பாதுகாத்திருந்த பெண் போராளிகளுக்குத் தெரியும், எதிரியின் பல நகர்வு உடைப்புக்கள் தங்கள் பகுதியினாலேயே மேற்கொள்ளப்படும் என்பது, அதை எதிரி தன்னுடைய நகர்வுக்கு இலகுவானதாக இருக்குமென்று முடிவு செய்வான். ஏனெனில், 'பெண்கள்' என்ற அவனின் மனப்படிமத்திலிருந்து எடுக்கும் முடிவு அது. இவ்வாறு சென்ற வருடம் விடுதலைப் புலிகள் ஆனையிறவைக் கைப்பற்றுவதற்கான சமரில் இத்தாவிலில் நிலை கொண்டிருந்தபோது, அப்பகுதியை மீளக் கைப்பற்றுவற்காக பல தடவைகள் பாரியளவிலான நடவடிக்கைகளை எதிரி மேற்கொண்டதில் 2ஆம் திகதி மாலதி படையணியின் முறியடிப்புச் சமரிலும், 10ஆம் திகதி சோதியா படையணியின் முறியடிப்புச் சமரிலும் எதிரியின் இத்தகைய எண்ணத்திற்கு பாடம்கற்பிக்க இவர்களால் முடிந்தது. இம்முறையும் அதே படையணிகள் எதிரியின் இவ்வெண்ணத்திற்கும் சேர்த்தே அடி கொடுப்பதற்குத் தயாராகக்காத்திருந்தார்கள்.

சிறீலங்கா இராணுவத்தினர் 6 நாட்களுள் ஆனையிறவைக் கைப்பற்றும் நோக்குடன் அதன் முதற்கட்டமாக முதலிருநாளில் பளையை மீட்பதற்காக தீச்சுவாலை-1 என பெயரிடப்பட்ட இப்படை நகர்வை முன்னெடுத்தனர். இந்த நடவடிக்கைக்காக இராணுவத்தினரின் கிளாலி, எழுதுமட்டுவாள் முன்னரங்க நிலைகளை நோக்கிப் பெரும் ஆளணி, ஆயுத பலங்கள் நகர்த்தப்பட்டன. சிறீலங்காவின் முன்னணிப் படையணிகளான 53ஆவது டிவிசனும், 55ஆவது டிவிசனும் இடங்களைக் கைப்பற்றிக் கொண்டுபோக, அதைத் தக்கவைக்கும் படையணியாக 52 ஆவது டிவிசனும், ஏனைய உதவி அணிகளும் எனக் கிட்டத்தட்ட 15,000 படையினர் இந்நடவடிக்கையில் இறக்கப்பட்டனர். முப்படைகளின் ஒருங்கிணைப்புடனேயே இந்நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

புலிகளின் நான்குமாத போர்நிறுத்தம் முடிவுக்குவந்த ஒருசில மணிநேரத்தில் தீச்சுவாலை-1 ஆரம்பமானது. 25ஆம் திகதி அதிகாலை புலிகளின் நிலைகளை நோக்கிப் பலகுழல் எறிகணைகளால், ஆட்லறிகளால், டாங்கிகளால் சரமாரியான செல் வீச்சுக்களை படையினர் ஆரம்பித்தனர். குண்டுவீச்சு விமானங்களும் புலிகளின் பகுதிகளில் குண்டுகளை அள்ளிவீசின. இவற்றின் சூட்டாதரவுகளுடன் படையினர் அதிகாலை 5.30 மணியளவில் புலிகளின் முன்னரங்க நிலைகள் மீதான வேகமான உடைப்புக்கள் மூலம் உட்புகுந்தனர். ஏ9 பாதையின் கிழக்கே கண்டல் பகுதியின் கரையோரமாக சோதியா படையணியின் பகுதியில் ஒன்றும், அதற்கு இடது பக்கமாக (ஏ9 பக்கம்) 1 1/2 கிலோ மீற்றரில் மாலதிபடையணியின் பகுதியில் இன்னொரு உடைப்பும் என இருபெரும் உடைப்பையும் 55ஆவது டிவிசன் மேற்கொண்டது. கிளாலி நீரேரிப் பக்கத்தால் சோதியா படையணியின் பகுதியில் ஒரு உடைப்பை 53ஆவது டிவிசனின் விசேட படையணியும், கச்சாய் வீதிக்கு வலப்பக்கம் 300 மீற்றரில் சோதியா படையணியின் பகுதியில் 53-4 பிரிகேட்டின் இன்னொரு உடைப்பும், இதிலிருந்து இன்னும் 1 கிலோ மீற்றர் தள்ளி சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் பகுதியில் 53-1 பிரிகேட் (எயார் மொபைல்) இன் மற்றைய உடைப்பும் மேற்கொள்ளப்பட்டன.

### முதலாவது முனை முறியடிப்பு

அமெரிக்காவின் சிறப்புப் பயிற்சி பெற்றதும் இலங்கையிலுள்ள தாக்குதல் படையணிகளிலேயே அதிசிறந்த முன்னணித்தாக்குதல் படையணியான 53ஆவது டிவிசனின் விசேட படையணிகள் கிளாலிக் கரையால் வேகமான முன்னேற்றத்தை மேற்கொண்டன.எமதுஇரண்டாவது பாதுகாப்பு வியூகத்தையும் தாண்டத் தொடங்கிவிட்டார்கள். இதேநேரத்தில் கிளாலிக் கடலால் கடற்புலிகள் கரையால் வந்த எதிரியை உக்கிரமாகத்தாக்க, பின் நிலையில் இருந்த எல்லைப்படைவீரர்கள் மூர்க்கத்தனமாகத்தாக்க கிட்டு பீரங்கிப்படை யணியினர் வேகமானதும், துல்லியமானதுமான செல்களைப் பொழிய, இழப்புக்களைச் சந்தித்த படையினர் தொடர்ச்சியாக முன்னேற முடியாது திணறி, படையினரை வலது பக்கமாக லெப்.கேணல் துர்க்கா இருந்த நிலைகள் மீது திருப்ப அங்கே எதிரியுடன் மிக நெருங்கிய நிலையில் உக்கிர சமர் வெடித்தது.

10 மீற்றரில் குறைவாகவும் எதிரி நெருங்கிவிட துப்பாக்கியை பிரயோகிக்கமுடியாத நெருக்கத்தில்கூட சண்டையிட்டு இழப்புக்



களை எதிரிக்கு ஏற்படுத்தினர் அப்பெண் போராளிகள். இச்சண்டையில் அப்பகுதியில் நின்ற முத்துச்சுடர் என்ற பதுங்கிச்சுடும் பெண்போராளி மிக நிதானமாக எதிரியைக் குறிவைத்துத் தாக்கிக்கொண்டிருந்தாள். தொடர்ச்சியான அவள் ஒருத்தியின் சூட்டினாலேயே 40 இராணுவத்தினரை அக் களத்தில் வைத்து விழுத்தி முடித்தாள் அந்தத்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திறமையும் வீரமும்மிக்க போராளி. அங்கு பெரும் இழப்பைச் சந்தித்த படையினரால் தொடர்ந்து முன்னேறவும் முடியவில்லை. பிடித்த இடத்தைத் தக்கவைக்கவும் முடிய வில்லை. அதைவிட எதிரி எதிர்பார்க்காத இடங்களில் எதிர்பாராதநேரத்தில் எல்லாம் பொறிவெடிகளும், மிதிவெடிகளும் வெடித்துப் பெரும் அழிவுகளை ஏற்படுத்தின. எதிரியின் படை ஒழுங்கமைவு சீர்குலைந்தது. களம் கட்டுப்பாடிழந்தது. இந்நிலையில் எவ்வளவு வேகமாக முன்னேறினார்களோ அதைவிட

**இரண்டாவது முனை முறியடிப்பு**

எதிரியின் இரண்டாவது முனை உடைப்பு சோதியா படையணியின் பிளாட்டுன் லீடர் காயத்திரி நின்ற நிலைகளினூடாகவே நடந் தது. இப்பொழுது காயத்திரிக்கு வலப்பக் கமும் எதிரி, இடப்பக்கமும் எதிரி ஆனாலும் ஆபத்தானதும் நெருக்கடியானதுமான இச்சூழ லிலும் நிதானத்துடனும், உறுதியுடனும் நின்று தொடர்ச்சியாக நிலைமைகளை உடனு க்குடன் அறிவித்துக்கொண்டிருந்தமை யால் கிட்டு பீரங்கிப்படையணியின் சூட்டாதர

ஏற்படுத்தினர் அவளது அணியினர். இவ்வாறு இவர்கள் பெரும் எதிர்ப்பைக்கொடுத்துக் கொண்டிருக்க முன்னணி நிலைகளின் இரு பக்கத்தாலும் எமது விசேட அணிகளும், எல்லைப்படையும் முன்னேறிவர எல்லாத் திசையிலும் புலிகளின் எதிர்ப்பைச் சந்தித்துச் சிக்கித்திணறிய படையினர் பின்வாங்கத் தொடங்கினர். இவ்வுடைப்புப்பாதையும் புலி களின் மூர்க்கத்தனமான முறியடிப்பால் பின்னேரப்பொழுது 5.30 மணியளவில் கைப் பற்றப்பட்டு எமது நிலைகள் உறுதிப்



வேகமாக பின்வாங்கத் தொடங்கி விட்டார் கள் இராணுவத்தினர். இலங்கையிலேயே அதிசிறந்த இந்தத் தாக்குதல் படையணி பெண்போராளிகளின் இக்களமுனையிலி ருந்து பின்வாங்கி ஓடிக்கொண்டிருந்தது. எதிரியின் இவ்வுடைப்புப் பாதையை பகல் 11.00 மணியளவில் வெற்றிகரமாக முறிய டித்து மீள தம் நிலைகளில் நிலை எடுத்துக் கொண்டன எமது அணிகள்.

வினால் பெருந்தொகையான படையினரைச் சிதைக்கமுடிந்தது. அதேநேரம் சோதியா படையணியின் கொம்பனி மேலாளரான சஞ்சனாவின் நிலைக்கு மிகக் கிட்டவாகவும் எதிரி சூழ்ந்துவிட்டான். நிலை தளம்பாது எதிரியுடன் உக்கிரப்போர் புரிந்தபடி நிலை மைகளையும் உடன் அறிவித்து கிட்டு பீரங்கிப்படையினரின் சூட்டாதர வைப்பெற்று எதிரியை நெருங்கவிடாது இழப்புக்களை

படுத்தப்பட்டன.

**மூன்றாவது முனை முறியடிப்பு**

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியினர் தமது நிலைகளை உடைத்து உட்புகுந்த எதிரிமீது கடும்சமர் புரிந்தார்கள். இவ்வணி யின் உக்கிரத்தாக்குதலுக்கு முகம்கொடுக்க முடியாத படையினர் களக்கட்டுப்பாட்டை இழந்து சிதறி ஓடினர். பகல் 11.00 மணி யளவில் எதிரியின் உடைப்புப் பாதையை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முறியடித்து, உள்நுழைந்த எதிரியை உள்ளே விட்டு மூடிவிட்டார்கள். இப்பொழுது எதிரிக்கு எஞ்சியிருந்த உடைப்புப் பாதையோ எமது இரண்டாவது பாதுகாப்பு நிலையில்தான். அதுவும் பிற்பகல் புலிகளால் முறியடிக்கப்பட்டுக் கைப்பற்றப்பட்டதும் எமது உட்பிரதேசத்தில் நின்ற எதிரிக்கும் வெளியில் நின்ற எதிரிக்குமான விநியோகங்கள் முற்றுமுழுதாகத் துண்டிக்கப்பட்ட நிலையில் மீண்டும் ஒரு உடைப்பை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி நின்ற பகுதியூடாக எதிரி மேற்கொண்டான். அங்கு மீளவும் ஓர் உக்கிரப்போர் வெடித்தது.

எதிரியை முறியடித்து எமது நிலைகளைக் கைப்பற்றினர் சாள்ஸ் அன்ரனி அணியினர். மீளவும் எதிரி உடைப்பை ஏற்படுத்த மீளவும் முறியடித்து கைப்பற்ற என மாறிமாறி காவலரண்கள் எதிரியிடம் போவதும் பின்பு எமது கைக்கு வருவதுமாக இரவிரவாக சண்டை தொடர்ந்தது. எதிரியைப் பொறுத்தளவில் எப்படியாவது எமது பகுதிக்குள் அகப்பட்ட இராணுவத்தினரின் இறந்த உடல்களையும், காயக்காரர்களையும் வெளியேற்றுவதற்காக மீள மீள உடைப்பை மேற்கொண்டான். ஆனால் எமதணிகளும் எதிரி சீரான விநியோகத்தை மேற்கொள்ளவிடாதவாறு தொடர்ச்சியாகச் சண்டையிட்டார்கள். இப்பொழுது 100மீற்றர் அளவிலான இடம்தான் எதிரியிடம் இருந்தது. கிட்டு பீரங்கிப்படையினரின் செறிவான சூட்டாதரவுடன் நெருக்கமான சண்டையொன்றில் 26ஆம் திகதி காலை 8.00 மணியளவில் முற்றுமுழுதாக அப்பாதையும் எமதணிகளால் கைப்பற்றப்பட்டது. பின்னர் எமது உட்பகுதிக்குள் சிதறிநின்ற எதிரியைத் தேடி அழிக்கும் நடவடிக்கையில் இவ்வணிகள் இறங்கின.

இவ்வாறாக ஏ9 பாதைக்கு மேற்கே மூன்று முனைகளில் உடைப்பை மேற்கொண்ட, தன் வெற்றிமீது உறுதியான நம்பிக்கை கொண்ட 53ஆவது டிவிசன் ஒரு நாளிலேயே பெரும் இழப்புக்களைச் சந்தித்தும், இறந்த இராணுவத்தின் உடல்களை விட்டுவிட்டு ஓடியதும்தான் அவர்கள் கண்ட விளைவுகள். ஆனையிறவுக்கும் பின் மீண்டும் ஒருமுறை பாரிய தோல்வியை புலிகளிடம் சந்தித்த டிவிசனாக அது வரலாற்றில் தனக்கான முத்திரை குத்திக் கொண்டது.

**கண்டல் பகுதி முனைகள் முறியடிப்பு**

கண்டல் கரைப்பகுதி நகருகின்ற படைக்குச் சாதகமான பிரதேசம் கண்டற் கரையோரமாக உடைத்து உள்நுழைந்த 55 ஆவது டிவிசன் படையணி எமது முன்னரங்க நிலைகளில் இருந்து 300 மீற்றரில் அமைந்திருந்த லெப். கேணல் சுதந்திராவின் நிலைக்கு அண்மித்துவிட்டன. சுதந்திராவின் அணியினர் பெருந்தொகையாக முன்னேறிய படையுடன் உக்கிர சமர் புரிந்தார்கள். எதிரிக்குப் பெரும் இழப்பை ஏற்படுத்தி, அவனது முயற்சியை முறியடித்தும் விட்டார்கள். எதிரி மேலும் துருப்புக்களுடன் மீளவும் முன்னேறினான். எதிரி இரண்டாவது முறை முன்னேறியதும் அப்பகுதிப் பொறுப்பாளர் லோறன்ஸ் தொலைத்தொடர்பில் சுதந்திராவிடம் 'உதவி அணிகள் அனுப்பவா' எனக் கேட்டபோது, 'என்ர பக்கச் சண்டையை கவனிக்கிறன், நீங்கள் எதிரி உடைத்த பக்கத்தை முறியடியுங்கோ' என உறுதியுடன் கூறி முன்னேறிய எதிரியுடன் நடந்த உக்கிரச்சமரை வழிநடத்திக்கொண்டிருந்தார். இம் முயற்சியிலும் எதிரிக்கே பெரும் இழப்பு. இச் சண்டையின் பின் கேணல் தீபன் அவர்களுக்கு தனது நிலையைச்சுற்றி 50க்கும் மேற்பட்ட எதிரியின் உடல்கள் கிடக்கின்றன எனத் தொலைத்தொடர்பில் உறுதிப்படுத்தியதாக அவர் குறிப்பிட்டார்.

எதிரி மீளவும் டாங்கிகளுடன் பெருந்தொகையான படையினருடன் இவர்களின் நிலைமீது தாக்கத் தொடங்கினான். இப்பொழுது சுதந்திரா காயம் அடைந்தார். ஆயினும் நிலை தளராது குரல் சோராது இறுதிவரை நிலைமைகளை அறிவித்துக் கொண்டேயிருந்தார். அங்கு நின்ற போராளிகள் அனைவரும் எதிரியை முன்னேறவிடாது இறுதி மூச்சுவரை போராடினார்கள். பகல் 12.30 மணியளவில் சுதந்திராவின் குரல் தொலைத்தொடர்பில் நிசப்தமாகியது. அவ்விடங்களைக் கைப்பற்றிய எதிரி வேகவேகமாக நிலைகளை அமைத்து பலப்படுத்தத் தொடங்கிவிட்டான்.

இப்பொழுது சோதியா படையணியின் கொம்பனி 2ஆவது லீடர் தமிழழகியுடனான ஒருசில போராளிகள் மட்டுமே எஞ்சிநின்றனர். தன்னுடன் நின்றவர்களில் ஏறத்தாள அனைவரும் வீழ்ந்தபின்னர் தனித்து நின்றபோதும், இழப்புக்களைக்கண்டு சோராது, கலங்காது உறுதியான மனநிலையோடு நின்று உதவியணிகள் வரும்வரையும் மன ஓர்மத்துடன் முறியடிப்புச் சமர் வெற்றிகரமாக முடியும் வரை சளைக்காது போராடினார். அவர்களுக்கான விநியோகம் கிடைக்காத நிலையில், தமது ரவைகளும் தீர்ந்த நிலையில் வீழ்ந்த எதிரியின் குண்டுகளையும், ஆயுதங்களையும் எடுத்து அதையே எதிரிக்கு பாவித்து சண்டையிட்டு எதிரியைக் கொன்றார்கள். அவர்கள் மூட்டிய தீப்பந்தத்தால் அவர்களே சுட்டெரிக்கப்பட்டார்கள்.

இங்கு நிலைமை இவ்வாறிருக்க மாலதி படையணியின் பகுதியால் உடைப்பை ஏற்படுத்திய எதிரியுடன் கொம்பனிப் பொறுப்பாளர் மாலதியுடனான அணி உக்கிர போர் புரிந்தது. எதிரி தனது பெரும்பலத்தை பிரயோகித்தான். உடனே எதிரி உடைத்த இப்பகுதியைக் கைப்பற்ற சுகியுடனான அணிகளம் இறங்கியது. கிட்டு பீரங்கிப்படையின் சூட்டாதரவுடன் இவ்வணிகள் 25ஆம் திகதி அன்றே பின்னேரப் பொழுதளவில் இவ்வுடைப்புப் பாதையை மீளக் கைப்பற்றின. மீளவும் எதிரி இரவு 10.30 மணியளவில் எமது முன்னணி நிலைகளில் உடைப்பை ஏற்படுத்தினான். இப்பொழுது எதிரிக்கு வலது புறமும் எமதணிகள், இடது புறமும் எமதணிகள். இரவு நிலைமை இவ்வாறிருக்க 26ஆம் திகதி காலை இவ்வணிகளுக்கு உதவியணியாக சிறப்புப் படையணி இறங்கியது. பெரும் சண்டையின் பின்னர் எதிரியை முறியடித்து பகல் அளவில் அப்பாதையை மீளவும் கைப்பற்றின எமதணிகள்.

கண்டற் கரைப்பகுதியை பொறுத்தளவில் கைப்பற்றிய இடத்தை தக்கவைப்பதற்கு படையினருக்கு இப்பாதை மிகவும் முக்கியம். எனவே மீளவும் உடைப்பை மேற்கொண்டது எதிரிப்படை. திரும்பவும் எமதணிகளின் மூர்க்கமான சண்டை ஒன்றில் அதை மீட்டெடுத்தது. இப்படி 14 தடவைகளுக்கு மேல் எதிரியின் உடைப்பும், எமதணிகளின்மீளக்கைப்பற்றலுமென மாறிமாறி அப்பகுதியில் கடும் சமர் தொடர்ந்தது. எதிரிக்கு பெரிய அளவில் இழப்புக்கள் ஏற்பட்ட பொழுதிலும், அவன் அதைத்தக்க வைப்பதில் முழுமுனைப்பாக நின்றான்.எதிரிக்கிருந்த விநியோகப்பாதை இது ஒன்றுதான். விநியோகப்பாதை அகலமாக இருந்தால்தான் சீரான விநியோகத்தை மேற்கொள்ளலாம். பாதை ஒடுங்கினால் விநியோகம் அச்சுறுத்தலாகி அது புலிகள் அணிகளுக்குச் சாதகமாக மாறிவிடும். இதனால் எதிரிக்கு இழப்பும்கூடும்,விநியோகமும் சீர்குலையும், எனவேதான் எதிரியும் முனைப்பாக நின்றான். எமதணிகளும் முனைப்பாக நின்றனர்.



27ஆம் திகதி மேலதிக விசேட படையணிகளை ஒழுங்குபடுத்தி எதிரிமீளவும் அப்பகுதியில்உடைப்பை மேற்கொள்ளாதவாறு உறுதியாக நிலைப்படுத்தி, எதிரி நிலையிருந்த கண்டற்கரையை நோக்கி தீர்க்கமான சண்டையொன்றைத் தொடுத்தவாறு முன்னேறின எமதணிகள். இரவுப் பொழுதாகி விட்டது. புலிகள் தொடுத்த சண்டை மிகக் கடுமையாக இருந்தது. பெரும் இழப்பைக்கொடுத்தும், தக்கவைக்க முடியாமல்போக எதிரிப்படை புலிகளின் மூர்க்கத்தனமான முறியடிப்புத் தாக்குதலுக்கு முகங்கொடுக்க முடியாமல் கொண்டுவந்த டாங்கிகள், கவசவாகனங்களுடன் (எமதணிகளினால் சேதமாக்கப்பட்டது உட்பட),காயப்பட்டவர்களையும், இறந்த உடல்களையும் இரவோடிரவாக இழுத்தபடி வேகமாகப் பின்வாங்கின. 28ஆம் திகதி அதிகாலை 5.30 மணிக்குள் எதிரிப்படை முழுமையாகப் பின்வாங்கி விட்டதோடு, எதிரி மூட்டிய அக்கினிச்சுவாலை பலகுழல் பீரங்கிகள், ஆட்லறிகள், புதிய டாங்கிகள், கிபிர், மிக்-27 போன்ற நவீன தாக்குதல் விமானங்கள், புதிய இராணுவப் பயிற்சிகள், தாக்குதல் உத்திகள் என்று எல்லாவித அவிசு

**பிரபாகரனின் போர வியூக**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களையும் கொட்டியபோதும் புலிகளின் யாக குண்டலத்தில் எரியமுடியாது அணைந்து போயிற்று.

இவ்வாறு 72 மணித்தியாலத் தொடர் சண்டை முடிவுக்கு வந்தபோது, எதிரிதரப்பில் 425பேர் இறந்தும், 2000ற்கு மேல் காயப்பட்டும் இருந்தனர். உத்தியோகப் பற்றற்ற எதிரி தரப்பை ஆதாரம் காட்டி கொழும்புச் செய்திகள் படைத்தரப்பின் 500 பேர் அளவில் நிரந்தர அங்கவீனர்கள் என கூறியது. அங்கவீனங்கள் புலிகளின் மிதிவெடிகளாலும், செல்களாலும் ஏற்பட்டவையென படைத் தலைமைப்பீடம் வெளிப்படையாக ஒத்துக் கொண்டது. இதில் என்ன வேடிக்கை என்றால் தலைவரின் போர்த் தந்திரோபாயப்படி கள முனைகளில் அமைக்கப்பட்ட புதிய வியூகத்திற்கான மிதிவெடிகள் எல்லாம் எதிரி எம் மண்ணில் புதைத்தவை என்பதுதான். எதிரி ஆனையிறவைப் பாதுகாக்க வினையை விதைத்தவன் ஆனையிறவுக்கான சமரில் அறுவடையைப் பெற்றுக்கொண்டான்.

எமது பகுதிகளில் எடுக்கப்பட்ட எதிரியின் 120 உடல்களில் நல்ல நிலையில் இருந்த 93 இராணுவத்தினரின் உடல்களை ஐ.சி.ஆர்.சி. படைத்தரப்பிடம் ஒப்படைப்பதற்காக பெற்றுக் கொண்டது. மிகுதி பூரண இராணுவ மரியாதையுடன் புலிகளால் தகனம் செய்யப்பட்டது. இறுதியில், அக்கினிச்சுவாலை நடவடிக்கை தோல்விகளுக்கான காரணங்களை கண்டறியும் ஆய்வுகளுக்கான கருப்பொருளாகி அணைந்துபோயிற்று.

புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பு அவர்களின் இராணுவ ரீதியிலான பலவீனம் என்று அரசு திட்டவட்டமாக நம்பியதால் ஆனையிறவைக் கைப்பற்றும் அபத்தமான அவாவில் அரசு யுத்தநிறுத்தத்தை மறுதலித்தது. சுமுகமாக உருவாகிய ஒரு அமைதிச்சூழலை சிதைத்துவிட ஆர்வம் காட்டியது. நான்கு மாதத்தில் தயார்ப்படுத்தப்பட்ட தனது இராணுவ பலத்தில் நம்பிக்கை கொண்டதால் திமிர்த்தனமான அறிக்கைகளை விடுத்தது. இறுதியில் புலிகள் உருவாக்கிய அமைதிச் சூழலை சுட்டெரித்து வெற்றி உறுதி என்ற மமதையில் அக்கினிச்சுவாலையைத் தொடங்கியது. இப்பொழுது சொல்லுங்கள், புலிகள் மீண்டும் நிரூபித்த தமது இராணுவ பலத்தில் அடங்கிப்போனது வெறும் அக்கினிச் சுவாலைமட்டுமா!!



மருதம்

## த்தில் அக்கினிச் சுவாலையும் எரிந்து போனது

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 25 வெள்ளிவிழாக் காணும் தமிழ்ப்பணி



திட்டமிட்ட பொய்ப் பரப்புரைகளின் ஊடாக ஈழத் தமிழர்களது போராட்டத்தையும் அதன் வலிமையையும் குன்றிவிடச் செய்யமுனையும் சிறீலங்கா அரசினதும் அதன் ஆதரவு ஊடகங்களுக்கு மத்தியில் பிலிப்பைன்ஸின் மனிலா நகரில் இருந்து கொண்டு உலகெல்லாம் ஈழத்தமிழர் போராட்டத்தையும், அதன் நியாயப்பாட்டையும் எடுத்துரைத்துவரும் வெரித்தாஸ் தமிழ்ப்பணியின் வெள்ளிவிழாவை முன்னிட்டு தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் வாழ்த்துச்செய்தியொன்றினை வெளியிட்டுள்ளார். உலகெல்லாம் பரந்துவாழும் ஈழத்தமிழர்களுக்கு தாயகத்துடனான உறவுப்பாலமமைத்து அவர்களுக்கு ஓர் நம்பிக்கை ஒளிக்கீற்றாகத் திகழும் வெரித்தாஸ் தமிழ்ப்பணியின் சேவையினைப் பாராட்டி, வன்னியின் முக்கிய பகுதிகளிலும், ஏனைய புலம்பெயர் நாடுகளிலும் அதன் வெள்ளிவிழா நிகழ்வுகள் மிகச் சிறப்பாக நடாத்தப்பட்டன. வன்னியில் நடைபெற்ற நிகழ்வுகளில் சு.ப. தமிழ்ச்செல்வன் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் உரையாற்றியும், பல்வேறு கிராமங்களில் சிரமதான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டும் இவ்வெள்ளிவிழா நிகழ்வுகள் நடைபெற்றன. புலம்பெயர் நாடுகளில் ஜேர்மனியின் இரு நகரங்களிலும் மற்றும் பிறநாடுகளிலும் ஏற்பாடு செய்யப்பட்ட வெள்ளிவிழா நிகழ்வுகளில் அருட்திரு. ஜெகத் கஸ்பர் அடிகளாரை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றன. தமிழ் மக்களின் நெஞ்சமெலாம் உண்மையின் விம்பமாய்த் திகழும் வெரித்தாஸ் தமிழ்ப்பணியின் 25ஆம் ஆண்டு நிறைவில், அதன் சேவையினைப் பாராட்டுவதில் நாமும் மகிழ்வடைகிறோம்.



## வெள்ளிவிழாக் கொண்டாடும் தமிழ்ப் பணிக்கு தமிழீழத் தேசியத் தலைவர் வாழ்த்து

சிங்கள அரசின் பொய்யான பரப்புரைகளுக்கு மத்தியிலும் உண்மைக்கும் நேர்மைக்கும் மதிப்பளித்து உள்ளதை உள்ளபடியே உரைக்கின்ற செய்தித் தர்மத்தைக் காத்துச் செயற்படும் தமிழ்ப்பணியின் சேவை போற்றுதற்குரியது என தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள், வெரித்தாஸ் தமிழ்ப்பணி வெள்ளிவிழாவுக்கு வழங்கியுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தமிழீழத் தேசியத் தலைவரவர்கள் வெரித்தாஸ் தமிழ்ப்பணிக்கு வழங்கியுள்ள வெள்ளி விழா வாழ்த்துச் செய்தி வருமாறு.

அரசியல் இலாபத்தையும் வர்த்தக நலனையும் பிரதான இலக்காகக் கொண்டே இன்றைய உலகில் செய்தி ஊடகத்துறை செயற்பட்டு வருகின்றது. இவை மக்களின் சேவையை மையமாகக் கொண்டவையல்ல. மக்களின் தேவைகளைப் பெருக்கி நுகர்வுக்கு ஊக்கமளித்து வர்த்தகத்தை விரிவாக்கம் செய்வதை நோக்கமாகக் கொண்டவை. மக்களின் கருத்துக்களைக் கட்டுப்படுத்தி அவர்களது சிந்தனையை மழுங்கடித்து அவர்களது மன உலகை மறைத்து விடுகின்றன. தாம் விரும்பும் திசையில், அந்த நாசகாரப் பாதையில் மக்களை வழிநடத்திச் செல்வது தான் இன்றைய செய்தி ஊடகங்களின் முக்கிய குறிக்கோளாக இருக்கின்றது. இப்படியான விபரீத உலகில் அரசியல் வர்த்தக அபிலாசைகளுக்கு அப்பால் நின்று நடுநிலைமை, நேர்மை, பக்கச்சார்பின்மை ஆகிய அபூர்வப்பண்புகளை மதித்து, அடக்கி ஒடுக்கப்படும் மக்களின் விடிவிற்காக ஒரு ஊடகத் துறை செயற்பட்டு வருவது பாராட்டத்தக்கது. அந்த வானொலிதான் வெரித்தாஸ் தமிழ்ப்பணி.

சிங்கள அரசின் பொய்யான பரப்புரைகளுக்கு மத்தியிலும், உண்மைக்கும் நேர்மைக்கும் மதிப்பளித்து உள்ளதை உள்ளபடி உரைக்கின்ற செய்தித் தர்மத்தைக் காத்துச் செயற்படும் தமிழ்ப்பணியின் சேவை போற்றுதற்குரியது.

தேசப்பற்றும் இனப்பற்றும் உறுத்த கடல் கடந்து அன்னிய தேசங்களில் வாழும் எமது மக்களுக்கும், தினமும் சாவோடு போராடி வாழும் தமிழீழ மக்களுக்கும் எமது தேசத்தின் உண்மை நிலையையும் யதார்த்த சூழலையும் உடனுக்குடன் வெரித்தாஸ் வானொலி அறிவித்து வருகின்றது, அத்தோடு போரினால் உறவுகளைப் பிரிந்து தொடர்புகளை இழந்து தாயகத்துடன் வேரறுந்த மக்களாக சிதறுண்டு வாழும் எம் மக்களுக்கு ஒரு உறவுப்பாலமாக நிற்கிறது வெரித்தாஸ் வானொலி. இம் மனிதப் பணியானது இவ்வுலகில் தாம் தனித்து நிற்கவில்லை என்ற உணர்வை எம்மக்களுக்கு ஏற்படுத்தி நிற்கின்றது. அத்தோடு ஒரு அபாரமான தெம்பையும் திடத்தையும் எம் மக்களுக்குக் கொடுக்கின்றது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### வெள்ளிவிழாக்காணும் வெரித்தாஸ் தமிழ்ப்பணி
### பல்லாண்டு வாழ்க

உண்மையின் குரலாய் ஓங்கி ஒலிக்கும் வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ப்பணியை அதன் தொடக்க காலத்திலிருந்து ஆர்வத்தோடு கேட்டுவருகின்றேன். அது நல்ல அறிவாளரும் அருளாளருமாகிய சான்றோரால் இயக்கப்படுவதால் எந்நாளும் வளர்ச்சியேயன்றி, ஒருநாளும் தளர்ச்சி கண்டதில்லை. உலக வானொலிகளின் எந்தத் தமிழ்ப்பணிக்கும் சற்றுந்தாழாத இடத்தில் நிற்கின்றது. வெரித்தாஸ் தமிழ்ப்பணி என்பதை உறுதியாகச் சொல்லுவேன்.

வெரித்தாஸ் தமிழ்ப்பணியைக் கேட்டுவந்தேன் என்பதைவிட, அதன் மூலம் கற்று வந்தேன் என்பதே மிகச் சரியானதாகும். அரசியல், பொருளாதாரம், குமுகாயம், தமிழ்மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, நல்வாழ்வு, அறிவியல், ஆன்மியம், விடுதலை, பெண்ணியம் முதலான பலதுறைகளிலும் ஆராய்ந்தமைத்த நிகழ்ச்சிகள், நாடகங்கள், உரைகள், செவ்விகள் மூலம் தமிழ்கூறும் நல்லுலகம் சிறந்த அறிவைப்பெற வெரித்தாஸ் தமிழ்ப்பணி ஆற்றிவரும் தொண்டு அளப்பரியது.

வெரித்தாஸ் தமிழ்ப்பணி உண்மையை உள்ளறையில் பூட்டிவைத்துவிட்டுப் பொய்மைக்குச் சீலைகட்டிப் புறம்போக விட்டதில்லை. அரசுகளுக்கு, அதிகாரத்துக்கு அஞ்சியும் பணம், பட்டம், பதவிகளுக்குப் பணிந்தும் வாய்மூடிக்கிடந்ததில்லை. குற்றம், குறைகள், எங்கிருந்தாலும் குத்திக்காட்டத் தவறாத துணிவுடைமை தமிழ்ப்பணியின் தனியுடைமை என்றே சொல்லவேண்டும். உலகத்தில் எங்கெல்லாம் மக்கள் அடக்குமுறை, சுரண்டல், வறுமை, அறியாமைகளிற்பட்டு அல்லற்படுகின்றாரோ, அவற்றுக்கெதிராகப் போர்க்குரல் எழுப்பத்தவறியதில்லை. வானொலி வெறும்பொழுதுபோக்கு ஊடகமன்று, அது வாழத்துடிக்கும் ஏழைகளின் வழிகாட்டி, அறியாமையில் அழுந்திக்கிடப்போர்க்கு நல்லாசான். உலகம் செழிக்க உழைக்கும் பாட்டாளிக்கு உற்றதோழன் என்னும் உண்மையை வெரித்தாஸ் தமிழ்ப்பணி நிறுவிவந்திருக்கின்றது.

வெரித்தாஸ் தமிழ்ப்பணி தமிழீழ மக்களின் விடுதலையிலும், துயர் துடைப்பதிலும் காட்டிவரும் அக்கறையும், பங்களிப்பும் தமிழீழ மக்களால் என்றும் மறக்கமுடியாதவை. ஈழத்தமிழருக்கு ஒரு நம்பிக்கை ஒளியாகத் தமிழ்ப்பணி விளங்குகின்றது.

வெரித்தாஸ் தமிழ்ப்பணியின் இன்னோரன்ன சிறப்புகளுக்கெல்லாம். அதன் பொறுப்பாளராக விளங்கும் அருட்தந்தை ஜெகத் கஸ்பாரின் அறிவும், உண்மையும் அருளும், துணிவும், ஆளுமையுமே காரணம் என்பதை அறிவோம். அன்னாரையும், சாந்தோம் கலைத்தொடர்பு நிலையத்தாரையும், திருவாளர் அன்ரனி கிளிட்டசு, செல்வி பாத்திமா மற்றும் நிலையப்பணியாளரையும் மனங்கனிந்து வாழ்த்துகின்றோம்.

தமிழீழத்தில் வெரித்தாஸ் தமிழ்ப்பணி வெள்ளிவிழா உறவுச் சங்கமத்தை மாண்புற நிகழ்த்தி, தமிழீழ மக்களின் நன்றியறிதலை வெளிப்படுத்தும் அருட்திரு கருணாரத்தினம் அடிகளார்க்கும் அவருடன் இணைந்து விழாவை முன்னெடுக்கும் அருட் தந்தையாருக்கும் அன்பர் அனைவருக்கும் இனிய வாழ்த்துக்கள் உரியதாகுக.

அகவை இருபத்தைந்து முற்றிய தமிழ்ப்பணியே, உன்பணி இன்னும் பன்னூறாண்டு தொடர உவகை பொங்கும் உள்ளத்தால் வாழ்த்துகின்றேன். ஏற்றருள்க! வாழ்க தமிழ்! வெல்க வெரித்தாஸ் தமிழ்ப்பணி!

அன்பன்
வீ. பரந்தாமன்,
தென்புலோலி, புலோலி,
தமிழீழம்
24-06-2001.

---

எந்தச் சக்தியிடமும் அடிபணிந்து போகாமல் உண்மையின் பக்கமும், நீதியின் பக்கமும் நின்றவாறு அடக்கி ஒடுக்கப்படும் மக்களின் குரலாக வெரித்தாஸ் தமிழ்ப்பணி ஒலிக்க எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வெரித்தாஸ் வானொலியின் அபார வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் அயராது உழைத்துவரும் தமிழ்ப்பணிப் பொறுப்பாளர் அருட்திரு ஜெகத் கஸ்பார் அடிகளார், அவருக்கு உறுதுணையாகச் செயற்படும் தமிழ்ப்பணிக் கலைஞர்களுக்கும், தமிழ்ப்பணி சீரும் சிறப்பும் பெற அனைத்து வகையான உதவிகளையும், ஒத்தாசைகளையும் வழங்கி வரும் அதி வணக்கத்துக்குரிய பேராயர் ஆரோக்கிய சாமி அவர்களுக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

25ஆண்டுகளாக உலகத் தமிழர்களோடு உறவாடி நெஞ்சங்களோடு இணைந்துவிட்ட வெரித்தாஸ் தமிழ்ப்பணி தனது பணியைத் தொடர்ந்தும் சிறப்புற ஆற்ற வாழ்த்துவதோடு வெள்ளிவிழாக் காணும் தமிழ்ப்பணியின் மகிழ்வில் நானும் கலந்து கொள்கின்றேன்.

இவ்வாறு தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் வெரித்தாஸ் தமிழ்ப்பணியின் வெள்ளிவிழாவிற்கு வழங்கியுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

---

## இயக்குனர், வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ச்சேவை

வெள்ளிவிழாக்காணும்
வெரித்தாஸ் வானொலியே
அள்ளி வழங்கி வந்தாய்
அருமைத் தமிழமுதம்
எள்ளளவும் பிசகாது
உண்மைதனை உரைக்கின்றாய்
உள்ளங்கள் உயர்ச்சி பெற
உருவகங்கள் பலதந்தாய்.
துயருற்ற மக்களை உன்
குரல் மூலம் அரவணைத்தாய்
பயமின்றி அவர் கதையை
பாரெங்கும் பரப்புகின்றாய்
சாதி மத பேதம் விட்டு
நீதியை நீ எடுத்துரைத்தாய்
நாதியற்ற பேர்களுக்கு
நலம் தரவும் நீ துணிந்தாய்.
தமிழனது உயர்வு தாழ்வு
அனைத்தையுமே நீ உரைத்திட்டாய்
தமிழீழ மக்களுக்காய்
தரணியெங்கும் பிச்சை புக்காய்
தமிழீழச் சந்ததியின்
பசி போக்கிக்காக்கின்றாய்
தமிழ் மக்கள் மனங்களிலே
அழியாத தடம் பதித்தாய்
மனிதத்தை உணர்த்துகின்றாய்
மாண்புடனே வாழியவே
புனிதமாய் பணிசெய்வாய்
புகழ் பூத்து வாழியவே
தணியாத்தமிழ்த்தாகம்
கொண்டு உயர்ந்தாய் வாழியவே
பணியாது உண்மைக்காய்
பல காலம் வாழியவே

வைத்திய கலாநிதி,
க. சிவபாலன் MBBS, PHD.

---

## வெரித்தாசுக்கு வாழ்த்து!

வெள்ளிவிழாக்காணும் வெரித்தாஸ் தமிழ்ப்பணியை எரிமலை ஆசிரியர்குழு, வாசகர்கள் உட்பட அனைத்து தமிழீழ நெஞ்சங்களும் வாழ்த்துகின்றனர்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# மடுவுக்குப் போதல்

## பயணக்குறிப்புகள்

காலை
**8.00 மணி**

நட்டாங்கண்டல் காடு
காட்டுவாசம் நாசியுள் நிறைகையில்
மனம்
காட்டுக் கோழியாய்ப் பறக்கும்
பாதையினிரு மருங்கிலும்
ராங்கிகள் உழுத வயலாய்
இறந்த காடு

யாரும் நடாத மரங்கள்
யாரும் நீர்விடாத புல்வெளிகள்
யாருக்கும் திறைகொடாத காடு

ஒரு காலம்
கைலாயவன்னியனின்
கம்பீரம் கண்டு
கர்வமுற்றிருந்த காடு

பிறகொருநாள்
பண்டாரவன்னியனின்
யானைகள் பிளிறும்போது
புளகாங்கிதமுற்ற காடு
இன்று
யாரோ ஒரு சூனியக்காரியின்
கண்பட்டுக் கருகியது போல
சோகமாய் நின்றது.

**2**

**காலை 9.00 மணி**

வற்றிய பறங்கியாற்றின்
பாறைத் தொடரின் மீதிருக்கிறேன்
ஆற்றின் புராதன வளைவுகளிற்கப்பால்
எங்கேயோதான்
அந்த அரண்மனையிருக்கிறது
பண்டாரவன்னியன் கட்டியது
ஆறு துயிலும் இரவில்
அரசர்கள் காலாற நடக்கும்போது
சருகுகள் நொருங்குமரவம் கேட்பதாக
வேவு வீரர்கள் கூறுகிறார்கள்
பாதி புதைந்த அரண்மனையின்
சிதிலங்களினடியில்
மறைத்து வைக்கப்பட்டிருக்கும்
பண்டாரவன்னியனின் வாளை எடுக்க
யாரோ ஒரு வீரன் வருவானென்று
ஆறும் காடும் காத்திருப்பதாக
ஒரு வேட்டைப்பாடல் கூறுகிறது.

**3**

ஒரு கோடையிரவில்
சுடலைக்குருவி
மரணத்தை முன்னறிவித்து
பெருமூச்செறிந்த பிறகு
ராங்கிகள் உறுமியபடி
காட்டினுள் புகுந்தன

காடு பயந்து
வேட்டைத்தடங்களை மூடியது
வேட்டைக்காரர் அகதிகளாயினர்
குளங்கள் உடைப்பெடுத்து
வீணே ஆற்றில் போய் வீழ்ந்தன

ஆறு சினந்து
சிப்பியாற்றுக் கழிமுகத்தில்
போய்க் குதித்தது.

பிறகெலாம்
பண்டாரவன்னியன்
காலாற நடவாதேவிட்டான்
பறவைகள்
காடு மாறிப் போயின
கைவிடப்பட்ட சேனைப் புலங்களில்
கால்நடைகள் காடேறின
இடிந்த அரண்மனை மேட்டில்
வன்னியரின் வீரவாள்
துருவேறிக்கிடந்தது
வேவு வீரர்கள் மட்டும்
துயிலுமாற்றின்
மருதமர மறைவில்
துயிலா துலவினர்.

**4**

**பகல் 11.00 மணி**

யுத்த முன்னரங்காகிய காடு
எரிந்த காவலரண்கள்
வாய்பிளந்த
ஏவு தளங்கள்
நாயாற்றில்
அவர்களே கட்டி
அவர்களே தகர்த்த
பெரிய இரும்புப் பாலம்
ஏதோ ஒரு இடுகாட்டை நோக்கியெம்மை
மயக்கி அழைத்துச் செல்வனபோன்ற
விநியோக வழிகள்
அச்சத்திலிருந்து முற்றாக விடுபடாத
காடு
நெட்டுயிர்த்தது.

ராங்கிகள் போய்விட்டன
மழைக்குளிரில் சிலிர்த்து நின்ற





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மரங்களில் மோதியபடி
ராங்கிகள் ஓடித்தப்பின.

திறைகொடா அரசனின் வாள்
நிலவொளியில்
திசைகளை வென்று ஜொலித்தது
ஆறு
கனவு காணத் தொடங்கியது
காடு மகிழ்ந்து
வேட்டைத் தடங்களைப்
புதுப்பிக்கலானது.

**5**

**பகல் 12.00 மணி**

ராங்கிகள் புதைந்த காட்டின்
வேர்கள் இடறும்
வழி நெடுக
காடுகளின் சூரியன்
உருகி வழிகிறான்

மடுமாதா
மருதமர நிழலில்
காட்டின் ஒளியாய்
மிளிர்கிறாள்.

நிறைகொடாக் காட்டின்
மூர்த்தமவள்
ஆறு கண்ட கனவு அவள்
நிழலற்ற வழிகளில் வரும்
பயணிகளின் ஆறுதலுமவள்.

ராங்கிகள் அவளை உறுமிக்கடந்தன
பீரங்கிகள்
அவளது பிரகாரத்தில் வெடித்தன
குருதி சிந்தி
விழிகளில் தெறித்தது
நரிகள் ஊளையிட்டு
இரவுகளைப் பகைவரிடம் கையளித்தன

அவள் அசையவில்லை
ஒரு முதுமரம் போலே
அமைதியாயிருந்தாள்

வெற்றிக்கும் தோல்விக்கும்
இலையுதிர் காலத்திற்கும்
சாட்சியவள்
முற்றுகைகள் தோறும்
பிரகாசித்தாள்
மூன்று நூற்றாண்டுகளாய்
ஆறுகளின் தாகமாய்
அகதிகளின் அழுகையாய் பெருமூச்சாய்
காடுகளில்
காணாமல் போன எல்லா
வேட்டைக்காரரிற்கும் தாயாய்
காடுகளை மீட்டு வரும்
வீர வாளின் கூராய்
காடுகளின் கேந்திரத்தே
வீற்றிருக்கின்றாள்
நீச்சலனமாக.

பிற்குறிப்பு: வேட்டைப்பாடல்

வேட்டைக்காரர் வருகிறார்
புதிய வேட்டைப் பாடல்களோடு

காட்டுவாசத்தில் கிறங்கி
காட்டுப்புறாக்களின் கழுத்தசைவில்
மன மழிய
வேட்டைக்காரர் வருகிறார்
புதிய வேட்டைப்பாடல்களோடு


இனிக்குளங்கள் முறித்துப் பாயாது
ராங்கிகள் நெரித்து
நாயாறு
தாகமாயிராது
வேட்டைக்காரர் வருகிறார்
புதிய வேட்டைப்பாடல்களோடு

காடு மாறிய பறவைகளே
வீடு திரும்புங்கள்
அரசர்கள்
ஆற்றங்கரையில்
காலாற நடப்பாரினி
அரண்மனை மேட்டில்
யானைகள் பிளிறுமினி

வேட்டைக்காரர் வருகிறார்
புதிய வேட்டைப் பாடல்களோடு

மடுமாதாவின் பூர்வீகம் மாந்தை.
கோட்டைகள் கட்டிய ஒல்லாந்தர்
மன்னாரில் கத்தோலிக்கர்களை
வேட்டையாடிய நாளில் மாதா
மாந்தையிலிருந்து மடுக்காட்டுக்கு
தலைமறைவாக வந்தாள்.
தொடக்கமே தலைமறைவும்
இடம்பெயர்வும் என்றானது.
அன்றிலிருந்து அகதிகளுக்கும்
புகலிடந்தேடிகளுக்கும் மாதா
அபயமளிக்கலானாள். அவளமர்ந்த
காட்டில் பிறகெவரையும்
விசந்தீண்டவில்லை. வேறெங்காவது
விசந்தீண்டினாலும் அவளது காலடி மண்
மருந்தாயானது.
மூன்றாவது ஈழப்போர் அவளை
அநேகமாக அகதிகளின் மூர்த்தம்
என்றாக்கியது. குறிப்பாக மடுவையும்
அதன் காட்டுப்புறங்களையும்
சுற்றிவளைத்த ரணகோஷ (யுத்த கோஷ)
படை நடவடிக்கை அவளைத்
தேர்தல்கால யுத்த வியூகமொன்றில்
சிக்கவைத்தது.
சூதான சமாதானம் ராங்கிகள் பீரங்கிகள்
சகிதம் அவளைச் சூழ்ந்து கொண்டது.
ரணகோஷ அவளை அவளது சொந்தக்
காட்டிலேயே கைதிபோலாக்கியது.
பிறகு காடுகளை மீட்கக் கிராமங்கள்
எழுந்தன. மடுவுக்குப் போகும் வழிகளை
மறித்து நின்ற முட்கம்பியரண்களை
மோதியுடைத்துக்கொண்டு கிராமங்கள்
முன்னேறிய வேகங்கண்டு ராங்கிகள்
வெருண்டு ஓடின.
ராங்கிகள் பின்வாங்கிய இரவு மாதாவுக்கு
வியாகுல இரவாய் முடிந்தது.
பீரங்கிகள் அவளது காலடியில்
வெடித்தன. வெடிமருந்து நெடிகிளம்பி
அவளது மேனியெலாம் படிந்தது.
வியூகத்துட் சிக்கினாள் மாதா. புலம்பும்
அகதிகளின் நடுவே தனித்திருந்தாள்
ராமுழுதும்.
ஒல்லாந்தர் காலத்திற்குப் பின் அவள்
அதிகம் உத்தரித்த காலமாக ரணகோஷ
காலமும் அதன் பின் வந்த காலமும்
அமைந்தன.
ஆனால், அவள் முகம் வாடியதில்லை.
விழிகளில் புதிரான பேரமைதியோடு
பிறகும் பிறகுமவள் மரித்தோரின்
மத்தியிலிருந்து எழுந்தாள்.
எல்லாக்காயங்களும் எல்லாப் பாடுகளும்
எல்லாவியூகங்களும் அவளது
பெருமைகளை நிரூபிப்பதிற்தான்
முடிந்தன.
விசந்தீண்டாத காட்டின் மூலிகையாய்
அவளது வீற்றிருப்பை விசப்பாம்புகளோ
ராங்கிகளோ பீரங்கிகளோ எதுவும்
அசைப்பதில்லை.
காடுகளின் இதயத்தில் சுமார் மூன்று
நூற்றாண்டுகளாய் அவளது பிரசன்னம்
யாருக்கும் உறுத்தலாயிருந்ததில்லை.
அவளை அகதியாக்கித் துரத்திய
ஒல்லாந்தரிற்கும் அவளை சந்தேகித்த
ஆங்கிலேயருக்கும் அவளை வியூகத்துள்
வீழ்த்திய சிங்களவருக்கும் யாருக்கும்
அவள் உறுத்தலாயிருந்ததில்லை.

**நிலாந்தன்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நாகங்கள்

ஆவரங்கால் சுதன்

என்னுடைய வீடு பெரிய காணிக்குள் அமைந்திருக்கு.

நானும் அயல்வீட்டுப் பொடியளுமாய் பரந்த எங்கடை வளவுக்குள்ளை, ஒளிச்சுப்பிடிச்சு, பேணிப்பந்து, கிளிக்கோடு என எமது விருப்பப்படி ஏதாவதொரு விளையாட்டை விளையாடியபடியிருப்பம்.

ஒவ்வொரு மாலைப்பொழுதும், ஆட்டமும், பாட்டமும் கூத்தும் கலந்து இனிமையாகக் கழியும்...

என்னுடைய வளவுக்குள்ளை ஒரு மூலையில் சிறுபுத்து இருந்தது. அந்தப் புத்துக்குப் பக்கத்தாலையும், மேலாலையும் நாங்கள் ஓடியாடி விளையாடுவம்.

மஞ்சள் பாம்புகள் வளவுக்குள்ளாலை போகும். சிலவேளை பாம்புகள் அந்தப் புத்துக்குள்ளை புகுந்து கொஞ்ச நேரம் இருந்திட்டு வெளியேறிப்போயிடும்.

ஆரம்பத்திலை பாம்புகளைக் கண்ட உடன நெஞ்சுவெளி திக்கென இருள இதயம் படக்குப் படக்கென்று மோதும்....

பிறகு விஷமில்லாத சாரைகள் என்று அப்பா சொன்னதும் பயம் தெளிந்து நாங்கள் எங்கடைபாட்டிலையும் அவைகள் தன்பாட்டிலும் அலையும்.



நாட்கள் பனிக்கட்டிகளாய் கரையக் கரைய புத்து பெருத்துப் பெருத்து அகன்று விரிந்தது. எமது காணியும் சுருங்கிப்போச்சு. புத்துக்குக்கிட்ட நாங்கள் போனால்.... உள்ளுக்கையிருந்து உஸ்...உஸ் என்ற ஒலிகேட்டது. என்னுடலில் பயக்குளிர் காற்றுமோத உடம்பு நடுங்கியது.

அதுக்குள்ளை என்ன இருக்குதென்று எங்களுக்குத் தெரியாதுதான்.

அதுக்குப்பிறகு நாங்கள் புத்துப் பக்கம் போகாமல் இஞ்சாலை தள்ளி விளையாடியபடி வந்தம்.

அந்தப் புத்துக்குப் பக்கத்திலை ஒரு பெரிய புளியமரம் நிண்டது. அந்த மரம் எங்களுக்கு வருடா வருடம் நிறைய வருமானம் தரும். அதன் பழங்களை உலுப்பி உடைத்து விற்ற வருவாயில் தான் என்னுடைய படிப்புக்குத் தேவையான பொருட்களையும், உடுபுடவைகளையும் அப்பா வாங்கித் தருவார்.

ஒரு நாள் புளியம்பழம் பொறுக்கிச் சாப்பிடுவம் என நினைத்து புளியமரத்தடிக்குக் கிட்டப்போனம். புத்துக்குள்ளையிருந்து ஏதோ ச்ஸ்... உர்... ச்ஸ்.... உர்...ச்ஸ்... என சீறிக்கேட்டது.

சத்தம் செவிப்புலனில் நுழைந்ததும் எனது சரீரம் சில்லிட்டு விறைத்தது. ஓடிப்போய் அப்பாட்டைச் சொல்லி கூட்டிக்கொண்டு வந்து பார்த்தம். பல... ஓட்டைகளுக்குள் ஒன்றிலிருந்து பாம்பு தலையை நீட்டி நீட்டி எங்களை நோக்கியது.

தன் நாக்கை வெளித்தள்ளி, நீட்டி உள்ளிழுத்தது. அந்த நீள் நாக்கு மயிர் முளைக்காத என் நெஞ்சை நக்கி நக்கி இழுப்பது மாதிரியிருக்க அணிந்திருந்த காற்சட்டை நனைந்த மாதிரியிருந்தது.

அப்பா கூர்ந்து பார்த்திட்டு எடேய் உது நாகமடா...! வாடா... வா... வா.. இஞ்சாலை கெதியா வாங்கோ. சங்கு சக்கரமெல்லாம் தெரியுது. உந்தப் பாம்பு வாய்வச்சுதெண்டால் ஆள்தப்பாது என்றவாறே வியர்த்து.... விறுவிக்க எங்களையும் கூட்டிக்கொண்டு அப்பா வீட்டடிக்கு வந்திட்டார்.

'தம்பி நீ இனிமேல் அவடத்துக்கு விளையாடப் போகக்கூடாது. புத்துப்பக்கம் உன்னைக் கண்டனெண்டால் உரிச்சுப்போடுவன்' அப்பாவின் குரலில் களைப்பும், கண்டிப்பும் இளையோடியிருந்தது.

நாகங்களுக்குப் பயத்திலை... என்ரை வீட்டிற்கு விளையாடவராமல் எல்லாப் பொடியளும் நின்றிட்டாங்கள். அதோட எங்கடை விளையாட்டுக்களும் நின்று போச்சுது. ஒரு சோகக்கொடி என் மனசில் படரத் தொடங்கியது.

புளியமரத்தினுடைய வருமானமும் இல்லாமல் போய்விட்டது. அதால படிப்புச் செலவுக்கும் காசில்லாமல் கஸ்ரப்படவேண்டியிருந்தது.

எவ்வளவு மகிழ்ச்சியாய் விளையாடினனாங்கள். அதுவும் எமது வளவுக்குள்ளை சிட்டுக்குருவிகளைப் போல இந்த மன உளைச்சலில் புரண்டு... மனம் குமைய...! எரியும் எண்ணெய்த் தாச்சிக்குள் வீழ்ந்த பூச்சியாய் என் மகிழ்ச்சி கருகிப்போனது.

துயரம் இதயத்தில் ஊற ஊற சில வேளைகளில் விழிக்குள்ளிருந்து வெளியேறிய கண்ணீர்த்துளிகள் கன்ன வரம்புகளில் விரைவாய் நடந்து கழுத்துவழி இறங்கும்.

ஒரு நாள் நான் படிச்சுக்கொண்டிருக்க எனக்குப் பக்கத்திலை வந்தமர்ந்த அப்பா. தம்பி நீ இனிமேல் பகலில மட்டுமல்ல இரவில்கூட ஒண்டுக்கிருக்க, அதுக்கிதுக்கெண்டு வெளியில போகாத. ஏனெண்டால் உந்தப்புத்துக்க எத்தின நாகங்கள் இருக்குதெண்டு ஆருக்குத் தெரியும்?

அதுகள் இரவிலதான் கண்டபடி இரைமேய வருங்கள். அப்பேக்க உன்ர காலடிக்குள்ள அதுகளும் வந்தால் கொத்தியெல்லே போடும். அதால சரியான அவதானமாக நாங்கள்தான் இருக்கோணும் என்று புத்திமதிகள் கூறினார்.

பிறகு அம்மாவைப்பார்த்து பெருமூச்சொன்றை உள்ளிழுத்து வெளியேவிட்டபோது அந்த மூச்சு என் சொக்கயைச் சுட்டது.

இஞ்சரப்பா உவள் பிள்ளை ஆகக்கவனம். அவள் சின்னப்பிள்ளை. பகலில உதுக்கிளால...



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதுக்கிளாலயெண்டு துள்ளித்திரிஞ்சு விளையாடுவள். இனிமேல் அவளையும் வளவுக்குள்ளை கண்டபடி விளையாட விடாதையப்பா. கண்காணிப்பில வைச்சிருக்கோணும்.

பனிக்குளிரிலை உறைஞ்சுபோற தேங்காய் எண்ணெய் மாதிரி அப்பாவினுடைய கதையைக்கேட்ட அம்மாவும் உறைஞ்சுபோய் நின்றா ஆடாமல் அசையாமல்.

பிறகும் அப்பாதான் தொடர்ந்து கொண்டுபோனார்.

இரவில நாங்கள் நித்திரை கொள்ளேக்குள்ளையும் பயம் தானப்பா. ஏனெண்டால் புத்து புடைத்துப்போய் இருக்கிறதால உதுக்க கனக்கப் பாம்புகள் இருக்குமெண்டு நினைக்கிறன்.

அந்த நாகங்கள் இரைமேய்ந்து மேய்ந்து உலாவி வருகிறபோது...? கதவு இடுக்குகள் பொட்டுகளுக்குள்ளாலையும், சுவர் வழியே ஏறியும் வீட்டுக்க வந்தும் கொத்திப்போடும். அதுகளுக்கு என்ன தடையப்பா இருக்குது? நாங்கள்தான் மிகக் கவனமாய் இருக்கோணும்.

அப்பா இப்படிச் சொல்லச்சொல்ல வறுக்க வறுக்க செத்தல் மிளகாய் கருகி கறுப்பாகுவதைப்போல.... அம்மாவினுடைய சிகப்பு முகமும் கறுத்துக்கொண்டு போனது.

'ம்...ம்... நீங்கள் நெடுக கதைக்கிறதோட மட்டும் நிண்டுவிடுவியள். இப்பிடியே உந்தப்புத்தை விட்டிட்டு இருந்தா எத்தின நாட்களுக்கு இரவிலயும்.... பகலிலயும் நிம்மதி இல்லாமல் பயந்து பயந்து உயிரைக் கையில பிடிச்சுக்கொண்டு வாழுறது?

உந்த அயல் சனங்களையும் சேர்த்து புத்தை வெட்டிப் பிரித்துவிடுங்கோவனப்பா. நீங்கள் ஒரு முயற்சியும் இல்லாமல் வீட்டுக்க முடங்கிக் கிடந்தால் ஆர் வெட்டுறது?

எங்கட வீட்டு வேலையை நாங்கதான் செய்யவேணும்.

'பயந்தவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய் என்ற நிலைதான் உங்களின்ர வேலை'

அடுப்புத் தணலுக்கை போட்ட உப்பு மாதிரி அம்மா வெடிச்சுத் தள்ளினா. அதனால் அம்மான்ர நெஞ்சு மட்டும் மேலும் கீழும் போய் வந்தது.

'நீ என்னடியப்பா விசர்க்கதை கதைக்கிறாய். நாகங்கள் வாழுற குகையை வெட்டியெறியிறது சாதாரண விளையாட்டே. அல்லாட்டி அந்த நாகங்கள்தான் சும்மா விட்டிடும் எண்டு நினைக்கிறியோ?.

பேசாமல் இரடியப்பா. உன்ரபாட்டில் உனக்கேன் தேவையில்லாத வேலை. உனக்கெண்டு இருக்கிற வேலையைச் செய்யடியப்பா நீ.'

அப்பா சரியான பயந்தவர். அம்மாவை ஏசி அடக்கிப் போட்டார். எல்லோரும் அவரவர் படுக்கைக்குப் போட்டினம். ஆனால், அன்றைய இரவு எனக்கு மட்டும் பகல் மாதிரியே இருந்தது. நித்திரை வரயில்லை.

என்னுடைய மகிழ்ச்சி இனிமைகள் எல்லாம் உதிர்ந்த சருகுகளாய் காற்றில் பறந்து எங்கோ காணாமல் போய்விட்டிருந்தன. துக்கம் பலூனாய் பெருத்து தொண்டையை அடைத்துக்கொண்டது.

கல்வியைத் தொடர இடர்ப்படுவது. நண்பர்களுடன் சுகந்தமாய் கழிந்த மாலைப் பொழுதுகள், அவங்கள் பயத்திலை வீட்டுக்கு வராமல் நின்றது என இப்படியே நினைவுகள் ஒவ்வொன்றாக எனக்குள் வேர்ப் பரப்பில் இதயத்தைப் பிரிக்கத் தொடங்கியது.

முழு மனிதர்களுமே வாழ்க்கையை ஓட்டிச் செல்வதற்கு, சேமிப்பதற்கு, பிற இன்னோரன்ன தேவைகளுக்காகவும் என எல்லோருமே ஏதோவொரு வகையில் வியர்க்க வியர்க்க இளைத்து பகலில்தான் உழைக்கிறார்கள். அதற்காக கஸ்ரப்படுகிறார்கள்.

சண்டைகள், சச்சரவுகள், வாக்குவாதங்கள், முரண்பாடுகளென என்ன நடந்தாலும், அவைகள் பெரும்பாலும் பகலில்தானே நடக்கின்றன. ஆனால் இந்த இரவுகள் தான் ஒரு மனிதன் எல்லாம் மறந்து சிந்தித்து, அலசி ஆராய்ந்து நல்ல முடிவுகள் எடுப்பதற்கும், மாடாய் உழைத்தவன் நிம்மதியாய் உறங்குவதற்கும் காரணமாய் இருக்கின்றன.

அந்த இரவுகளே நிம்மதியில்லாதபோது...? இரவுகள் எதற்கு?

எனக்கும் அதுமாதிரித்தானே. நாகங்கள் எப்போது வீட்டிற்குள் வரும்? கொத்தும்? என நினைத்தபடியே ஒவ்வொரு இரவுகளும் கழியப்போகின்றன பயத்தில்.

இரவிரவாகவே சதாசிந்தித்துக் கொண்டே கிடந்து உழன்ற நான் விடிவதற்குள் தீர்க்கமானதொரு முடிவுக்கு வந்தேன்.

அதாவது விடிந்ததும்.... விடியாததுமாக என்னோடு படிக்கிற பொடியளை அழைத்துவந்து புத்தை வெட்டி அதற்குள் இருக்கிற நாகங்களை அடித்துக்கொல்வதென்று.

புத்துவெட்டி, மண்வெட்டி... பிக்கான், பொல்லுகளோடை பொடியள் வந்தாங்கள்.

அப்பாவும் ஒரு மண்வெட்டியோட...! அம்மாவும் தடியோட நின்றது எனக்கு மகிழ்ச்சியாய் இருந்தது.

# பொய் முகங்கள்

பூபாளம் இசைக்கின்ற புலர் காலைப்
பொழுதோடு எங்கள் வாசலெங்கும்
ஏராளம் புது முகங்கள்... யாரங்கே!
எம் வீதியெங்கணும் விழாக்கோலம்
பூணட்டும் மஞ்சள் தெளித்து...
மாவிலை தூக்கி... தென்னங்
குருத்தெடுத்து (த்) 'தோரணம்'
பின்னுக! ஒவ்வோர் வீட்டினுள்ளும்
ஊதுபத்தி மணக்கட்டும் பன்னீர்
தெளித்து (ப்) பரவசப் படுத்துக!
உரத்துப் பறைமுழங்கும் ஒப்பாரி
நிறுத்தி (ப்) போன ஆண்டின்
புலம்பல்கள் நீக்குக! இந்தப்
புத்தாண்டின் இடர் களைந்தெடுக்க
எங்கள் வாசலெங்கும் ஏராளம் புது
முகங்கள்... என்னென்ன தேவை?
ஏதேது தேவையில்லை?
விண்ணப்பங்கள் இனி
வெளியிடப் படலாம் பீடிகை
வேண்டாம். பிணக்குகள் வேண்டாம்
'பிரித்தோதும்' புத்திஜீவிகள் – இனி
பிரித்து... ஒத மாட்டார்கள் 'மகஜர்'
கலாச்சாரம் மாற்றப் படும்
மனுத்தாக்கல் செய்யின்
ஏற்கப்படும். என்னென்ன தேவை?
ஏதேது தேவையில்லை? சென்ற
நூற்றாண்டின் செம்மணிகள் மறக்க...
வண்ணக் கனவுகள்
வாடகைக்கு விடப்படும்.
பின்னர்... வசதிகள் வரும்...
வாகனம் வரும்.... மின்சாரம்....
மினுக்குப் பெட்டி.... ரெயில்....
ரெலிபோன்.... ஏ...சி.... என்ன
வா...ழ்...க்....கை
வரலாம்.... வருமெண்டு மட்டும்
வாக்குறுதி தர இயலாது (து)
முன்னுக்குப்.... பின் முரணாய்....
முழங்கித் தள்ளுதல் அரசியலுக்கு....
அழகில்லைப் பாருங்கோ'
'மானம் துறந்தேற்றி மாயைசெய்
அரசி (ல்)
மகிழ்வாங்கு மக்கள் வாழல்
மகாயீனம்'
தங்க முலாம் பூசி (த்)
தரமென்ற பொய் முகங்கள்....
காலப் பெரு நதியில்
கரைந்தே உள!


த. இளந்தளிர்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிசிலியின் ஆழக்கடலில் தோண்டப்படுபவை தமிழர்களின் எலும்புகள் மட்டுமல்ல, பல உண்மைகளும் தான்'





## 'அம்பலமாகும் ஐந்துவருட மர்மம்'

## துயரப் பயணத்தின் ஜல சமாதி சிசிலி

PORTO PALO இன்று அனைவரது கவனத்தையும் ஈர்த்துவிட்ட ஒரு பெயராகி விட்டது.

புலம்பெயர் மக்களினால் மட்டுமன்றி இன்று முழு உலகாலுமே PORTO PALO எனும் சிறியகிராமம் அறியப்படக் காரணமாய் அமைந்தது, ஈழத்தமிழ் இளைஞர் ஒருவரது மஞ்சள் வர்ண அடையாள அட்டை என்றால், கேட்பவர்களுக்கு இது ஆச்சரியாமானதொன்றே! இதையும் தாண்டி மிகப்பெரும் வியப்பைத் தருவது யாதெனில் இதுவரை ஐயத்துக்கிடமாக இருந்து வந்த 282 பேரது மரணம் தொடர்பான மர்மத்துக்கும் முற்றுப்புள்ளி வைத்திருப்பது இந்த அடையாள அட்டை என்பதே. யாழ். கொடிகாமம் கச்சாய் எனும் முகவரியைச் சேர்ந்த கணேசு அன்பழகன் என்பவரது அடையாள அட்டை, யூன் மாதத்தின் முதல் வாரத்தில் இத்தாலிய கிராமத்து மீனவர் ஒருவரின் வலையில் சிக்கி கரையேறியதாலேயே, கடந்த 5 வருடங்களுக்கு முன் பரிதாபகரமாக கடலில் மூழ்கி இறந்து போன 282 பேரது மரணம் தொடர்பான உண்மையும் கரையேறியிருக்கிறது.


இந்தச் சிறிய தடயத்தை வைத்துக் கொண்டு வேகமான தகவல் ஆய்வொன்றைச் செய்த LA REPUBBLICA எனும் இத்தாலியப் பத்திரிகையின் பத்திரிகையாளர் GIOVANNI MARIA BELLU என்பவரது அயராத முயற்சியினால், யூன் மாதம் 2ஆம் வாரத்தின் இறுதியில் மூழ்கிய மீன்பிடிப்படகையும், அதனுள்ளும், அதனை அண்டிய பகுதியிலும் கும்பலாகவும், தெட்டந்தெட்டமாகவும் உப்பிச் சிதைந்து போயிருந்த நூற்றுக்கணக்கான ஆசிய நாட்டவர்களது சடலங்களும் எலும்புக்கூடுகளும் பிற பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டன.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






ஆசியாவின் பல்வேறு நாடுகளில் இருந்தும், குறிப்பாக ஈழத்தையும் சிறிலங்காவையும் சேர்ந்த 232 தமிழ் சிங்கள இளைஞர்கள் உட்பட இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஸ் என மொத்தம் 282 பேர் 1996 டிசம்பர் 26 அதிகாலை, அதாவது நத்தார் பண்டிகையின் நள்ளிரவிற்குப் பின், இத்தாலியின் ஓர் மூலையில் PORTO PALO கிராமத்திலிருந்து 19 கி.மீ. தொலைவுக் கடலில் கூக்குரலிட்டபடியே சங்கமித்துப் போன துயர்படிந்த வரலாற்று நிகழ்வு, 5 வருடங்களுக்குப்பின் இன்று மீண்டும் தெளிவானதோர் மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது. காரணம் இந்த 5 வருட காலப்பகுதியில், வெளியே சொல்ல அஞ்சி மறைக்கப்பட்டு வந்த பல உண்மைகள் இப்போதுதான் வெளிவரத் தொடங்கியுள்ளன.

வெளிநாட்டுக் கனவுகளை இதயங்களில் சுமந்தபடி மாதக்கணக்கில் பயணஞ் செய்த பல நூற்றுக்கணக்கான ஆசிய நாட்டவர்கள் பல்வேறு நாடுகள், பாதைகளினூடாகப் பயணஞ்செய்து, இறுதியில் இத்தாலியில் ஓர் முகவரிடம் ஒன்று சேர்ந்ததும், அவர் மூலமாக JOHAN எனும் கப்பலில் அவர்கள் ஏற்றப்பட்டு நடுக்கடலில் வைத்து, அதாவது VALLETTA விற்கும் PORTO POLOவிற்கும் இடையில் SICILIA கடற்பரப்பில் வைத்து FERRY BOAT F-74 எனும் சிறிய மீன்பிடிப்படகொன்றில் துப்பாக்கி முனையில் 315இற்கும் மேற்பட்டவர்கள் ஏற்றப்பட்டதனால் பாரந்தாங்காததினாலும், கடற்கொந்தழிப்பு, கடுங்காற்று என்பவற்றின் காரணமாகவும் கடலில் மூழ்கத் தொடங்கிய படகு உதவிக்காகத் திரும்பிய JOHAN கப்பலுடன் மோதி முற்றாக கடலில் மூழ்கியதையும் கட்டங்கட்டமாகப் படங்கள் காட்டுகின்றன. கடலில் மூழ்கியோரில் 29 பேர் மட்டுமே தப்பிப் பிழைத்தனர். ஏனைய 282 பேர்வரை படகினுள் சிக்கிக் கொண்டதனாலும், கடல் நீரின் கடுங்குளிரினாலும் விறைத்தும் மாண்டு போயினர். குறிப்பிட்ட முகவரும் சிங்கப்பூருக்குத் தப்பி ஓடிவிட்டார். இவையெல்லாம் ஏற்கனவே அனைவரும் அறிந்ததே. எனவே, நாம் இதை விடுத்து தற்போது வெளிவந்திருக்கின்ற புதிய தகவல்கள் என்ன என்பதனைப் பார்ப்போம்.

GIOVANNI MARIA BELLU அவர்கள், மீன்பிடிவலையில் கண்டெடுத்த கணேசு அன்பழகன் என்பவரது அடையாள அட்டையினைக் கொண்டு, 5 வருடங்களாக மந்த நிலையில் இருந்த, அப்படி எதுவுமே நடக்கவில்லை, அப்படியே நடந்திருந்தாலும்கூட அது சிறிய விபத்தாகவே இருக்கலாம் எனக் கருதப்பட்டு இத்தாலியப் பொலிசாரால் கைவிடப்பட்ட இந்த விடயத்தை இரண்டே வாரங்களில் கண்டுபிடித்தது மட்டுமன்றி பல திடுக்கிடும் தகவல்களையும் வெளிக்கொணர்ந்திருக்கின்றார். இதற்காக இவர் ஏராளமானோரை சந்தித்துத் தகவல்கள் திரட்டியுள்ளார். அந்தத் தகவல்களோ திகில் திரைப்படக் காட்சிகளைப் போல் அமைந்து வாய் பிளக்க வைக்கின்றன. LA REPUBBLICA பத்திரிகையில் ஆழக்கடலில் ஓர் சுடலையென பக்கம் பக்கமாக இதுபற்றி அவர் எழுதி வருகிறார்.

வலைக் குவியலுக்குள் மீன்களோடு கறுப்புநிற 25-30 வயது மதிக்கத்தக்க மனிதன் ஒருவரின் சடலத்தைக் கண்டேன். அதன் கைவிரலில் சிவப்புக் கல்பதித்த மோதிரம் ஒன்று காணப்பட்டது. எனக்குள் பலவித எண்ண ஓட்டங்கள் நிகழ்ந்து கொண்டிருக்க, என்னுடன் நின்றவர்களோ படகின் முன்புறத்துக்கு ஓடிவிட்டார்கள். முன்பு ஒருமுறை இன்னொரு மீனவரது வலையில் சிக்கிய உடலை கரைக்குக் கொண்டு சென்றதால், அந்த மீனவர் பொலிசாரின் விசாரணைக்கு உட்பட்டு பல நாட்களாக தொழிலுக்குச் செல்ல முடியாது பட்டினி கிடந்ததை அனைவரும் நன்கு உணர்ந்திருந்தனர். அதனால் இச்சடலத்தையும் கடலில் எறிய நினைத்தனர். எனக்கு மனம் வரவில்லை. நடப்பது நடக்கட்டும் என்று சடலத்தைக் கையில் ஏந்தி ஒரு அடி எடுத்து வைக்கு முன்னே சடலத்தின் தலை கழன்று பட கினுள் விழுந்தது. எனக்குப் பயத்தினால் உடல் பதறியது. சடலத்தை கடலில் எறிந் துவிட்டுக் கண்களை மூடிக்கொண்டேன். படகுத்துடுப்பால் தலையினைத் தட்டி மீண்டும் கடலினுள் விழுத்தி விட்டேன். வேகமாகப் படகு இயந்திரத்தை இயக்கி கரை திரும்பினேன். இதனால் பெறுமதிமிக்க மீன்களோடு வலையும் கடலில் சென்று விட்டது. இவ்வாறு தனது பெயரைக் குறிப்பிட விரும்பாத ஒரு மீனவர் தெரிவிக்கின்றார். இது நடந்தது விபத்து நடைபெற்ற 9 தினங்களுக்குப் பின்பு. அதாவது 4-1-1997 இல். இதன்பின் ஆங்காங்கே சடலங்கள் மீனவர்களது வலையில் சிக்குவதும், அவற்றை அவர்கள் மீண்டும் கடலில் வீசி விடுவதுமாகக் காலங்கள் கழிந்துகொண்டி ருந்தன.

இதேபோன்றே, 1997 மாசிமாதத்தின் ஓர்நாள் அதிகாலை நானும் எனது நண்பனும் கடற்கரையில் சென்று கொண்டிருந்தபோது படகுத்துடுப்பொன்றில் மனிதத்


கடலின் அடியில் மூழ்கிக் கிடக்கும் பட

தலையொன்று கிடப்பதைக் கண்டோம். சற்று நேரத்தில் பொலிசார் வந்து அதனை எடுத்துச் சென்றுவிட்டார்கள் என்று தனக்கு ஞாபகத்தில் உள்ள சம்பவத்தைக் குறிப்பிடுகிறார் ANTONINO CANNARELLA என்பவர்.

விபத்தில் இருந்து உயிர் தப்பிய 29 பேர்களும் நான்கு நாட்களின்பின் (30-12-1997) PELO PONNESO எனும் கிரேக்க கடற்கரையில் அநாதரவாக நின்ற சமயம்


தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அம்பலமாகும் ஐந்துவருட மர்மம்’ துயரப் பயணத்தின் ஜல சமாதி சிசிலி



பொலிசாரினால் கைது செய்யப்பட்டபோது நடந்த உண்மைகளைத் தெரிவித்தார்கள்.

1996 டிசம்பர் 26 அதிகாலை 3 மணிக்கு JOHN கப்பலில் இருந்து எம்மைக் கரைக்குக் கொண்டு செல்ல சிறிய படகு ஒன்று வந்தது. அதில் நாம் ஏற்றப்பட்டோம். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட 10-20 என அதிகரித்த தொகை 100, 200 என்று 300இற்கும் அதிகமானது. நாம் பயத்தினால் மறுத்தபோது துப்பாக்கிமுனையில் எம்மை மிரட்டி பலரைப் படகின் அடிப்பாகத்திற்குள் செல்லுமாறு திணித்தார்கள். சிறிது நேரத்தில் கடற்கொந்தளிப்பினாலும், படகு அதிக பாரத்தை தாங்காததினாலும் கடல்நீர் படகினுள்ளே வரத்தொடங்கியது. உதவி கேட்டு கூக்குரலிட்டபோது பெரிய கப்பல் (JOHAN) எம்மை நோக்கித் திரும்பியது. இந்தவேளை கடுங்காற்றினால் சிறியபடகு அதனுடன் மோதி சிதைந்து போனது. பெரிய கப்பலில் இருந்து எறியப்பட்ட கயிறுகளைப் பிடித்து நாம் தப்பிக் கொண்டோம். எம்மில் 29 பேர் தவிர மீதி 282 பேரும் கடலில் மூழ்கிவிட்டார்கள். என்று நடந்தவற்றைக் கூறியபோதும் அதை நம்ப மறுத்த பொலிசார் ஒருசிலநாள் தேடுதலின் பின் அப்படி எதுவும் நடந்திருக்க வாய்ப்பில்லை. இவர்கள் கூறுவதைப் பார்த்தால் அனேகமாக ஒரு விபத்து நடைபெற்றிருக்கலாம் எனக்கூறி விசாரணைகளையும் தேடுதலையும் நிறுத்திவிட்டது.

விபத்து நடைபெற்று சுமார் ஒரு வாரத்தின் பின் ஒன்று இரண்டென சடலங்கள் மிதந்து மீனவரின் வலைகளில் சிக்கி மீண்டும் மீண்டும் அவர்களால் கடலில் வீசப்பட்டுக்கொண்டிருக்க, இத்தாலிய கடற் படையில் உயர்பதவியில் இருக்கும் திரு. RENATO PERRARO அவர்கள் MANIE STO எனும் பத்திரிகையில் 05-01-97 அன்று ‘இப்படியான சம்பவமொன்று நடந்ததற் கான தடயங்கள் எதுவும் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை. சடலங்களோ அன்றி பிற சிதைவுகளோஇதுவரைகிடைக்க வில்லை. எனவே இது உண்மையாக நடந்த விபத்து என்றுகூறமுடியாது’ எனத் தெரி வித்தார். ஆனால், PORTO PALOவின்காவல்துறை அதிகாரிகளுள் ஒருவரான 50 வயதுடைய திரு. GIOVANNILUPO அவர்கள், ‘ஆம், இது பற்றி எல்லோருமே அறிந்திருக்கின்றார்கள்.பயங்கரமானதும்,மரியாதை யற்றதுமான இவ்விடயத்தைப் பற்றிப் பேசவே இப்போது வெட்கமாக இருக்கிறது. வலைகளில் சிக்கிய சடலங்களை மீனவர்கள் மீண்டும் கடலிலேயே எறிந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களைக் குறைகூற முடியாது. தங்கள் தொழிலுக்குப் பாதிப்பு வந்துவிடக்கூடாது என்பதாலேயே அவர்கள் அப்படி நடந்திருக்கிறார்கள்’ என இப்போது தலை குனிந்து சொல்கிறார்.

இதேபோன்றே PORTO PALOவின் பிரதி குரு வணபிதா DON CALOGERO PALACINO என்பவரும் தெரிவிக்கின்றார். நீதிக்காகப் போராடும் இவரது கண்டனங்களைக் கேட்டு அரசியல்வாதிகள்கூட அஞ்சுவார்கள் என்று கூறப்படுகிறது. அவர் சொல்கிறார்:

170 மீன்பிடிப் படகுகளைக் கொண்ட இக்கிராமத்தில் ஏறக்குறைய அனைவருமே இதுபற்றி என்னுடன் கதைத்திருக்கிறார்கள். வலையில் சிக்கிய சடலங்களைக் கடலில் எறிந்திருக்கிறார்கள். இது உண்மையில் தவறானதே. ஆனால் மீனவர்களது பக்கம் பார்க்கின்றபோது சரி என்றே தோன்றுகிறது. ஏனெனில் அவர்கள் தமது தொழில் காரண மாகவே அவ்வாறு நடந்து கொண்டார்கள் என்று தெரிவிக்கின்றார்.

இதுபற்றி உள்ளூர் சரித்திர ஆசிரியர்கள் கூறும்போது ‘இச்சம்பவத்தை முதலில் கேட்கும்போது விளையாட்டாகவும், மீனவர்களிடையே உலவிவரும் பண்டைய புராணக்கதை போன்றும் இருந்தது. மக்கள் கூட, சட்டவிரோதமாகப் பயணித்தவர்களைக் கொண்டு சென்ற கொள்ளைக்காரக் கப்பல் ஒன்று கடலில் மூழ்கியது என்றே கதைத்தார்கள். ஆனால், இப்போது இந்த உண்மைகள் தெரியவரும்போது இதற்காக அனைவரும் காட்டிய அக்கறை இதுதானா என வேதனைப்படவைக்கிறது’ திரு. CORRA DO GERNIGLIARO எனும் சரித்திர ஆசிரியர் குறிப்பிடுகையில், ‘பலபேர் மனச்சாட்சியே இல்லாமல் நடந்துகொண்டு விட்டார்கள். இப்போது எல்லோரும் பணம் சம்பாதிப்பதிலேயே குறியாக இருப்பதால் உண்மையை மறைத்துவிட்டார்கள் என்றே








தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூறலாம். நிச்சயமாக இவர்கள் நிறவெறி பிடித்தவர்கள் அல்ல' என்றும் குறிப்பிடுகிறார்.

இச்சம்பவம் பற்றிய விசாரணைகள், பதிவுகளைச் சுட்டிக்காட்டிய PACHINO படை அதிகாரி திரு. NEVE என்பவர் இவை பற்றிய நான்கைந்து பதிவுகளே காணப்படுகின்றன என்றும் 1997 மாசி மாதத்தில் கண்டெடுக்கப்பட்ட மனிதத்தலை ஓர் ஆணினுடையது என்றும் 16-25 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞனின் இறப்புக்காலம், இனம் என்பவை பற்றி உறுதிப்படுத்த முடியவில்லை எனக் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் பதிவுகளைக் காண்பிக்கின்றார்.

1996 சம்பவம் நிகழ்ந்த காலத்தில் இருந்து இன்றுவரை கடமையாற்றிவரும் திரு. PIETR CANDIDO எனும் துறைமுக உபஅதிகாரி தெரிவிக்கின்றார். 'இது பற்றி யாரும் வந்து எம்மிடம் முறையிட வில்லை. தங்களுக்குள்ளேயே கதைத்துக் கொண்டிருந்தார்கள். எமக்கு வந்து கூறியி ருந்தால் ஓர் விசாரணையை ஆரம்பித் திருக்க முடியும். மேலதிகாரிகளுக்கும் தெரிவித்து நடவடிக்கை மேற்கொண்டிருக்க லாம்' என்றும் கூறுகிறார். இதேவேளை, 'நாம் எந்தவிதமான தேடுதலையும் மேற்கொள்ளவில்லை. ஊரெல்லாம் இந்த விசயத்தைப் பற்றியே பேச்சு. ஒரே ஒரு கப்பலை வைத்துக்கொண்டு விபத்து நடைபெற்ற இடத்துக்குச் சென்று எப்படித் தேடுதல் செய்ய முடியும்' என்று வெளிப்படையாகச் சொல்லும் சிறைகூசா துறைமுக அதிகாரி திரு. LANAWIO MARINO அவர்கள், இங் கிருக்கும் பதிவுகளைப் பார்க்கும்போது 15 நாட்கள் வரை தேடுதல் நடைபெற்றிருக் கிறது எனக் கூறமுடியும். எனினும் 4 வரு டங்களாக நான் இங்கு இல்லை எனத் தெரி விக்கின்றார்.



கடலின் அடியில் காணப்படும் சிதைவுகள்


சிசிலிக் கடற்பரப்பு இன்று மட்டுமல்ல பண்டைக்காலந்தொட்டே சீரற்ற கடலாகவே காணப்படுகிறது. இதனை கிறிஸ்தவ பைபிளில்கூடக் காணக்கூடியதாக இருக்கின்றது. கிறிஸ்துவுக்குப் பின் அவரது சீடர்கள் பணியாற்றிய காலத்தில் புனித சின்னப்பரைக் கைது செய்து உரோமுக்குக் கொண்டு செல்லும் வழியில் இதே சிசிலிக் கடற்பரப்பில் புயற்காற்றில் சிக்குண்ட இவர்களது கப்பல் மணற்திட்டுக்களில் மோதி சிதைவடைந்து மால்த்தா தீவில் கரையொதுங்கியதையும், இவர்கள் கரைக்குச் செல்ல கடலின் ஆழத்தை விழுதுவிட்டுப் பார்த்தபோது அது மிகவும் ஆழமாக இருந்ததை பைபிள் கூறுகிறது. அதே கடலிலேயே PERRY BOAT படகும் 108 மீட்டர் ஆழத்தில் அமைதி யாக அடங்கிப் போனது.

சுமார் 5 வருடங்கள்வரை சிசிலிக் கடல் தன்னகத்தே மறைத்து வைத்திருந்த இவ்விபத்து பற்றிய இரகசியம் வெளிவரக் காரணமாக அமைந்த 17 வயது கணேசு அன்பழகன் என்பவரது அடையாள அட்டைக்கு உரிமை கோருகின்றார் அவரது தாய்மாமனான 47 வயதுடைய பாலசுந்தரம் இளையதம்பி. இவர் கடந்த 20 வருடங்களாக இத்தாலியில் வசித்து வருகிறார். தற்போது வீடியோ கசற் கடையொன்றின் உரிமையாளராக இருக்கும் இவர் கோபமும் கவலையுமாக கூறுகின்றார்.

'ஒருபோதும் இதை நான் நம்பமாட்டேன். எனது சகோதரி அதாவது அன்பழகன், அருளழகன் என்போரது தாய் (அப்படியென்றால்... ஆம்! கணேசு அன்பழகனின் ஒரு வயதுக்கு மூத்த அருள முகன் என்பவரும் அதே கப்பலிலேயே ஒன்றாகப் பயணித்திருக்கிறார்கள். இருவரும் ஒன்றாகவே மாண்டும் போயிருக் கிறார்கள்.) இன்றுவரை அவர்கள் உயிருடன் இருப்பதாக எண்ணிக் கொண்டிருக் கின்றாள். சாவகச்சேரியில் வசிக்கும் இவர் அங்கு உள்ள ஓரிடத்தில் குறி(சாஸ்திரம்) கேட்டபோது, அவர்கள் உயிருடன் இருப்பதாகவே கூறினார்கள். எனவே, அந்த நம் பிக்கையில் இன்றுவரை சோறு கூடச் சாப் பிடாது வெறும் காய்கறி களையே உணவாக உண்டுவருகிறார். நானும் அந்த சாத்திரத்தையே நம்புகிறேன். எனது தங்கையின் மகன்களான இவர்கள் ஒரு நாள் திடீரென வந்து எனது வீட்டுக் கதவைத் தட்டுவார்கள். நானும் அவர்களை வரவேற்று, நல்ல ஆடைகள் அணிவித்து, அவர்கள் ஆசைப்பட்டபடி லண்டனில் படிப்பதற்கு அனுப்பி வைப் பேன் என இதுவரை நம்பிக் கொண்டிருக்கிறேன் என்கிறார். தனது மாமனிடம் போக நேரமில்லாமல் லண்டனில் எங்காவது ஓரிடத்தில் தனது பிள்ளைகள் இருவரும் படித்துக் கொண்டிருப்பார்கள் என்றே அவர்களது தாயும் நம்பிக் கொண் டிருக்கின்றார்.

மரணித்துப் போனவர்களில் ஒரேயொரு குடும்பத்தில் மட்டுமே இவ்வளவு சோகக்கதை என்றால், இன்னும் 280 பேரது சோகக்கதைகள் வெளிவராமலேயே இருக்கின்றன.

உண்மைகள் எப்போதும் நிரந்தரமாய்



உறங்கி விடுவதில்லை. காலநீரோட்டத்தில் கலந்து அவை வெளிவந்தே தீரும் என்பதற்கு உதாரணமாய், இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பிறகு இத்தாலிக் கடலில் இடம்பெற்ற பெரிய விபத்து இது தான் என வர்ணிக்கப்படும் இவ்விபத்து வெளிவந்திருக்கிறது. அதேபோன்றே, ஏனையவர்களது கதைகளும் காலஓட்டத்தில் வெளிவரும். இவ்விபத்தில் இறந்து போனவர்களது விபரத்தைச் சேகரித்து அவர்களுக்கென ஓர் நினைவுச் சின்னம் எழுப்பும் முயற்சியிலும் இத்தாலி தமிழர் ஒருங்கிணைப்புக் குழு ஈடுபட்டுள்ளது. இந்த முயற்சி செவ்வனே செய்யப்பட வேண்டியதே. அதற்காக அனைவரும் அவர்களுக்கு உதவ வேண்டியதும் கடமையே. ஏனெனில் நோபல் பரிசு பெற்ற 3 இத்தாலியர்கள் இதற்கு உதவ முன்வரும் போது இறந்தவர் களது உடன்பிறப்புக்களாகிய நாம் எந்த அளவிற்கு பங்களிப்புச் செய்ய வேண்டும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதல்ல.

இறுதியில் ஒரேயொரு கேள்வி மட்டும் மனதைக் குடைகிறது. பாலசுந்தரம் இளையதம்பி கேட்பது போல, இதற்கு யார் பொறுப்பு?...

சமூகமே சிந்திக்கட்டும்.
விடை காணட்டும்.

பொன் திருச்செல்வன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வேலவன்

சிறீலங்காவில் இப்பொழுது இரண்டு அரங்கங்களில் காட்சிகள் விறுவிறுப்பாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. ஒன்று பேச்சுவார்த்தை, சமாதானம், சந்திரிகா, ரணில், தமிழ்க் குழுக்கள், நோர்வே.... எனக் காட்சிகள் விரிந்து கொண்டிருக்கின்றன. இரண்டாவது அரங்கத்தில் 15ஆயிரம் பேரை இராணுவத்திற்குத் திரட்டுவது யுத்தப் பயிற்சி, ஆயுதக் கொள்வனவு, பாதுகாப்புக்கு அதிகளவு நிதி, இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் பல்லேகல, அரச அதிபர்கள், பாடசாலை அதிபர்கள், அமெரிக்கா.... என அரங்கம் சுறுசுறுப்பாக இயங்குகின்றது.




வேளையில் இவர்களை ஒழிக்கும் பொறுப்பு சிறீலங்காவின் பொலிசாரின் வசம் இருந்தது. இதற்கான முயற்சியில் பொலிசார் ஈடுபட்டிருந்தபோது, பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார். அவர்கள் மிகச் சிலராக உள்ளதாலும், புத்திக்கூர்மையுடன் இரகசியமான முறையில் நடமாடித் திரிவதாலும் அவர்களைப் பிடிக்கமுடியவில்லை. அதிகம்பேரென்றால் இலகுவாக மடக்கிப்பிடித்து விட

# அனுபவத்தில் கூட பேரி

இந்த இரண்டு அரங்குகளில் விரியும் காட்சிகளில் எதனையும் மறைக்க சந்திரிகா அம்மையாரின் அரசாங்கம் முயலவுமில்லை, அதற்கு அது விரும்பவும் இல்லை. உண்மையாகக் கூறப்போனால் அந்த இரண்டும் வெளிப்படையாகச் செய்யப்படவேண்டும் என்பதே அதன் திட்டம் என்றுகூடக் கூறலாம். ஏனெனில் இவற்றில் எதனையாவது அது மறைக்க அதற்குத் தேவையிருப்பின் அது தன் கைவசம் வைத்திருக்கும் தணிக்கைவிதிகளின் உதவியுடன் அதனை இலகுவாகவே செய்துவிடும். ஆனால் அது அவ்வாறு நடந்துகொள்ள முயலவில்லை.

இதற்குக் காரணம் இல்லாமலுமில்லை. முதலாவது அதன் பேச்சுவார்த்தையரங்கம் வெளிப்படையாகத் தெரிவது, வெளிநாட்டு நிதி உதவியைப் பெறவும், தான் சமாதானவிரும்பி, சமாதானத்துக்கு எதிரிகள் புலிகளே என மீண்டும் ஒரு தோற்றத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை அதற்கு இருப்பது மட்டுமல்ல, இரண்டாவது அரங்கத்தைச் சிறப்பாகத் தயார் செய்வதற்குத் தேவையான கால அவகாசத்தையும் பெற முதலாவது அரங்கமே அதற்கு உதவியாக இருக்கும்.

அதேவேளை யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டோம், இன்னும் ஒருசில வீதம்தான் யுத்தம் முடிவடைவதற்கு இருக்கிறது என இனவாதிகள் மத்தியில் பிரச்சாரம் செய்து அவர்களை மகிழ்ச்சிப்படுத்திக் கொண்டிருந்த அம்மையாருக்கு ஓயாத அலைகள்-3 கொடுத்த அடி பெரும் இக்கட்டை ஏற்படுத்தியுள்ளது. அது அவர் போட்டுக்கொண்டிருந்த கணக்கையே மறக்கச் செய்துவிட்டது என்று கூடக் கூறலாம். அதேவேளை இன்று துவண்டு போயிருக்கும் இனவாதிகளுக்கு தெம்பூட்ட வேண்டிய தேவையும் அவருக்கு இருக்கின்றது. எனவே இரண்டாவது அரங்கத்தை வெளிப்படையாக நடாத்தி இனவாதிகளுக்கு குளுக்கோசு ஏற்றும் வேலையை அவர் செய்து வருகின்றார்.

எவ்வாறாயினும் யுத்தம் செய்து வெற்றி கொள்வது என்ற அவரின் குறிக்கோளுக்கும் இந்த அரங்கமே உறுதுணையாக அமையும் என்பது வெளிப்படை. சிங்கள இனவாதிகளின் அகராதியில் 'யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத்தை ஏற்படுத்துதல்' என்பதற்கு உண்மையான அர்த்தம், தமிழரின் விடுதலைக்காகப் போராடும் விடுதலைப் புலிகளை முற்றாக அழித்து அதன் மூலம் யுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வருதலாகும்.

இந்த அடிப்படை நோக்கத்துடனேயே சிங்கள இனவாதம் செயற்பட்டது, செயற்பட்டு வருகின்றது. இதனைச் செயற்படுத்த முயன்று கடந்த காலங்களில் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் தன்னை மாற்றிக்கொள்ள சிங்கள இனவாதம் முயற்சி செய்வதற்கான அறிகுறிகள் எதுவுமே தென்படுவதாகஇல்லை.

இன்று இவர்கள் எவ்வாறாயினும் இரண்டு இலட்சம் பேரை படையில் சேர்த்து தேவையான அளவு வளங்களைப் படையினருக்கு வழங்கினால் யுத்தத்தை வென்றுவிடலாம் என்ற எண்ணத்தைக் கொண்டவர்களாக இருப்பதாக வெளிவரும் தகவல்கள் கூறுகின்றன.

15ஆயிரம் பேரை படைக்குத் திரட்டுவதிலேயே திக்கித் திணறிக்கொண்டிருக்கும் படைத்தரப்பு இனவாதிகளின் சிந்தனைக்கேற்ப இரண்டு இலட்சம் என்ற குறிக்கோளை எய்துவது சாத்தியமா? என்பது ஒருபுறம். இந்தக் குறிக்கோளை அடைய கட்டாய இராணுவ சேவை போன்ற வேறு மார்க்கங்களை சந்திரிகா அம்மையாரின் அரசு தேடுவது போலவே தோன்றுகின்றது.

அதேவேளை 'படையினருக்குத் தேவையான வளங்களைத் தேடுதல்' என்னும் விடயத்தில் தனது சக்திக்கு மிக மிக மீறிய வகையில் தற்போது முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

ஆனால், இவையிரண்டும் இனவாதிகளின் குறிக்கோளை எய்துவதற்குப் போதுமானவையா? என்ற கேள்வியை அவர்கள் எழுப்பி நேர்மையான முறையில் அதற்குப் பதில் வழங்குவார்களாயின், இவ்வாறான முயற்சியில் இறங்கியிருக்கமாட்டார்கள்.

1970களின் நடுப்பகுதியில் இலங்கையில் தம் இருப்பை உறுதியாக்குவதற்கு ஆயுதப் போராட்டம் ஒன்றே ஒரே வழியென்ற முடிவுக்கு தமிழர்கள் வந்தபோது, ஒருசில இளைஞர்களே ஆயுதம் ஏந்தியிருந்தனர். அவ்

லாம்' என்று.

ஆனால், போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களின் தொகை அதிகரித்தபோது, இந்தப் போராட்டத்தை நசுக்கும் எண்ணத்துடன் 1979 ஜூலையில் பயங்கரவாதத் தடைச்சட்ட எனும் மிகக் கொடூரமான சட்டத்தைக் கொண்டுவர வேண்டிய நிலை சிங்கள அரசுக்கு ஏற்பட்டது. இந்தச் சட்டத்தை நிறைவேற்றிய கையோடு இராணுவத்தின் வசம் வடக்கு-கிழக்கு மாகாணங்களை ஒப்படைத்த ஜே.ஆர். ஜெயவர்த்தன மனம்போனபடி தமிழரைக் கொன்றொழித்து, விசாரணையின்றிப் புதைக்கும் அதிகாரத்தை கையில் கொடுத்து பிரிகேடியர் வீரதுங்கவை யாழ். குடாநாட்டுக்கு அனுப்பிவைத்தார்.

தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு ஜே.ஆர்.ஜெயவர்த்தன சூட்டிய பெயர் 'பயங்கரவாதம்'. அப்போது ஆறுமாத காலத்திற்குள் (1979 டிசெம்பர் 31ஆம் திகதிக்குள்) பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவது என்ற முதலாவது காலக்கெடுவும் பிரிகேடியர் வீரதுங்கவுக்கு வழங்கப்பட்டது. ஆனால்,அவரால்அப்பாவித்தமிழர்கள் பலரைக் கொன்று புதைக்க முடிந்ததேதவிர போராட்டத்தை ஒழித்துவிட முடியவில்லை. இவர் பின்னர் சிறீலங்காவின் இராணுவத் தளபதியாக பதவி வகித்தபோதும்கூட அதனை அவரால் செய்யமுடியவில்லை என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அதேவேளை, இப்போராட்டத்தை ஒழித்துக்கட்டவென 'தேசிய பந்தோபஸ்து அமைச்சு' என்ற பெயரில் புதிய அமைச்சு ஒன்று உருவாக்கப்பட்டு 'ஒக்ஸ்போட்' பல்கலைக்கழகப் பட்டதாரியும் சிறந்த அறிவாளி என்று கருதப்பட்டவருமான லலித் அத்துலத்முதலி அமைச்சராக நியமிக்கப்பட்டார். இவர் பயங்கரவாத ஒழிப்பு என்ற பெயரில் செய்த தமிழின ஒழிப்பு பிரபல்யமானதாகும். 'பத்துத் தமிழரைக் கொன்றால் அதற்குள் ஒரு பயங்கர



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாதி கொல்லப்படுவான்' என்ற கொள்கை யொன்றை இவர் கொண்டிருந்தார் என்று கூடச் சொல்லப்பட்டது.

இஸ்ரேலிய உளவு நிறுவனமான மொசாட் டும் பிரித்தானிய 'கினிமினி' கூலிப்படையுமே லலித் அத்துலத்முதலியின் படைக்கு ஆலோ சகர்களும் பயிற்சியாளர்களுமாக இருந்தனர். இவர்களின் வழிகாட்டலின் கீழ் சிங்களப் படைகள் செய்த அட்டூழியங்கள் தமிழரின் ஆயுதமேந்திய விடுதலைப் போராட்டத்தை சர்வதேச ரீதியில் நியாயப்படுத்தவும் இந்தி யாவின் தலையீட்டுக்கும் வழிவகுத்ததே தவிர அவர்கள் நினைத்தவாறு போராட்டத்தை ஒழிக்க உதவவில்லை.

தமிழர்மீதான முதலாவது விமானக்குண்டு வீச்சுக்கு மற்றொரு விமானத்தில் இருந்து கொண்டு அமைச்சர் அத்துலத்முதலி நேரடி

சுமார் இரண்டரை ஆண்டுகள் முயன்றது. இந்த முயற்சியில் 17 பிரிகேட்டுகளைச் சேர்ந்த ஒரு லட்சத்து 15ஆயிரத்திற்கு மேற் பட்ட இந்தியப் படையினர் ஈடுபடுத்தப் பட்டனர். அதாவது, தமிழீழ மண்ணில் அண்ணளவாக ஒரு சதுர மைலுக்கு நான்கு இந்தியப் படை அல்லது 22 தமிழீழக் குடி மக்களுக்கு ஓர் இந்தியப் படை என்ற வீதத்தில் இந்திய இராணுவத்தினர் தமிழீழ மண்ணில் குவிக்கப்பட்டிருந்ததாக 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' என்னும் பத்திரிகையில் விபிரிக்கி என்பவர் குறிப்பிட்டிருக்கிறார்.


இந்தியப் படை தமிழீழ மண்ணில் நிலை கொண்டிருந்தவேளை அதற்கு ஒரு நாள் செ லவு 22 கோடியே 50 இலட்சம் ரூபாக்கள். அது பாவித்த வாகனங்களுக்கு நாளாந்தம் தேய் மானப் பெறுமானம் 10 கோடி இலங்கை ரூபா க்கள் என அவரே குறிப்பிட்டிருக்கின்றார்.

களைச் சந்தித்தது. இவரது ஆட்சியின் ஆரம்பக் கட்டத்தில் இராணுவத்தில் இணை வதற்காக துட்டகைமுனுவின் வாரிசுகள் காலிமுகத்திடலில் முண்டியடித்தனரென்றால் பின்னர் இறுதிக் காலத்தில் புலிகளின் அதிரடி களுக்கு ஈடுகொடுக்க முடியாது ஆயிரக் கணக்கில் தப்பியோடத் தொடங்கினர்.

கிழக்கு மாகாணத்தை முற்று முழுதான ஆக்கிரமிப்பில் வைத்துக்கொண்டு யாழ். குடா நாட்டின் மீதான முற்றுகையை படிப்படியாக இறுக்கி விடுதலைப் புலிகளை குடாநாட்டுக் குள் சிக்கவைத்து அழித்து விடுவது இவரின் திட்டமாக இருந்தது. இதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்த வேளையில் கடற்புலிகளின் பிரசன்னம்இந்த முற்றுகையை முறியடித்தது.

இவருக்குப் பின்னர் ஜனாதிபதிப் பதவிஏற்ற டி.பி.விஜயதுங்க வெளிப் படையாகவே தன்னை

# வாதம் பாடம் கற்க மறுக்கிறது!




யாக உத்தரவு பிறப்பித்தார். தமிழர்மீது மேற்கொள்ளப்பட்ட முதலாவது பாரிய இரா ணுவ நடவடிக்கையான ஒப்பரேசன் லிபரே சனை வழிநடத்தியவரும் இவரே. 100கோடி ரூபா பொருட்செலவில் ஆயிரக் கணக்கான படையினரை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்பட்ட இந்தப் பாரிய இராணுவ நடவடிக்கையானது வடமராட்சிப் பிரதேசத்தைக் கைப்பற்றுவதாக இருந்தது. பின்னர் யாழ். குடாநாடு முழு வதையும் ஆக்கிரமிக்கும் திட்டத்தையும் அத் துலத்முதலி கொண்டிருந்தார். ஆனால், 1987 ஜூலை 5இல் நெல்லியடியில் கரும்புலி கப்டன் மில்லர் நடத்திய தாக்குதல் அவரது கனவைச் சிதைத்தது. இந்தத் தாக்குதல் ஈழயுத்தம்-1 ஐ முடிவுக்குக் கொண்டுவந்தது.

இந்தத் தோல்வியின் பின்னணியில் ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந் தத்தின் பிரகாரம், தமிழீழ மண்ணில் காலடி பதித்த இந்திய இராணுவம் பின்னர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அழித்துவிட




இந்திய அரசாங்கம் விடுதலைப் போராட் டத்தை நடாத்திய விடுதலைப் புலிகளை அழிக்க மேற்கொண்ட நடவடிக்கைகளை 'ஆயுதக் களைவு' என்ற பெயரிலேயே நடத் தியது. 48 மணி நேரம் முதல் 72 மணி நேரத்திற்குள் முடிவுக்கு வந்துவிடும் என்ற திட்டத்துடன் அது யாழ். குடாநாடு மீது 1987 ஒக்டோபர் 10இல் ஆரம்பித்த 'ஒப்பரேசன் பவான்' எனும் பாரிய நடவடிக்கை மாதக் கணக்கில் தொடர்ந்தது.

இதன்பின்னர் தேசியத் தலைவர் பிரபா கரன் அவர்களை இலக்காக்கொண்டு வன்னி யில் நடாத்தப்பட்ட 'செக்மேற்' நடவடிக்கை கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட்டது.

அவர்களின் பாசையில் 'சாரம் கட்டிய ஆயிரம் பையன்களை' அவர்களால் வெற்றி கொள்ள முடியவில்லை. பெரும்மனிதவளம், உபகரண வளத்துடன் மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்தது மட்டு மல்லாமல் 'ஆயுதக் களைவு' என்ற பெயரில் அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கை இறுதி யில் அவர்களால் உருவாக்கப்பட்ட 'தமிழ்த் தேசிய இராணுவம்' என்னும் போலிப்படை யினூடாக புலிகளுக்கு பெரும்தொகை ஆயு தத்தை ஒப்படைப்பதில் முடிந்தது.

1990 ஜூன் மாதம் 10ஆம் திகதி இரண் டாவது ஈழ யுத்தம் ஆரம்பித்தபோது, சிறிலங் காவின் அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் பாதுகாப்பு ராஜாங்க அமைச்ச ராக இருந்த ஜெனரல் ரஞ்சன் விஜயரத்தின கூறினார். 'விடுதலைப் புலிகளின் மழலைப் பட்டாளம் எமது படையினரைக் கண்டதும் சிறுநீர் கழிக்கப்போகின்றார்கள்' என்று. ஆனால் அவர் உயிருடன் இருக்கும்போதே பலகோட்டை கொத்தளங்களை அந்த'மழ லைப் பட்டாளத்திடம்' இழந்தார்.'ஈழம் தவிர எல்லாம் தருவேன்' என தமிழரை ஏமாற்ற முயன்ற பிரேமதாசவின் ஆட்சிக்காலத்தில் சிறீலங்காவின் கடற்படை பாரிய இழப்புக்

இனவாதியாக இனங் காட்டிக் கொண்டு போரை நடத்தமுற்பட்டார். ஆனால் 'இதயபூமி-1', 'யாழ்தேவி', 'தவளை' ஆகியவற் றில் இராணுவம் பெற்ற தோல்விகள் யாழ். குடாநாட்டை முற்றுகையிடும் திட்டத்தை தவிடு பொடியாக்கியதுடன் கடற்புலிகளையும் பலம் வாய்ந்தவர்களாக வளர்த்துவிட்டது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியினர் 'பயங்கரவாத ஒழிப்பு' என்ற போர்வையில் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடையக் காரணம் அவர்களின் தவறான தந்திரோபாய வழிநடத்தல்களும், போதிய வளங்களை படை யினருக்கு வழங்காதுவிட்டமையும் என்பது பின்னர் பதவியேற்ற சந்திரிகாவின் 'புத்திஜீவி' அமைச்சரவையின் திடமான முடிவாகும்.

இதற்கமைய 'போராட்டத்தின் தலையை-அதாவது யாழ். குடாநாட்டை நசுக்கினால் போராட்டம் ஒழிக்கப்பட்டுவிடும்' என்ற எடு கோளின் அடிப்படையில் போரை நடாத்து வதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டது. அதி களவு வளங்களை படையினருக்கு பெற்றுக் கொடுப்பதற்காக பாதுகாப்புச் செலவீட்டு க்கு இரட்டிப்பு மடங்கு நிதி ஒதுக்கப்பட் டது. தமிழீழத்தை நான்கு வலயங்களா கப் பிரித்து முற்றுகையிட்டு புலிகளை வன்னிக்குள் முடக்கி முற்றாக அழித்துவிடும் திட்டத்தின் அடிப்படையில் மூலோபாயம் வகுக்கப்பட்டுப் பாரிய அளவிலான நில ஆக்கிரமிப்பு யுத்தத்தை சந்திரிகா அரசு ஆரம்பித்தது. ஆனால் இந்த ஐந்து வருட காலத்தில் சிறீலங்காவின் விமானப்படையா னது பெரும்பாலான விமானங்களை இழந்து போக்குவரத்திற்கு வாடகை விமானங்க ளைப் பெறும் நிலைக்கு சென்றுவிட்டது. கடற்படை தொடர்ச்சியாக இழப்புக்களைச் சந்தித்துள்ள அதேவேளை, தனது

தொடர்ச்சி- 23ம் பக்கம்...



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1948ஆம் ஆண்டு சிறீலங்கா 'சுதந்திரம்' அடைந்தது. இதன்பின்னர் சிங்கள அரசியல் தலைவர்களாலும், அவர்களது அரசியல் முரண்பாட்டுத் தன்மைகளாலும், தமிழர்கள் எவ்வாறு புறக்கணிக்கப்பட்டார்கள் அல்லது உரிமைகள் மறுக்கப்பட்டன என்பது பற்றியும், தமிழர்களால் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகள் சிங்களப் பேரினவாத அரசாங்கங்களால் நசுக்கப்பட்டமை பற்றிய விபரங்களை அறிந்திருக்கின்றோம்.

1956ஆம் ஆண்டு சிறிலங்காவின் பிரதமராக எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா பதவியேற்றதும் தமிழர்களுக்கெதிரான செயற்பாடுகள் உச்சக்கட்டத்தை நோக்கிச் சென்றது. '24 மணித்தியாலங்களில் சிங்களம் அரச கரும மொழியாக்கப்படும்' என அறிவித்தார். அதைத்



தொடர்ந்து ஏற்பட்ட தமிழர் எதிர்ப்பு நடவடிக்கைகளும், கலவரங்களும், பண்டா-செல்வா ஒப்பந்தங்களும் பின்னர் அவை கிழித்தெறியப்பட்டமையும் மறைக்கமுடியாத உண்மைகள்.

அன்றிலிருந்து நடந்தேறிய அரசியல் நடவடிக்கைகளையும், சிங்கள அரசியல் கட்சிகளின் தேர்தல்கள், பிரச்சாரங்கள் மற்றும் தமிழ்க்கட்சிகளின் தேர்தல் பங்களிப்புகள் அதனால் விளைந்த ஏமாற்றங்களும் வரலாற்றிலே பதியப்பட்டுள்ளன.

1958ஆம் வருடம் பிரதமர் பண்டாரநாயக்க அவருடன் நெருங்கிப்பழகிய சகாக்களின் சதித்திட்டங்களால் சோமராம என்ற பிக்குவால் சுடப்பட்டார். இவருடன் களனி விகாரையின் மடாதிபதி புத்தரகித்ததேரோ என்ற 26 வயதுப் பிக்குவும், இவருடன் இரகசியத் தொடர்பு வைத்திருந்த விமலா விஜயவர்த்தன என்ற பெண் அமைச்சரும் கைதுசெய்யப்பட்டனர். காலித்தொகுதி அமைச்சர் தகநாயக்கா தற்காலிக பிரதமரானார். பின்னர் அமைச்சரவையில் ஏற்பட்ட குழப்பங்களால் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டுப் புதிய தேர்தலுக்கான சூழல் ஏற்படுத்தப்பட்டது.

தேர்தலில் தமிழரசுக்கட்சியும், தமிழ் காங்கிரசும் தமிழ் மக்கள் சார்பில் போட்டியிட்டன. இடதுசாரிக்கட்சிகளின் ஒற்றுமையால்தான் தமிழர்களுக்கும் விமோசனம் கிடைக்கும் வகுப்புவாதம் பேசினால் வாக்குரிமையின்றி நாடற்ற பிரஜைகளாக வாழும் 10 லட்சம் தோட்டத் தொழிலாளர் ஒதுக்கப்பட்டுவிடுவார்கள் என்றும் தொழிலாளர் கட்சியான இடதுசாரிக்கட்சிகள் அவர்களையும் ஆதரிப்பர், இந்நாட்டின் பிரஜைகளாகவும் ஆக்குவர் என்றும் கூறப்பட்டது.

ஆனால், இடதுசாரிகள் பிரிந்துபோய் கொம்யூனிஸ்ட், சமசமாஜிக் கட்சிகளில் போட்டியிட்டனர். காலித்தொகுதியில் தகநாயக்கா தோற்கடிக்கப்பட்டார். தமிழ் காங்கிரஸ் தலைவர் பொன்னம்பலமும் தோல்வியடைந்தார். 151 ஆசனங்களில் ஐ.தே.க. 50, சுதந்திரக்கட்சி 46, தமிழரசு 15, மீதியான ஆசனங்களை மற்றக் கட்சிகள் கைப்பற்றிக்கொண்டன. 1956இல் தோல்வியடைந்த ஐ.தே.கட்சி மீண்டும் தலைதுாக்கியது. டட்லி சேனநாயக்க பிரதமரானார். சுதந்திரக்கட்சியைச் சேர்த்து கூட்டரசாங்கம் அமைக்க டட்லி விரும்பினார். அது ஈடேறவில்லை. தமது கோரிக்கையை நிறைவேற்றும் பேரத்தில் தமிழரசுக்கட்சி இறங்கியது. பாராளுமன்றம் ஆரம்பிக்கப்பட்டு முதல் விடயமாக அரசின் கொள்கைகள் அடங்கிய அரியாசனப்பேச்சு விவாதம் நடைபெற்றபோது, எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைப் பிரேரித்தனர். நான்கு வாரங்களே ஆட்சியிலிருந்த அரசு வீழ்ந்தது.

சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை பண்டாரநாயக்கவின் மனைவி சிறீமாவோ ஏற்றுக்கொண்டார். அத்துடன் இடதுசாரிகளுடனும் ஒப்பந்தம் செய்துகொண்டார். தமிழருக்கு ஏதாவது சலுகைகள் சுதந்திரக் கட்சி மூலமே கிடைக்கமுடியுமென்றும் பண்டா-செல்வா ஒப்பந்தம் ஏற்படுமென்ற நம்பிக்கையும் தமிழ் மாகாணங்களில் சிங்களக் குடியேற்றம் ஏற்படாதவாறு பார்த்தாலேபோதும் என்பதாகவும், ஐ.தே.க. இதற்கு சம்மதியாததாலேயே பேச்சு முறிந்தது எனவும் தமிழரசுக் கட்சியினர் நம்பினர். ஆனால் ஐ.தே.கட்சியோ சுதந்திரக் கட்சிக்கும், தமிழரசுக் கட்சிக்கும் இரகசிய ஒப்பந்தமொன்று இருப்பதாகவும், இலங்கை இரண்டாகப் பிளவுபடப்போகின்றது. மாவட்ட சபைகள் மூலம் தமிழருக்கு தனியாட்சி கொடுக்கப்போகின்றார்கள். சிங்களமொழிக்கு ஆபத்து வரப்போகின்றது என்பதான பிரச்சாரங்கள் முடுக்கிவிடப்பட்டன.

எழுத்தளவில் இல்லாவிட்டாலும் தமிழரசுக் கட்சியின் ஆதரவு கிடைத்தால் பண்டா-செல்வா ஒப்பந்தம் அளவுக்கு சலுகை அளிப்பதாக சிறீமாவோ பண்டாரநாயக்க சொல்லியிருந்தும் பிரச்சாரக் கூட்டங்களில் இதை மறுத்துரைந்தனர். பிரச்சாரக் கூட்டங்களில் சிறிமாவோ அம்மையார் கண்ணீர் மல்க தமது கணவரைக் கொன்றவர்களுக்கு தக்க நீதி வழங்கத் தமது கட்சியையே தெரிவு செய்யுமாறு கேட்டு மனமுருக வேண்டுகோள் விடுத்தார். விதவை கண்ணீரால் வெற்றிபெற நினைக்கின்றார் என ஐ.தே.கட்சியினர் கேலி செய்தனர். பத்திரிகைகள் சுதந்திரக் கட்சியையும் வன்மையாகத் தாக்கின. இடதுசாரி ஆதிக்கம் ஏற்பட்டால் உண்டாகக்கூடிய சர்வாதிகார ஆட்சி பற்றியும் வெளியிட்டன.

சிறீமாவோவை கம்யூனிஸ்ட் கட்சியின் பீற்றர் கெனமனுடனும் என். எம். பெரேராவுடனும் இணைத்து கேலிச்சித்திரங்கள் வரைந்து தள்ளின. புனித இலங்கையின் புத்தமதம் அழிந்துவிடப் போவதாகவும், பயமுறுததின. வடக்கு - கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் வாழ்ந்த தமிழர்களும் முக்கியமாக மலையகத்தமிழரும் சுதந்திரக் கட்சிக்கு வாக்களிக்கப் போவதையறிந்த ஐ.தே.க.வினரின் பத்திரிகைகள் இந்தியருக்கெதிராகவும் பிரச்சாரம் செய்தன. தமிழ்ப் பகுதிகளில் தமிழரசுக்கட்சி தமிழ்க் காங்கிரசை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தது. சுதந்திரக் கட்சி கத்தோலிக்கர், பெரிய முதலாளித்துவ வாதிகளையெல்லாம் தாக்கியது. இறுதியில் சுதந்திரக் கட்சியே எதிர்பார்த்ததைவிட அதிக தொகுதிகளில் வெற்றிபெற்றது. சுதந்திரக் கட்சிக்கு 75 ஸ்தானங்களும், ஐ.தே.க.வுக்கு 30ம், இடதுசாரிகளுக்கு 60 ஸ்தானங்களும் கிடைத்தன. உலகின் முதலாவது பெண் பிரதமரானார் சிறீமாவோ. நாடெங்கிலுமுள்ள வெளியார் கட்டுப்பாட்டிலிருந்த பாடசாலைகளை அரச மயமாக்க அரசு தீர்மானித்தது. பெரும்பாலான பாடசாலைகள் கத்தோலிக்க, கிறீஸ்தவ, இந்து, பௌத்த சபைகளின் நிர்வாகத்திலேயே இருந்தன. ஆயினும் இலவசக் கல்வி ஆரம்பித்த காலம் முதல் அரசாங்கமே ஆசிரியர்களது சம்பளங்களை கொடுத்து வந்தது. பத்திரிகைகளும், கத்தோலிக்க பீடங்களும் இதை வன்மையாக எதிர்த்தன. அடுத்து தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகளை மறந்து, சிங்கள மொழியைத் திணிக்க முயன்றது சிறீமாவோ அரசு. மலையக மக்களின் வாக்குகளைப்பெற்ற அரசாங்கம் தமிழ் மொழியையும், தமிழர்களையும் நசுக்க முயன்றது. தமிழ்ப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளையும் அரசாங்கம் எடுத்தபின் இலகுவாக சிங்களத் திணிப்பை ஏற்படுத்தவும் முயன்றது. அரச சேவையிலுள்ளோர் சிங்களம் படிக்கவேண்டுமென்றபோதும், படிப்பதில்லை என்ற வைராக்கியம் பூண்டனர். தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகள் எதனையும் அரசு ஏற்க மறுத்தது. தேர்தலின்போது தம்மிடையே உடன்பாடு இருந்ததாகவும் அதை மீறியுள்ளதாகவும் தமிழரசுக் கட்சி குற்றம் சாட்டியது.

சிங்கள அரசாங்க ஊழியர்களை தமிழ்ப் பகுதிகளுக்கனுப்பி சிங்களத்தில் அரசாங்க அலுவல் சம்பந்தமாக கடிதங்கள் அனுப்புவதை தமிழரசுக்கட்சி வன்மையாகக் கண்டித்தது. தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகளுக்கு செவிசாயாது தமது மொழிக் கொள்கையை அரசு அமுல் செய்தது. இதன் விளைவாக அரச அலுவலகங்கள் முன் சத்தியாக்கிரகம் செய்ய தொண்டர் படைகளைத் திரட்டியது தமிழரசுக் கட்சி. சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள அரசாங்க அலுவல்கள் யாவும் சீர்குலைந்தன. சிங்களமொழி தம்மிடையே நுழைவதை எதிர்த்துப் போராடுவதாகவும், இதில் வெற்றி

## எட்டப்பட்ட உடன்படிக்கைகளும் ஏமாந்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜனன்

பெறமுடியுமென்றும் நம்பினர். ஆனால், அரசாங்கமோ இதை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. சிறீமாவோ பண்டாரநாயக்கவின் வெளிநாட்டுப் பயணங்கள் பல நடைபெற்றபோதும் போராட்டம் தொடர்ந்து கொண்டேயிருந்தது.

வட கிழக்கு மாகாணங்களில் சிங்கள அரசின் ஆட்சி ஸ்தம்பித்துவிட்டதென்றும், தமிழரசார் தமது ஆட்சியை நிலை நாட்டலாமென்றெல்லாம் பலரால் பேசப்பட்டும், பத்திரிகைகளும் செய்திகளைத் திரித்து வெளியிட்டன. அரசு தக்க நடவடிக்கை எடுக்காத நிலையில் தமிழரசுத் தலைவர்களுக்கும் விரக்திநிலை ஏற்பட்டாலும், அரசின் கவனத்தை மீண்டும் கவர்வதற்காகப் புதிய தபால் முத்திரைகளை வெளியிட்டு தபால் சேவையொன்றை ஆரம்பிக்கப் போவதாகவும் அறிவித்தது. சிங்களப் பத்திரிகைகளோ தமிழரசுக் கட்சி சட்டங்களை மீறிப் புதிய ஆட்சி ஒன்றை ஏற்படுத்த முயல்வதாகவும், இனியும் அரசு மௌனமாக இருந்துவிட முடியாதெனவும் கண்டன மொழிகளில் எழுதித் தள்ளின.

அரசாங்கம் திடீரெனக் கூடியது. உடன் நாடெங்கும் அவசரகால நிலையை பிரகடனம் செய்து, வடக்கு கிழக்கு மாகாணங்களில்




...ுக்களும்



ஊரடங்குச் சட்டம் பிறப்பித்தது. தமிழரசுக் கட்சித் தலைவர்களையெல்லாம் பலாத்காரமாகக் கைதுசெய்ததோடு விமானத்தில் கொழும்புக்கனுப்பி தடுப்புக் காவலில் வைத்தது. சத்தியாக்கிரகிகள் யாவரும் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து இரவோடிரவாக அடித்துக்கலைக்கப்பட்டனர். தமிழ் மக்களால் பிரமாதமாக எதிர்பார்க்கப்பட்ட, ஆதரிக்கப்பட்ட மிகப்பெரும் போராட்டம் சிதையுண்டது. தமிழரசுக் கட்சியின் தோல்விகளுக்கிடையே அக்கட்சியும் தடைசெய்யப்பட்டதாக அரசாங்கம் அறிவித்தது. அவசரகால நிலைமை நீடித்தது. நாட்டில் தற்காலிக அமைதி நிலவியது.

தேர்தலின்போது தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகளை ஏற்றுப் பல சலுகைகளை செய்வதாக வாக்களித்திருந்த சிறீமாவோ பண்டாரநாயக்கவின் சோஷலிசப் பசப்பு வார்த்தைகள், அரசாள நினைப்பவர்கள் எவராயினும் எப்படியும் வேஷம் போடுவார்கள் என்பதை உறுதிப்படுத்தியது.

21ம் பக்க தொடர்ச்சி...

சக்தியின் பெரும்பகுதியை தலையில், யாழ்ப்பாணத்தில் குவிக்கப்பட்டுள்ள பட்டாளத்துக்கு விநியோகம் வழங்கலில் செலவிட்டு வருகின்றது. இவ்வாறு இருந்தபோதும்கூட யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் எல்லாமே நன்றாகச் செல்வது போலவே சிங்கள இனவாதிகளுக்கு தோற்றம் தந்தது.

புலிகளே சமாதானத்தின் எதிரிகள் என்ற தோற்றத்தை ஏற்படுத்தி 'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற மாயையை உருவாக்கி யாழ். குடாநாட்டை வெற்றிகொண்டதும், சிங்களப் பேரினவாதம் தனது குறிக்கோளின் 80 வீதத்தைப் பூர்த்திசெய்துவிட்டதாக மார்தட்டிக் கொண்டது. ஆனால், மறுவளமாக புலிகள் பெற்றுவந்த வளர்ச்சியைக் கணக்கிட அது தவறி வன்னிமீது பாரிய 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தபோதே இனவாதம் சிக்கலில் மாட்டிக்கொண்டது.

முல்லைத்தீவு வெற்றிக்குப் பின் ஆட்லறிகள், மோட்டார்கள், கனரக ஆயுதங்களுடன் கட்டியெழுப்பப்பட்ட தரைப்படை மற்றும் கவசவாகன எதிர்ப்புப் பிரிவு, பலமான கடற்புலிகள் அணி, விமான எதிர்ப்புப்படை, சிறப்புப்படைப் பிரிவுகளுடன் ஜெயசிக்குறு இராணுவநடவடிக்கையை புலிகள் எதிர்கொண்டபோது,சிங்களப் படை பாரிய ஆயுத தளபாட, உயிரிழப்பைச் சந்திக்க நேர்ந்தது.

இவற்றின் மத்தியிலும் காலக்கெடுவின் மேல் காலக்கெடு நிர்ணயித்து, அங்குலம் அங்குலமாக முன்னேறி ஆசியாவிலே மிக நீண்ட காலமாக நடைபெற்ற இராணுவ நடவடிக்கையான ஜெயசிக்குறுவின்போது ஆக்கிரமித்த நிலத்தையும் முன்னரே ஆக்கிரமித்த நிலத்தையும் ஓயாத அலைகள்-2, ஓயாத அலைகள்-3 என்பனவற்றுக்குப் பறிகொடுத்துவிட்ட சிங்களப் பேரினவாதம் இப்போது அடுத்தகட்டம் குறித்து சிந்தனையில் இறங்கியுள்ளது.

12 வருடகாலமாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையின் கீழ் போராட்டத்தை நடாத்திய சிங்களப்படை பெற்றுக்கொண்ட அனுபவத்திலிருந்தோ, இரண்டரை வருட காலம் இந்திய இராணுவம் கற்றுக்கொண்ட பாடத்திலிருந்தோ அல்லது 6 வருடகாலம் தான் நடாத்திய யுத்தத்திலிருந்தோ பாடம் கற்றுக்கொள்ளாத சந்திரிகா அரசு தொடர்ந்தும் அதே பாதையிலேயே செல்லும் திட்டத்துடன் செயற்படத் தொடங்கியுள்ளது.

இது தமிழர் தமது குறிக்கோளை விரைவில் எட்ட உதவுமே தவிர, சிங்கள இனவாதம் தான் நினைத்ததைச் சாதிக்க உதவமாட்டாது. இதனையும் நேரடி அனுபவம் மூலம் கற்றுக் கொள்ளவே சிங்கள இனவாதம் விரும்புகின்றதுபோல் தெரிகின்றது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



# "குவகிராவ்ட்" Hovercraft ஓர் ஈரூடகக்கலம்

குவகிராவ்ட் (Hovercraft) என்னும் நீரிலும் நிலத்திலும்செல்லக் கூடிய கலங்களை பிரிட்டனிடமிருந்து சிறீலங்கா அரசு கொள்வனவு செய்து பாவனைக்கு உட்படுத்தியிருப்பதாக தகவல்கள் கூறுகின்றன. இவ்வகைக் கலங்களை கடலிலிருந்து சதுப்பு நில அமைப்புகளுடன் கூடிய தரைப்பகுதிகளில் படையினரையும், வாகனங்களையும் தரையிறக்கம் செய்யப் பயன்படுத்த முடியுமென சிறீலங்காக் கடற்படை நம்புவதாகத் தெரியவருகின்றது.

குவகிராவ்ட் என்றால் என்ன? இது எவ்வாறு இயங்குகின்றது? குவகிராவ்ட் என்பது நீரிலும், நிலத்திலும் செல்லக்கூடிய ஒரு கலமாகும். இக்கலத்தின் அடிப்பகுதிக்கும் நீர்தரை மேற்பரப்பிற்கும் இடையே ஏற்படுத்தப்படும் வளி, அமுக்கம் கலத்தின் சுமையைத் தாங்கி நிற்க கலத்தின் பின்புறத்திலிருக்கும் விசிறிகள் (புரொப்பளர்கள்) காற்றை முன் இருந்து இழுத்துப் பின்னே தள்ள கலம் முன்னோக்கிச் செல்லும். இக்கலங்களில் இருவகை உண்டு.1. Air Cushoon Vehicle (ACV)2. Aerodynamic Ground Effect Machines (GEM)Sir John Thorny Croft என்ற பிரித்தானிய நாட்டவரே முதலில் ACVஇனைக் கருத்தளவில் உருவாக்கினார். ஒரு கப்பலின் கீழ்ப்பகுதி கடல் நீரினுள் அமிழ்ந்து இருப்பதால் கப்பல் நகரும்போது கீழ்ப்பகுதியிலுள்ள பெருமளவு நீரை இடம்பெயர்க்கவேண்டியுள்ளது. இதற்கு குறிப்பிட்டளவு சக்தி விரயமாகின்றது. ஒரு கப்பல் நீரில் முட்டாது நீர்மட்டத்திலிருந்து சற்று மேலே இருக்க இயங்குமாயின் இச்சக்தி விரயத்தைத் தடுக்கலாம். இவ்வாறே தரையில் ஓடும்வாகனங்களிலும் சில்லுகளின் உராய்வு விசைக்கு எதிராக சக்தியைச் செலவிடுகின்றன. தரையில் முட்டாது செல்லக்கூடிய வாகனமாயின் இச்சக்தி விரையத்தைத் தடுக்கலாம். இவற்றைச் சிந்தித்த John thortny croft தரை நீர் மேற்பரப்பிலிருந்து சிறு உயரத்தில் செல்லக்கூடிய குவகிராவ்டை உருவாக்கினார்.




1- உயர் தொழில் நுட்ப வளைந்து கொடுக்கக்கூடிய பாவாடை.Advanced technology flexible skirt

2- 20-30 எம். எம் இரட்டைக்குழல் பீரங்கிகள்

3- 50 கலிபர் துப்பாக்கிகள்

4 - துருப்புக்கள் ஏற்றப்படும் அறை.

5 - ஓட்டுனரின் அறை

6- ராடார்

7- நிலையான முன் உந்தல் விசிறிகள் (Ducted fixed pitch Propeller)

8 - சுக்கான் (Rudder)

9 - தொலைத் தொடர்பு அன்டனா.

குவகிராவ்ட்இன் அடிப்பகுதி தட்டையாகக் காணப்படும். இப்பகுதியால் காற்று கீழ் நோக்கி அமுக்கப்பட குவகிராவ்ட் சற்று மேல்நோக்கி உயரும். இதனால் இக்கலத்திற்கும் தரைக்குமிடையில் ஒரு அமுக்கம் கூடிய காற்றிடைவெளி காணப்படும். இது காற்று மெத்தை (Air cushion) எனப்படுகின்றது. Peripheral Jets இனூடாக வளி உட்செலுத்தப்பட்டு காற்று மெத்தை ஆரம்பகாலத்தில் உருவாக்கப்பட்டது. 1959இல் உலகின் முதல்முதல் பரீட்சாத்தக் காற்று மெத்தைக்கலமான எஸ். ஆர்.என்- 1 கடலில் இறக்கப்பட்டது. இது 3 பேரை மட்டுமே காவிச் செல்லக்கூடியதாகவும், வேகம் குறைவாகவும் காணப்பட்டதோடு அமைதியான கடலிலும், மட்டமான தரையிலும் மட்டுமே இதனால் இயங்கக்கூடியதாக இருந்தது. Peripheral Jetsஇன் பலம் காற்று மெத்தை தொடர்ந்து பேணப் போதுமானதாக இருக்கவில்லை. இதனையடுத்து கலத்தின் அடிப்பகுதியினூடு பெருமளவுகாற்று வெளியேறுவதைத் தடுக்க றப்பரால் செய்யப்பட்ட பாவாடை (Skirt) கலத்தின் அடிப்பகுதியைச் சுற்றி அமைக்கப்பட்டது.



இதனால் சமனற்ற தரையிலும், கொந்தளிப்பான கடலிலும் காற்று மெத்தையைத் தொடர்ந்து பேணக்கூடியதாக இருந்தது. ஒரு காற்று மெத்தை வாகனத்தின் பகுதிகளாவன:

1. காற்று மெத்தையைப் பேணும் றப்பர் பாவாடை (Skirt) 2. கலத்தின் உடற்பகுதி (Hull) 3. கலத்தின் இயந்திரங்கள் (engine) 4. எழுவை ஏற்படுத்தப்படும் தொகுதி (Lift System) 5. முன்னுந்தல் தொகுதி ( propulsion System)

கலத்தின் உடற்பகுதி அலுமினியச் சட்டங்களால் ஒட்டப்பட்டு அலுமினியப் போர்வை இடப்பட்டுள்ளது. அத்துடன் GasTurbine இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது. இதுவே எழுவையையும் முன் உந்தலையும் கொடுக்கின்றது. இயந்திரத்தின் சக்தியின் பெரும்பங்கு எழுவைக்கும், சிறு பங்கு முன்உந்தலுக்கும் பயன்படுத்தப்படுகின்றது. சிறிது மாற்றியமைக்கப்பட்ட விமானத்தின் காற்றாடிகள்முன் உந்தலுக்குப் பயன்படுத்தப்படு கின்றன. முன் உந்தும் விசிறிகளுக்கு Propeller பின்புறத்தில் சுக்கான் (Rudder) பொருத்தப்பட்டுள்ளது. இதன் மூலமே கலம் திருப்பப்பட்டுகின்றது.

விமானங்களில் பாவிக்கப்படும் Gas Turbine இயந்திரங்களே இங்கும் ஆரம்பத்தில் பாவிக்கப்பட்டன. எனினும் கலம் கடலில் உப்பு நீரை பெருமளவு விசுறுவதால் இவை விரைவில் துருப்பிடிப்பதால் Gas Turbine இயந்திரங்களுக்குப் பதிலாக டீசல் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. காற்று மெத்தையைப் பேணப் பயன்படுத்தப்படும் றப்பர் பாவாடையானது விரைவான இயக்கத்தின்போது அடிக்கடி சிதைவடைந்தன. இதனால் காற்று மெத்தைக்கு வேண்டிய அமுக்கம் சிதைந்த பகுதியினூடு வெளியேறுகின்றது. இதை நிவர்த்திசெய்ய றப்பர் பாவாடையானது சிறுசிறு பகுதிகளாகப் பிரித்துச் செய்யப்பட்டது. ஒன்று சிதைவடைந்தாலும் மற்றயவை பாதிக்கப்படாத வகையில் உருவாக்கப்பட்டன. றப்பர் பாவாடையின் வலிமையை அதிகமாக்க றபருடன், நைலோன், றெயோபிரீன் எனப்படும் ஒருவகை பிளாஸ்டிக் என்பனவும் சேர்க்கப்பட்டன.

குவகிராவ்ட்டானது உராய்வின்றிச் செல்வதால் குறைந்த முன் உந்தல் விசையுடன்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

கூடியவேகத்தில் நகரக்கூடியது. 0-60நொட்ஸ் (Knots) வேகத்தில் செல்லக்கூடியன. அத்துடன் பின்நோக்கியும் செல்லக்கூடியன.

இவை சதுப்பு நிலங்களில் செல்வதற்கும் பனிக்கட்டிகள் உள்ள பிரதேசங்களில் செல்வதற்கும் பூமி நடுக்கம் ஏற்படும்போது பிரயாணம் செய்வதற்கும், பயணிகளை சிறு கடற்பிரதேசங்களிலும், ஆறுகளிலும் ஏற்றி இறக்குவதற்கும், ஆழம் குறைந்த நீர்ப்பரப்புகளில் செல்வதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. இதன் இராணுவ பாவனைகள் பல தரப்பட்டவை. ஈரூடகத்தாக்குதல்களின்

போது துருப்புக்காவியாகவும், தாக்குதலின்பின் வழங்கல் பணிகளுக்கும், ரோந்துக் கலங்களாகவும், விரைவு தாக்குதல் கலங்களாகவும், பாவிக்கப்படுகின்றன. பிரித்தானியத் தயாரிப்பான ஏ.பி. 1-88 ரக விரைந்து தாக்கும் கலமானது 29,000 கி.கி. நிறையுடையது. 2 வாகனங்களுடன் 4670 கி.கி. நிறை ஏற்றக்கூடியது. இதில் 20 எம் எம் முதல் 30 எம்.எம். வரையிலான ஒற்றைக் குழல் அல்லது இரட்டைக்குழல் பீரங்கிகள் பொருத்தப்படலாம். இரு 50 கலிபர் துப்பாக்கிகளும் பொருத்தப்படலாம். 1500 குதிரைவலுக்கொண்ட இக்கலம் 50-80 துருப்புகளுடன் 40 நொட்ஸ் வேகத்தில் செல்லக் கூடியவை.

இக்கலத்தின் மேம்படுத்தப்பட்ட பதிப்பாக ஏ.பி. 2-88 ரகத்தில் இரு இராணுவ வாகனங்கள் அல்லது ஒரு ஸ்கோபியன் ரக டாங்கி ஏற்றப்படலாம். இதில் 428 குதிரை வலுக்கொண்ட 5 டீசல் இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளது. இவை 55 நொட்ஸ் வேகத்தில் செல்லும் ஏ.பி. 4-88 விரைவு தாக்குதல் கலம் 5000 குதிரைவலுவுடையது. இதில் ஆறு பெங்குயின் ஏவுகணைகள், 57 எம்.எம். போபஸ் பீரங்கி ஒன்று, இரு 50 கலிபர் துப்பாக்கி என்பன பொருத்தப்படலாம். இவை ஆகக்கூடுதலாக 60 நொட்ஸ் வேகத்தில் இயங்கக்கூடியவை.

குவகிராவ்ட் கலங்களை சிறீலங்காக் கடற்படை தமது பாவனைக்கு அறிமுகப் படுத்தியுள்ளபோதும் இக்கலங்களில் எவ்வாறான வசதிகள் காணப்படினும் சக்கைவண்டி முட்டினால் சுக்குநூறுதான் என்பதில் ஐயமில்லை.



# தியாகிக்கு அஞ்சலி

எரிமலை
1982 ஜூலை
குமுறல்-1
அலை-07




தோன்றிற் புகழோடு தோன்றுக- அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று! வள்ளுவன் வாக்கிற்கிணங்க தமிழர் மனதில் அணையாத தீபமாய் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் தியாகி சிவகுமாரன் 1950ஆம் ஆண்டு ஆவணி 26ம் நாள்- யாழ்ப்பாணத்திலுள்ள, உரும்பிராயில்- திருவாளர் பொன்னுத்துரைக்கும் திருவாட்டி அன்னலட்சுமி அம்மையாருக்கும் அன்பு மகனாய் உதித்தான்.

கல்வியின் பெருமையை நன்கறிந்த பெற்றோர் தம்மகனையும் ஒரு கல்விமானாக்கக் கனவு கண்டனர். அவனோ கல்வியிற் செலுத்த வேண்டிய கருத்தை கண்ணிலும் மேலான தமிழீழத் தாயின் பால் செலுத்தியதினால் சொல்லொணாத் துன்ப துயரங்களைத் தாங்கிக் கொண்டான்.

“தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா” எனப் பாரதி வேண்டினான். தலை நிமிரமுடியாமல் தத்தளித்த தமிழினத்தின் விடியலுக்காய் இம்மைந்தன் சிந்தித்தான். விளைவு இந்திய விடுதலைக்கு பகத் சிங் போன்று தமிழீழ வேட்கை கொண்டு சிவகுமாரனும் செயற்படலானான்.

உயர் கல்வி மாணவனான சிவகுமாரன் மாணவர் மத்தியில் விடுதலைக் கருத்துக்களைப் பரப்பினான். அடக்கியொடுக்கப்படும் அன்னைத் தமிழின் துயர் துடைக்க இளைஞர்கள் செயற்பட வேண்டிய அவசியத்தை உணர வைத்தான். தமிழ்ச் சமுதாயத்தின் மத்தியில் நிலவி வந்த சாதிவெறியையும், சீதனக் கொடுமையையும் வேரோடழிக்க அயராது பாடுபட்டான். சமபந்தி போசனம் முதலான தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கைகளில் முன்னின்று ஈடுபட்டான். அடக்குமுறையாட்சிப் பிரதிநிதிகளில் ஒருவரான துணையமைச்சர் சோமவீர சந்திரசிறி கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரிக்கு விஜயம் செய்திருந்தபோது அவரின் காரிற்கு குண்டு வைத்தான் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைபட்டு சாட்சியம் இன்மையால் விடுதலை செய்யப்பட்டான். 1971இல் சிங்கள ஆட்சியாளரின் அடிவருடியாகிய யாழ் மேயர் துரையப்பாவினை இலக்கு வைத்து அவரது காரினை நேரக்கணியக் குண்டினால் தகர்த்தான். இதற்காவும் சிறீலங்காக் காவல்துறையால் கைது செய்யப்பட்டு 2வருடங்கள் சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டான்.

1974ஆம் ஆண்டு 4வது உலகத் தமிழாராட்சி மாநாடு யாழ் நகரில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இலட்சோப இலட்சம் மக்கள் மாநாட்டின் இறுதி நாளான 10.01.1974இல் செவிக்கமுது தேடி வந்த அப்பாவித் தமிழர் தமை- இனவெறியன் ஏ.எஸ்.பி சந்திரசேகராவின் தலைமையில் வந்த பொலிஸ் படை கண்ணீர்ப்புகை- குண்டாந்தடி கொண்டு மூர்க்கமாகத் தாக்கியது. 9 தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இன்னல் கண்டு இதயங் கொதித்தான் சிவகுமாரன். இனவெறியன் சந்திரசேகரவை வேட்டையாட நாள் குறித்தான்.

எனினும் 1975 ஜூன், 5ஆம் திகதி ஆயுதப்படையின் கையில் எதிர்பாராதவிதமாகச் சிக்கிய மைந்தன், துவேசிகளிடம் அடிபட்டுச்சாவதைவிட உயிர்நீப்பதை மேலென எண்ணி - கவரிமான் போல தன்னைத்தானே அழித்துக் கொண்டான். இவன்பாற் கவரப்பட்ட தமிழ் மக்கள் வெள்ளம்- சிவகுமாரனின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டனர். தமிழன்னையின் விலங்குடைக்க வந்த வீரத்தனயன் காரியம் முடியுமுன்னே காலனிடம் சென்றமை- கல் நெஞ்சங்களையும் கண்ணீர்விட வைத்தது. தியாகிக்கு உரும்பிராயில் நிறுவப்பட்ட சிலை- 1977இல் உடைக்கப்பட்டது. மீண்டும் 1980இல் நிறுவிய சிலை 1981இல் இராணுவத்தால் தகர்க்கப்பட்டது.




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தீர்ப்பெழுதும் கரங்கள் பெண்ணு

ஒரு பெண் தன்னுயிரைவிட அதிகமாக நேசிப்பதும் பாதுகாப்பதும் தனது உடலைத் தான். தனக்குக் கிடைத்த ஒரு புதையலா கவே உடலை அவள் பாதுகாத்துக் கொள் கிறாள். அதில் ஓர் கீறல் விழுவதைக்கூட பெரும் பிரச்சினையாகக்கருதுகிறாள்.இவை ஒருகணம் நத்தையாய் சுருண்டு விடுவது எமது சமூகப் பெண்களிடம் இயல்பாக இருக்கையில், ஆயுதமுனையில் பலவந்த மாக அவள் உடல் ஆக்கிரமிக்கப்படுவதை, உணர்வுகள் சிதைக்கப்படுவதை எப்படி ஏற்றுக்கொள்வது? மிருகத்தனமான அத்து மீறல்களால் அவள் உடல் அனுபவிக்கும் வேதனை, வலி என்பவற்றுக்கும் அப்பால்



அழகுணர்ச்சியின்பாற்பட்டு நிற்கும் உணர் வுகளாக இருக்க அதற்கும் அப்பால் தனது கௌரவமே தன் உடலைப் பாதுகாத்துக் கொள்வதில்த்தான் உள்ள தென்பது அவளது அசையாதநம்பிக்கை.சரியோ ,தவறோ நுட்பமான உணர்வுகளால் வனை யப்பட்டிருக்கும் அவளது எண்ணங்கள்கூட உடலுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களால் காயப்பட்டுப்போய் விடுவது வேதனைக் குரியது.

தன் உடலை தன் அனுமதியின்றி யாரே னும் பார்ப்பதையோ அன்றி சாதாரணமா கத் தொடுவதையோகூட விரும்பாத, விசமத் தனமான கேலியான வார்த்தைகளைச் சகிக் காத பெண்கள் அவ்வாறான செயல்களைத் தம்மை அவமதிக்கும், அவமானப்படுத்தும் ஒன்றாகவே கருதிவிடுகின்றனர். அப்படியே தும் நடந்துவிடுகின்ற பட்சத்தில் மிகுந்த மனக்குமுறலுக்கும் படபடப்பிற்கும் ஆளாகி இயல்பு நிலை பாதிக்கப்பட்டு துயரப்படு கின்றனர். தம்மீது ஏதோ சக்தி தெறித்து விட்ட உணர்வில் அருவருத்துப் போய் விடுகின்றனர். காலங்காலமாக அவ ளுள் திணிக்கப்பட்ட உடல்சார்ந்த கருத்தூட்டல்களில் இருந்து விடு படமுடியாத நிலையில் மனம் வெ தும்பி சோர்ந்துவிடுகின்றனர்.

திருமணத்தின்பின் விரும்பி யும் அல்லது கடமை என்ற பெய ரிலும் தனக்குரியவனுடன் இணைந்து கொள்ளும்போது கூட கூச்சத்தால் தான் அவமதிக்கப்பட்டுவிட்டதாக, அசிங்கப் படுத்தப்பட்டுவிட்டதாக உணரும் அவளது மனம் அந்த வெப்பியாரத்தில் அலைப்புற்று, அருவருத்து என்றுமே, தான் வாழும் காலம் முழுமையுமே மறக்கமுடியாத, மனங்குன்ற வைக்கும் நிகழ்வாகும் கொடூரத்தை எங்கனம் சகித்துக்கொள்வாள்!

ஒரு பெண்ணின் அவமானத்திற்கு விழுந்த அடியாக தீர்வே காணமுடியாத பிரச்சினையாக மாறிவிடும் பாலியல் பலாத் காரங்களும், வல்லுறவுகளும் அவளை ஒடுக்கி, ஆரோக்கியமற்றவளாக்கி அவளது நுண்ணிய உணர்வுகளைக் கொடூரமாக நசுக்கி தன் பிறப்பின்மீதே வெறுப்பேற்பட வைத்துவிடுகின்றது. இத்தகைய மெல்லு ணர்வுகள் தன்னை அழிக்கும் விசமுட்கள் என்பதை உணர்ந்து, இவற்றைப் பிடுங்கி யெறியும் மனநிலை நோக்கி பெண்ணினம் நடக்க வேண்டிய காலமிது.

மார்ச் 19ஆம் திகதி மன்னார் உப்புக் குளத்தில் எம் உறவுகள் இரண்டு சிங்களப் படையினரின் பாலியல் துன்புறுத்தல்களிற் கும், வல்லுறவிற்கும் உட்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து எழுந்துள்ள கண்டனங்கள் இன்றுவரை தொடர்ந்து கொண்டேயுள்ளன.

அப்பெண்கள் இருவரும் நீதி கேட்கத் துணிந்ததைத் தொடர்ந்து வெளிவந்த அவர் கள் மீதான அந்த வக்கிர சித்திரவதை கள் தென்னிலங்கை மற்றும் கிழக்கில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளின், தொடர்பூடகங்களின் இப்போதைய முக்கிய செய்தியாகவுள்ளது. எம் இனத்தின் மீது ஆதிக்கம் செலுத்தி எம்மை அழித்துவிட அல்லது அடிமைகளாக்கிவிட முயலும் சிங் கள அரச படைகளின் இத்தகைய மிருகத் தனங்கள் உப்புக்குளத்தில், செம்மணியில் தொடங்கியவை அல்ல. தமிழர்களை வே ரோடு கருவறுக்க நினைக்கும் சிங்கள இன வாதத்தின் தோற்றத்தோடு தொடங்கிய வையே.

'சாதாரணமாக தம்மினப் பெண்களை யே பாலியல் வல்லுறவிற்குட்படுத்தும் சிங் களவர் தமிழ்ப் பெண்களை மட்டும் சும்மா விடுவார்களா' என இந்த வன்கொடுமை களுக்கு வெறும் ஆண் வெறித்தனச்சாயம் தீட்டி, அதற்குள் பேயாட்டம் போடும் இனத் துவேச உணர்வை, திட்டமிட்ட இன அழிப் புச் செயலை பூசிமெழுகி, பேரினவாதத் திற்கு வக்காலத்து வாங்க தெ பகுதி வாழ் தமிழ் பெண்ணியவாதிகள் முயன்றாலும் கூட, இவை தமிழின அழிப்புக் கோட் பாட்டுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வழி முறைகள் என்பதே உண்மை.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# –சிமிழ்



நீதி கோரல்களும், கண்டன ஊர்வலங்களும், எதிர்ப்புப் பேரணிகளும் இதற்கான தீர்வாகாதெனத் தெரிந்தும், தம் உள வெப்பியாரத்தை, கோபத்தைத் தீர்ப்பதற்கும் சிறீலங்கா அரசபயங்கரவாதத்தை உலகிற்கு அம்பலப்படுத்தவும் மேற்கொள்ளப்படும் தமிழ் தொடர்பூடகங்களின், மக்களின், கண்டனப்போர் தொடர்ந்து கொண்டேயுள்ளது.

காலம்காலமாகத் திணிக்கப்பட்ட கோட்பாடுகளின் அடிப்படையில் வளர்க்கப்பட்ட எமது பெண்கள் எவையெல்லாம் அவமானத்துக்குரியவை, வெளியில் சொன்னால் வெட்கக்கேடானவை என நினைத்திருந்தார்களோ, அவைகளையே வெளியுலகிற்கு அம்பலப்படுத்தத் துணிந்து நிற்பது அவளது ஆளுமை விருத்தியையே சுட்டி நிற்கின்றது. தமக்கிழைக்கப்பட்ட கொடுமைகளை வெளிப்படுத்துவதனால் தமக்கேற்படப்போகும் மன உளைச்சல்கள், எதிர்கால வாழ்வில் சந்திக்கப்போகும் இன்னல்கள் என்பவற்றைத் தாண்டி, தமக்காக என்றுமட்டும் இல்லாது, தன் இனப்பெண்களின் பாதுகாப்பிற்காகவும், கௌரவத்திற்காகவும் நீதிமன்றமேறி நிற்கும் விஜிகலா, சிவமதி இருவருக்கும் ஆதரவாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் பிரதேச ரீதியாக கண்டனப்பேரணிகள் நடத்தப்பட்டன. பெண்கள் மேம்பாட்டுப்பிரிவினரால் தமிழீழமக்களை ஒன்றிணைத்து நடத்தப்பட்ட இக் கண்டனப் பேரணிகள் அப்பெண்களுக்கு ஆதரவாகக் குரல் உயர்த்தி,

'சிங்களதேசமே! வெட்கக்கேட்டை வெளியில் சொல்லமாட்டார்கள் என்ற மெத்தனத்தில் இனியும் தமிழ்ப்பெண்கள் மீது உனது வக்கிரங்களைக்காட்டலாம் என்று எண்ணாதே. ஒரு பெண்ணில் கைவைத்தால் ஓராயிரம் குரல்களும், கரங்களும் இங்கு எழும். அநீதிகளைத் தட்டிக்கேட்கும், மனிதஉரிமை விழுமியங்களைப் பேணுபவர்களுக்குச் சரியான தரவுகளைத்தந்து நிற்கும். தன்னினத்தைப் பாதுகாக்கும் மனவுணர்வையும், மனோதிடத்தையும் தமிழ்ப் பெண்ணிடம் மட்டுமன்றி, இந்த மண்ணில் வாழும் ஒவ்

# டையதாகட்டும்



வொரு சமூகப்பிரஜையிடமும் கட்டியெழுப்பும். அடக்குமுறைகளும் அராஜகங்களும் அதிக காலம் அரசாட்சி செய்ததாக எந்த ஒரு வரலாறும் இல்லை' என எச்சரிக்கையும் விடுத்துள்ளது.

மனிதகுலத்திற்கெதிரான பாரிய குற்றமாக ஐக்கிய நாடுகள் சபையால் வரையறுக்கப்பட்டிருக்கும் பாலியல் வல்லுறவானது தமிழ்ப்பெண்கள் மீது சிறீலங்காப்படைகளால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருப்பதும் அவற்றில் ஒரு சில வேனும் வெளிச்சத்திற்கு வருவதும் இங்கு அடிக்கடி நிகழ்ந்துகொண்டே உள்ளது. ஆனாலும் இன்றுவரை மனித உரிமைகள் பற்றி வாய்கிழியப்பேசும் அனைத்துலகத் தொண்டர் நிறுவனங்களோசரி, உலக மனித உரிமை அமைப்புக்களோசரி இவை தமது காதில் விழுந்ததாகவே காட்டிக்கொள்ளவில்லை. அதையிட்டு அக்கறைப்படவும் இல்லை. ஒரு இனத்தின், அவ்வினப் பெண்களின்மீது கட்டவிழ்த்துவிடப்படும் இந்த மிருகத்தனமான கொடூரங்கள் இன்று வரையும் எந்த உலக நாடுகளின் கவனத்தையும் எட்டவில்லை. ஆயுதக் கலாச்சாரம், பயங்கரவாதம், தீவிரவாதம் என தமக்குப் பிடித்த பெயர்களையெல்லாம் போராடும் இனங்களுக்குச் சூட்டிவிட்டு தம்மையே உலக நீதியாளர்களாகக்கருதி தடைத்தீர்ப்புக்கள் எழுதும் பெரிய மனிதர்களின் கண்களுக்கும் இவை ஏதும் தெரியவில்லை. அன்பு, கருணை, சகிப்புத்தன்மை போன்ற தேன் சொட்டும் வார்த்தைகளைச் சிதைக்கப்பட்ட தமிழ்ப்பெண்ணின் ஆன்மாவின் மீதேறி நின்று உரைக்கும் சிங்களத்து அரசியின் வாய்ஜாலங்களில் மயங்கி நிற்கும் இவர்களுக்கு அவை தெரியப்போவதும் இல்லை.

ஆயுதமுனையில் எம்மை அடக்கமுயல்பவர்களிடம் ஆயுதங்களோடு பேசினால் மட்டுமே தீர்வு கிடைக்கும் என்பதே நடைமுறை யதார்த்தமாக உள்ள நிலையில் நீதிமன்றமேறி தாம் எந்தத்தீர்வினையும் பெற்றுவிடமுடியாதென்பதை ஒவ்வொரு தமிழ்ப்பெண்ணும் உணர்ந்துகொள்ள வேண்டும். நாம் வலுவற்றவர்களாக, போராடும் வழியற்றவர்களாக இருந்திருந்தால், நீதிமன்றவாயில்கள்தான் எமக்கான வழிகளாயிருந்திருக்கக்கூடும். ஆனால் எம்மை நாமே தற்காத்துக்கொள்ளும் பலமுள்ள இனமாக, தெளிவான தலைமையைப்பெற்ற இனமாக இருக்கின்ற நிலையில் நீதிக்காகப் பகைவனிடம் போய்நிற்கவேண்டிய அவசியம் என்ன? பாலியல் வல்லுறவிற்கு தமிழீழச் சட்டத்தின் தீர்ப்பு சாவு ஒறுப்பு, பகைவனுக்கும் அதுவேதான் ஒறுப்பாக முடியும். ஒரு பெண்ணை அவள் விருப்பத்திற்கு மாறாக நெருங்குகின்ற, சிதைத்துச் சீரழிக்கின்ற யாராக இருந்தாலும் அவர்களுக்குரிய ஒறுப்பு சாவு ஒறுப்புதான். இதில் வேறு பேச்சுக்களுக்கு இடமே இல்லை.

எம்மினப்பெண்களைத் தொட்டவர் எவராயினும் எல்லைகள், கடல்கள் தாண்டியிருப்பினும் இதுவேதான் ஒறுப்பு. மானிட நேயத்தையும், மனித உரிமைகளையும் பேச்சளவில் வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்துபவர்களுக்கு இவை போர்வெறியாகத் தெரியலாம். ஆனால் ஏன் என்று கேட்க நாதியற்று தமக்காகத்தாமே போராடுகின்ற இனமாக இருக்கும் தமிழ் மக்களுக்கு இது ஒன்றேதான் வழி. சிறீலங்கா அரசால் திட்டமிட்ட ரீதியில் நடத்தப்படும் இன அழிப்பு நடவடிக்கைகளுக்கெதிராக தமிழர் ஏந்திய ஆயுதம் இன்னும் சில ஆயிரம் கைகளில் ஏறுமெனில் இத்தகைய கொடூரங்கள் தானாகவே ஓயும். தனக்கான பாதுகாப்பை தானே உறுதிசெய்யும் நிலைக்கு தமிழ்ப் பெண் தள்ளப்பட்டுவிட்டதை உணர்வாளெனில் தாருங்கள் நீதி என யாசகம் கேட்கும் நிலை ஏது இனி?

தமிழ்ப் பெண்ணுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் கிருசாந்தி, கோணேஸ்வரி, சாரதாம்பாள்.... செய்யப்பட்ட எச்சரிக்கை விஜிகலா, சிவமதி இவை தொடர்கதையாகாதிருக்க எம்மைத் தயார் செய்து கொள்வோம்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# விலங்கு

**தன்னாட்சி உரிமைக்காக தமிழினம் போராடத் தொடங்கிய காலத்தில் தமிழர்கள், குறிப்பாக இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு, அவர்கள்மீது 'புலி' என்ற முத்திரை குத்தப்பட்டு தென்னிலங்கைச் சிறைகளை நிரப்பிக்கொண்டிருந்தது சிங்கள அரசு. கேள்விமுறையற்ற கைதுகளோடு சித்திரவதைக்குள்ளாகும் இளைஞர்கள் சிறைக்குள்ளே நீண்டகாலமாகத் தடுத்துவைக்கப்பட்டு, பின் அவர்களில் ஒரு சிலரை விடுதலை செய்வதாக வெளி உலகிற்கும், மக்களுக்கும் வேடம் போட்டுக்காட்டும் அதேவேளை, சிறையின் உள்ளே பல இளைஞர்களை கொன்று குவித்து தனது இனவாதப் போக்கினை வெளிப்படுத்துவதை 'விலங்கு' எனும் இச் சிறுகதை சித்தரிக்கின்றது.**

-0-

பாலத்தடியில் பஸ் நின்றது. அவர்கள் பயணிகள் எல்லோரையும் பஸ்சில் இருந்து கீழே இறக்கினர். Aயும் Bயும் வந்த பஸ்சிற்கு அண்மையில் இரண்டு சோதனை இடுபவர்கள் மட்டுமே இருந்தனர். எட்டுப்பேர் வரை இருக்கும், அதற்கு முன்வந்த பஸ்சை சோதனை யிட்டுக்கொண்டிருந்தனர். கொன்டக்ரர் சனங்களிலிருந்து விலகி ஒரு மரத்தடியில் போய் நின்றான். Bஇன் இனத்தவரிலுள்ள ஒரு சமயப் பிரிவினருக்குரிய, சின்னங்கள் அவனது நெற்றியிலிருந்தன. கொன்டக்ரர் Bஇன் இனத்தைச் சேர்ந்தவன் போலும். B ரிக்கற்றை எடுத்துப் பார்த்தான். அது ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. கொன்டக்ரர் ஒழுங்காக உடை அணியாதிருந்தான். வயதுக்கு மீறிய தோற்றம் அவனது முகத்தில் தெரிந்தது. அவனது வீட்டில் மணமுடியாத தங்கைகள் இருக்கிறார்களோ. சீதனத் தொல்லையால் அவதிப்படுகிறானோ. B வீட்டில் மணமுடிக்காமல் இருக்கும் தனதுதங்கைகளை நினைத்துக்கொண்டான்.

டிரைவர் இரண்டு கைகளையும் ஸ்ரியரிங் மேல் வைத்துக்கொண்டான். கண்ணாடியைப் பார்த்தான். எஞ்சினை நிறுத்திவிட்டு, 'கான்ட்' பிறேக்கைப் போட்டான். சோதனையிட நேரம் ஆகும் என்ற எண்ணம் அவனுக்கு வந்துவிட்டது என B நினைத்தான்.

ஒரு பயணி சிகரெட் ஒன்றை வாயில் வைத்து மூட்டிக்கொண்டான். அவர்களுக்குப் பயம் இல்லை. சோதனை இடுபவர்களும் அவர்களும் ஒரே இனம். தகுந்த காரணமின்றி அவர்களில் ஒருவனை தடுத்து வைத்தால், தடுத்து வைத்தவன் அன்றுதான் கடைசியாக சோதனையிட அனுமதிக்கப் படுவான். அவர்களுக்கு நேரம் வீணாகிறதே என்ற கவலை. இறக்கி ஏற்றி, வீணாகத் தொல்லை கொடுக்கிறார்களே என்ற கோபம். எங்கே தங்களைப் பிடித்துவிடுவார்களோ என்ற அச்சத்துடன் Aயும் Bயும் பேயறைந்தவர்கள் போல் நின்றிருந்தனர். அவர்களின் இனத்தவரைத்தான் தேடித் தேடிப் பிடிக்கிறார்கள்.

அங்கு நின்றிருந்த பயணிகளில் Aயும் Bயுமே வேறுபட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள். A தலைநகரிலிருந்து வருகிறார். பாலத்திற்கு 10 மைல் தூரத்திலிருந்த பட்டணத்தில் B நின்றிருந்தான். அங்கே ஒருவன் இறங்கியதாலேயே, பஸ்சில் B ஏற்றப்பட்டான். அது வொரு 'எக்ஸ்பிரஸ்' பஸ். மேலதிகமாக ஆட்களை ஏற்றாது.

மதகுருமாருக்கு என ஒதுக்கப்பட்டிருந்த சீற்றில் காவி உடையணிந்த இரு புத்தபிக்குகள் இருந்தனர். அந்த சீற் டிரைவர் சீற்றிற்கு பின்புறமாக இருந்தது. சீற்றிற்கு பக்கத்திலிருந்த பஸ் தகரத்தில், 'மத குருமாருக்கு மட்டும்' என எழுதப்பட்டிருந்தது. அச் சீற்றில் பிக்குகள் வராதபோது, சாதாரண மக்களும் அமரலாம். பஸ்களில் பிக்குகளுக்குரிய சீற்றில் அமர்ந்து, நெடுந்தூரப் பயணம் செய்யும் ஒருவன், தான் போய்ச் சேரும்வரை பிக்குகள் யாருமே ஏறிவிடக் கூடாது என நினைத்துக்கொண்டே பிரயாணம் செய்வான். ஆனால், நடுவில் எப்படியும் பிக்குகள் ஏறிவிடுவார்கள். இரண்டுக்கு மேற்பட்ட பிக்குகள் ஒரே சமயத்தில் வந்தால், சிலவேளைகளில் யாருமே மேலதிக பிக்குகளுக்கு இடம்கொடுப்பதில்லை. பலர் பிக்குகளை நேராகப் பார்க்காமல் வேறெங்கோ பார்த்தபடி இருப்பார்கள். மதகுருமாருக்கு சீற் ஒதுக்கியவனே உணர்வுகள் ஏதுமற்று வாழ்ந்த Bஇன் இனத்தவரை, உணர்வடையச் செய்த மொழிச் சட்டத்தையும் ஏற்படுத்தியவன். ஒரு பஸ்சில் இரண்டு பிக்குகள்தான் ஏறலாம் என்ற சட்டத்தையும் அவன் கொண்டு வந்திருக்கலாம். ஏனோ அந்த 'ஒக்ஸ்போட்' மூளைக்கு, அது ஏறாமல் போய் விட்டது.

முன்பெல்லாம் பௌத்தபிக்குகள் மொட்டை அடித்திருப்பார்கள். இப்போதெல்லாம் அரைக்கால் அங்குலத்திற்கு மயிர் வளர்க்கிறார்கள். அவர்களைப் பார்க்கும் போதெல்லாம், தனது முதல் பொதுப் பரீட்சைக்கென தபால்- தந்தி திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டையில் இருக்கும் செல்லரித்துப் போன புகைப்படமே, Bற்கு ஞாபகம் வருவது வழக்கம். அந்தப் பரீட்சை பாஸ் பண்ணியதற்குப் பின்னரே, அவனது அப்பா தலைமயிரை அவனிஸ்டத்திற்கு வளர்க்க அனுமதித்தார். ஆனால் B மயிர்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வளர்க்கத் தொடங்கி இரண்டு ஆண்டுகளுக் குள், அவனுக்கு மயிர்கொட்ட ஆரம்பித்து விட்டது.

B கொட்ரொயில் துணியிலான தொப்பி அணிந்திருந்தான். Bற்கு முன் வழுக்கை விழுந்து, பின்னால் முடி நீளமாகத் தொங்கிக் கொண்டிருந்தது. பிரயாணங்களின்போது யன்னல்களால் வரும் பேய்க்காற்றால் தலை மயிர் சிக்குப்பட்டு, Bயைப் பார்க்கச் சகிக்க முடியாத தோற்றம் கொண்டவனாக்கிவிடும். இதனால் பிரயாணங்களின்போது, அது முடியும்வரை தொப்பியை B கழற்றுவதே யில்லை.

பிக்குகள் பஸ்சிலிருந்து கீழே இறங்க வில்லை. உள்ளுடை ஒன்று அணிந்து, மேலே சீலையால் போர்த்தியிருந்தனர். சாதாரண மாக பிக்குகள் அணியும் காவி உடையின் நிறத்தைவிட, இது கடுமையான நிறத்திலிருந் தது. அவர்கள் பிரதானபிரிவைத் தவிர்ந்த வேறொரு பிரிவைச் சேர்ந்தவர்கள் போலும்.

தொடர்ந்தும் டிரைவர் கண்ணாடியில் தனது முகத்தைப் பார்த்தபடி இருந்தான்.

இரண்டு பேர் பஸ்சில் ஏறி, அதனைச் சோதனையிட்டனர். B வந்த பஸ்சிற்கு முன் வந்த பஸ் ஒன்று இன்னும் சோதனையிடப் பட்டுக்கொண்டே இருந்தது. பாலத்தின் மறுபக் கத்திலும் வாகனங்கள் சோதனையிடப்பட்டுக் கொண்டிருந்தன. இவர்கள் வந்ததிலிருந்து, எதிர்த் திசையிலிருந்து நான்கு பஸ்கள் வந்து விட்டன. பாலத்தின் மறுகரையில் சோதனையி டுபவர்கள், இவர்களைவிட தொழில் தேர்ச்சி பெற்றவர்கள்தான்.

டிரைவர் கீழே இறங்கி கொன்டக்ரர் நின்ற மரத்தின் பக்கமாகப் போனான். அவனிடம் ஏதோ சொல்லிவிட்டு பற்றை ஒன்றுக்குள் சென்று மறைந்தான். சிறுநீர் கழிக்கப் போகிறான் என B நினைத்துக்கொண்டான். டிரைவர் மடிப்புக் கலையாத வெள்ளைச் சேட் அணிந்திருந் தான். சாறம் உடுத்திருந்த அவன், சேட்டை அதற்குள் விட்டு, மெல்லிய 'பெல்ட்' ஒன்றை சாறத்தின் மேல் கட்டியிருந்தான். சேட்டின் கைகள் முழுமையாக விடப்பட்டு, பட்டின் செய்யப்பட்டிருந்தது. அவனது உடையின் தோற்றம், சோதனையிடுபவர்களது இனத்த வன் அவன் என எடுத்துக்கூறியது. அவர்களில் சிறிய உத்தியோகத்திலிருப்பவர்கூட மிகச் சீராகவே உடை உடுத்துவர். சீதனத்தொல் லைகள் அவர்களிடம் இல்லை. மிச்சம்பிடிக் கத் தேவையில்லை. உழைப்பு முழுவதையும் செலவு செய்வர். காசு மிஞ்சினால் உல்லாசப் பிரயாணம் போவர்.

பஸ் நிற்பாட்டப்பட்டிருக்கும் பகுதி சிகப்பு மண்ணாலானது. பக்கத்தில் ஒரு பெரிய நதி மண்ணிறத்தில் கரைபுரண்டு ஓடிக்கொண் டிருந்தது. நதி போய் ஒரு துறைமுக நகரிற்கு அண்மையில் விழுகிறதாம். நதி, சோதனை இடுபவர்களின் பகுதியில் ஆரம்பிக்கிறது. இந்தப் பாலம் இருக்கும் பகுதியும் நதி விழும் பகுதியும் Bயினது இனத்தவரது. அப்பகுதி களையும் சோதனையிடுபவர்களின் இனத் தவர்கள் அபகரிக்க முயல்கின்றனர். நதி யைப் பார்த்தபோது தனது இனத்தைச் சேர்ந்த ஒரு கவிஞன் பாடிய கவிதை Bற்கு நினைவுக்கு வந்தது.

'.....
தொங்குகின்ற நீள்பால
காலடிக்குக் கீழாக
மண்கலங்கத் தான் கலங்கி
மஞ்சள் நிறத்தோடு
மௌனம் உறைகின்ற
நெடுமுங்கிற் கரைதொட்டு'

நதிக்கு மேல் உள்ள பெரிய பாலம் இரட்டை வேலை செய்கிறது. புகையிரதங்களும், மோட் டார் வாகனங்களும் போவதற்கு வசதியான முறையில் அது அமைக்கப்பட்டிருந்தது. புகை யிரதங்கள் போகும்போது மற்ற வாகனங்கள் தடுத்து வைக்கப்படும். நாளொன்றிற்கு எட்டு பசஞ்சர் வண்டிகளும், நான்கு கூட்ஸ் வண் டிகளும் அதனால் பிரயாணம் செய்யும். மற்ற நேரங்களிலெல்லாம் மோட்டார் வாகனங்கள் தான் பாலத்தால் போகும்.

B பாலத்தைப் பார்த்தான். அதில் டேவிட் எஞ்சினியர் 1930இல் கட்டினார் என ஆங் கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. B வந்த பஸ் சிற்கு பின்வந்த பல கார்கள் சோதனை யின்பின் பஸ்சைத் தாண்டிப்போய்க் கொண்டி ருந்தன. இரு சோதனையிடுபவர்கள் அந்த வேலையைச் செய்து கொண்டிருந்தனர். யாரும் தடுத்து வைக்கப்படவில்லை. இடையிடையே வரும் வாகனங்களைத் தவிர அந்தப் பிரதே சம் சூனியமாகவேயிருந்தது. அப்பகுதி முழு வதும் பள்ளமானது. சரியான மழை பெய் தால் அப்பகுதியெல்லாம் வெள்ளத்துள் அமிழ்ந் துவிடும். மார்கழி மாதத்தின் கடைசி 10 நாட்களும் மோட்டார் போக்குவரத்துத் தடைப் பட்டிருக்கும். சமீபத்தில் மழை பெய்தது போலிருந்தது. ரோட்டின் இரண்டு பக்கங்களிலும் உள்ள பள்ளங்களிலும் நீர் தேங்கியிருந்தது.

பஸ்சை இவ்வளவு 'லேட்' ஆக்குகிறார் களே என ஒரு பயணி. தனது மொழியில் குறைபட்டுக்கொண்டிருந்தான். பாலத்தடியால் பார்க்கும்போது உயரத்தில் தெரியும் புகை வண்டிப் பாதையால் புகையிரதம் ஒன்று சென்று கொண்டிருந்தது. Aயினதும் Bயினதும் கண் கள் சந்தித்துக்கொண்டன. B 'புகையிரதத் தில் வருகிறேன்' என்றுதான் சொல்லியிருந் தான். A தான் 'அடுத்து வரப்போவது சரக்கு வண்டி. 30ற்கு மேற்பட்ட ஸ்ரேசன்களில் அது நிற்கும். நீங்கள் வீடு போய்ச்சேர இரவாகி விடும். பஸ்சில் ஒரு இடம் இருக்கின்றது. ஒன்றாகவே போகலாம்' எனக்கூறி அவனை வற்புறுத்தி பஸ்சில் அழைத்து வந்தவர்.

வெள்ளம் வரும் நாட்களில் மோட்டார் போக்கு வரத்து தடைப்பட்டிருக்கும். அந்நாட்களிலும் புகையிரதம் ஓடும். அரை மைல் நீளமிருக் கும் அந்தப் பள்ளப் பகுதியில், நூறு அடிக்கு ஒன்றாக நல்ல அகலத்தில் 30 அடி உயர மான கொங்றீட் சுவர்கள் கட்டப்பட்டு, அவற் றின்மேல் தண்டவாளம் போடப்பட்டிருந்தது. வெள்ளம், மோட்டார் செல்லும் பாதையை மூடி ஓடும்போது புகையிரதம் கம்பீரமாகச் (மெது வாகத்தான்) செல்வதைப் பார்ப்பது என்பது, ஒரு மறக்கமுடியாத நிகழ்வாகும். புகையிரதத்தில் இருந்து வெள்ளம் மூடியிருக்கும் ரோட்டைப் பார்த்தால் திகிலே வரும். வெள்ளத்தால் பிடுங்கி எறியப்பட்ட காட்டுமரங்கள், மாடுகள் ஏன் சில வேளைகளில் யானைகள்கூட வெள் ளத்தில் அள்ளுண்டு போகும்.

முன்னர் வந்த பஸ்சை சோதனையிட்டுக் கொண்டிருந்த எட்டுப்பேரும், Aயும் Bயும் வந்த பஸ் அருகே வந்தார்கள். எல்லோரையும் வரிசையாக நிற்கச் சொன்னார்கள். ஒன்றா கவே வந்த Aயும் Bயும் அடுத்தடுத்து நிற்க வில்லை. Aயிலிருந்து எட்டாவது ஆளாக B நின்றான். Aயினது ஊர்க்கவிஞன் ஒருவன் சோத னைச் சாவடி பற்றிப் பாடிய கவிதையின் சிலவரிகள் Bயின் நினைவிற்கு வந்தன. இங்கு மட்டுமல்ல, இனப்படுகொலைகள் நடக்கும் எந்தவொரு நாட்டின் சோதனைச் சாவடி களில் நிற்கும் இராணுவத்தின் தோற்றமும், இப்படித்தான் இருக்கும்.

'.....
கோடிமுத்த மீசையின்
கீழிறக்கச் சுழிப்பில்
வரவழைத்த கடுகடுப்பு'

முன்பு நின்ற பஸ்சில் யாரும் தடுத்து வைக்கப்படவில்லை. ஒவ்வொருவராக அடை யாள அட்டையுடன் வருமாறு சோதனை இடு பவர்களில் தலைமைக்காரன் போலத் தோற்றமளித்தவன் சொன்னான். முதல் ஒன்பது பேரும் மேலெழுந்தவாரியாக சோதிக்கப்பட்டனர். காற்சட்டையின் இருபுற மும் ஒருவன் தட்டிப்பார்த்தான். பயணிகளின் இருமருங்கிலும் சோதனையிடும் மற்றவர்கள் நின்றனர். Aயின் முறைவந்தது. சூட்கேசை ஏற்கெனவே திறந்து வைத்தபடி நின்றார் அவர். சோதனை இடுபவன் சூட்கேசை நன்றாகத் துருவிப் பார்த்தான். உடுப்புக் களும், குடும்பப் படங்களுமிருந்தன. A, Bயை விட பத்துவயது கூடியவர். தலைநகரில் நகைத் தொழில் செய்பவர்.

'எங்கிருந்து வருகிறாய்?' சோதனை யிடுபவன் Aஐக் கேட்டான்.

A பதில் கூறினார். கவிஞர் கூறிய கடுமை, சோதனையிடுபவனின் முகத்தில் தெரிந்தது.

அடுத்து சோதனை செய்யப்பட்டவர்களி டம் கேள்விகளே கேட்கப்படவில்லை. பார்வைகூட சாதாரணமாகவே இருந்தது. ஓர் அழகான பெண்ணிடம் 'சிரமம் கொடுத்ததில் கோபமா?' எனச் சோதனை செய்பவன் கேட்டான். அவள் B யிலிருந்து மூன்று பேரு க்கு முன்நின்றவள்.

அவளும் பல் எல்லாம் தெரிய 'பர வாயில்லை' என்றாள்.

இவனது முறை வந்தது. அறிமுக அட்டை யை B நீட்டினான்.

Bயின் சொந்த இடத்தைக் கேட்டு அங் கிருந்தா வருகிறாய்? என சோதனையிடு பவன் கேட்டான்.

'ஆம்' என்றான் B.

Bஇன் இனத்தவரின் விடுதலைக்காக உழைக்கும் போராளிகளின் தலைமையகம் அங்குதானிருக்கிறது.

அவனது ரிக்கெற்றை வாங்கிப் பார்த்தான் சோதனையிடுபவன்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







அதிலிருந்த ஊரின் பெயரைத் தனக்குள் கூறியபடி, 'ஏன் அங்கு போகிறாய்' என்றான் சோதனை இடுபவன். தான் அங்கு வேலை பார்ப்பதாக B கூறினான். வேலையின் பெயரையும் சொன்னான்.

அதைக் கேட்காதவன் போல் Bஇன் காற்சட்டைப் பொக்கற்றுக்களைத் தடவிப் பார்த்தான். சைகை செய்து கொண்டக்ரர் நின்ற மரத்தடியில் Bயைப் போய் நிற்கச் சொன்னான். B சோதனைக்காரனுடன் வாதாடுவதுபோல் ஏதோ சொன்னான். மிகவும் கண்டிப்பான குரலில் 'நான் சொன்னபடி செய்' என்றான் சோதனை செய்பவன்.

பதினைந்து நிமிடத்தில் சோதனைகள் யாவும் முடிவுக்கு வந்தன.

பஸ் கொன்டக்ரர் Bயைத் திரும்பத் திரும்பப் பார்த்தபடி பஸ்வரை சென்றான்.

சோதனைக்காரரில் ஐவர் Bயிடம் வந்தனர்.

'உன்னைத் தீவிரவாதி எனச் சந்தேகிக்கிறோம்' என்றான் Bயைச் சோதனை செய்தவன்.

மற்றவர்கள் அடுத்து வந்த லொறி ஒன்றைச் சோதனையிட அங்கேயே நின்றனர்.

'பஸ்சில் யாரையாவது உனக்குத் தெரியுமா?' என்றான் இன்னொருவன்.

ஒருவரையும் தெரியாதென்றான் B. Aயையும் தன்னிலைக்குள்ளாக்க B விரும்பவில்லை. A யன்னல் அருகேயிருந்தான். Aயிடம், 'Bயைத் தெரியுமா?' எனச் சோதனையிடுபவன் கேட்டான். ஒரு செக்கனில் தெரியாது எனக்கூறுமாறு, தலையால் சைகை காண்பித்தான் B. Aயும் அதனைச் சட்டெனக் கண்டு கொண்டார். Aயும் Bயும் வெவ்வேறான இடங்களிலிருந்து வந்ததைக் கண்டுகொண்டவன், பஸ்சைப் போகுமாறு கட்டளை பிறப்பித்தான்.

A தப்பித்ததே Bக்கு திருப்தியாக விருந்தது. வீட்டைவிட்டுப் புறப்படும் போது, ஆசை மாமி கூறியது Bக்கு ஞாபகம் வந்தது. 'மக்' என ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டிருந்த இந்த பிறவுண் ரீசேட்டும், கொட்ரொயில் காற்சட்டையும் பயணத்திற்கு உகந்ததுதானா?' என அவள் கேட்டிருந்தாள். அது தான் தனக்குத் துன்பத்தைத் தந்து விட்டதோ என B யோசித்தான். பஸ்சில் பலர் T சேட்டுக்களை (B அணிந்திருந்ததைவிடக் கருமையான நிறங்களில்) அணிந்திருந்தனரே! இது வேறு ஒன்றால் உண்டானது. இரண்டு காரணங்கள் அதற்கு.

1) அவன் இளைஞன்

2) அவன் சோதனை இடுபவர்களின் இனத்தைச் சேர்ந்தவன் அல்ல.

அப்போதும் பஸ் போகவில்லை. Bயை விட்டு விடுவார்கள் என்ற நம்பிக்கையில் கொன்டக்ரர் இவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். 'சரி நீங்கள் போகலாம்' பஸ்சும் கால்மணி நேரத்திற்கு மேல் தாமதப்பட்டிருக்கிறது என்றான் Bயைச் சோதனை செய்தவன்.

'அப்படியானால் அவர்' என்றான் கொன்டக்ரர் சோதனையிட்டவனிடம், Bயை மீட்டு விடவேண்டும் என அவன் முனைந்தது தெரிந்தது.

'நாங்கள் அவனை பொலிசில் ஒப்படைக்கிறோம்.'

'உங்களுடைய பொருட்கள் ஏதாவது பஸ்சில் இருக்கிறதா?' என கொன்டக்ரர் Bயைப் பார்த்துக்கேட்டான்.

B கொண்டுவந்த மாம்பழப்பெட்டியை A எடுத்துப் போவார். B 'கைப்பையைத் தவிர வேறு எதுவுமில்லை' என்றான்.

பாலத்தடியிலிருந்த புகையிரதத்திற்கு சிக்னல் கொடுக்கும் அறை அருகே அவனைக் கொண்டுபோய் நிறுத்தினர். சிக்னல் கொடுக்கும் அறையிலிருந்த இருவர், அவனை தனி வகையாகப் பார்த்தனர். ஒருமைப்படுத்தப்பட்ட உடனே அவன் அணிந்திருந்த உடைகள் மற்றவர்களுக்கு ஏற்படுத்திய உணர்வுகள் Bற்குப் புரிந்தது. Bகடும் நிறங்களில் உடைகள் அதிகம் அணிவதில்லை. பயணங்களுக்கென்று ஒன்றிரண்டு வைத்திருந்தான். B அப்போதும் நம்பிக்கையை இழக்கவில்லை. சிறிது நேரம் காக்கவைத்துவிட்டு வேறு பஸ் ஒன்றில் தான்போகும் இடத்திற்கு தன்னை அனுப்பிவிடுவார்கள் என B நினைத்தான். 15 நிமிடங்களில் அவன் வந்த பஸ் போனதிசைக்கு எதிர்த்திசையிலிருந்து ஜீப் ஒன்று வந்தது. ஜீப்பை சோதனையிடுபவர்கள் மறித்தனர்.

'என்ன?' என ஜீப்பின் முன் சீட்டிலிருந்த இன்ஸ்பெக்ரர் கேட்டான். 'பயங்கரவாதி எனச் சந்தேகித்து பிடித்துள்ளோம்' என்றான் சோதனை இடுபவன்.

'பஸ்சில் வந்தான்' Bஇனது ஊரின் பெயரைச் சொல்லி, அங்கிருந்து பல பஸ்களில் மாறி மாறி வந்தானாம் என்றான் வேறொருவன்.

'அப்படியானால் இது பயங்கரவாதக் கேஸ் தான். உடையைப் பார்த்தாலே தெரிகிறது' என்றான் இன்ஸ்பெக்ரர்.

B அந்த ஜீப்பில் ஏற்றப்பட்டான். பின் சீற்றொன்றில் இருக்கச் சென்றவனை, ஒருவன் கால்வைக்கும் இடத்தில் இருக்கும் படி சைகைமூலம் காட்டினான். கால் வைக்கும் இடத்தில் முழங்கால்களை கைகளால் கட்டியபடி B அமர்ந்தான். தொப்பியை வலது பக்கத்திலிருந்த ஒரு பொலிஸ்காரன் தட்டி விட்டான்.

'ஆ! மொட்டைத் தலையன்' என்றான் வலப்பக்கத்தில் இருந்த மற்றொருவன்.

'பொலிஸ் ஸ்ரேசனுக்கு வா. உனக்கு நல்ல சாப்பாடு தருகிறோம்' என முன் சீட்டில் டிரைவருக்கு பக்கத்திலிருந்த இன்ஸ்பெக்ரர் சொன்னான்.

'அமைதியாக இடப்புறச் சீற்றில் தனியாக விருந்த பொலிஸ்காரனை, தன்னில் இரக்கம் வைக்கும்படி இறைஞ்சுவது போன்றபாவனையுடன் B பார்த்தான். சாது போலிருந்த அந்தப் பொலிஸ்காரன் கைகளை விறைத்தது போலாக்கி ஓங்கி ஓர் அடி கொடுத்தான். அடி Bஇன் கழுத்தின் பின் பகுதியில் விழுந்தது.

'அம்மா' என B வீரிட்டான். இப்போது பொலிஸ்காரர் மூவரும் மாறிமாறி சப்பாத்துக் கால்களால் Bயை உதைத்தனர். Bமுன்பு போல கத்தாமல் அடிகளைத் தாங்கிக்கொண்டான்.

B பிடிபட்ட பாலத்தடியிலிருந்து அப்பகுதிக்குரிய பொலிஸ் நிலையம் பன்னிரண்டு மைல் தொலைவிலிருந்தது.

'நேற்று உங்களுடைய ஆட்கள் எங்கள் பொலிஸ்காரரை என்ன செய்துள்ளார்கள் என்று தெரியுமா?' என முன் சீற்றிலிருந்த சாரதி கேட்டான். அவன் சாதாரண உடையை அணிந்திருந்தான்.

Bக்கு எதுவும் சரியாகப் புரியவில்லை. ஆனால் மனதுக்குள் ஏதோ அசம்பாவிதம் ஒன்று நேற்று நடைபெற்றிருக்கிறது என Bக்குத் தெரிந்தது.

'டேய் நான்கு பொலிஸ்காரரின் மனைவிமார் கைம்பெண்கள் ஆகிவிட்டார்களடா. எம்மவரது துப்பாக்கிகளையும் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். வா ஸ்ரேசனுக்கு. அவர்களது மனைவிமார் அங்கு வருவார்கள். உனக்கு அவர்களைக்கொண்டு செருப்பால் அடிப்பிக்கிறேன்' என்றான் இடது புறத்தில் தனியாகவிருந்த பொலிஸ்காரன்.

தொடரும்.....



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

# தமிழ் இனத்தின் தனித்துவத்தை அழிக்கும்... கல்விக் கொள்கையை மாற்றுவதன் மூலமே எங்களது இலட்சியத்தை அடைய முடியும்!

www.tamilarangam.net

எமது மாணவர்களின் கல்வியை அழிப்பதன் ஊடாக எமது இனத்தின் தனித்துவத்தை அழிக்க நினைக்கும் எதிரியின் எண்ணங்களுக்கெதிராக எமது தேசிய வாழ்வையும் வளத்தையும் மேம்படுத்தும் வகையிலான கல்வியை நாம் உருவாக்க வேண்டும். காலனித்துவத்தின் சுரண்டல்த் தேவைக்காக அமைக்கப்பட்டதும், சிங்களப்பேரினவாதத்தின் கருத்துருவாக்கத்தைத் திணித்து எமது இனத்தை அழிக்க நினைக்கும் கல்விக்கொள்கையை எமது மாணவர் சமூகம் மாற்றியமைக்க வேண்டும். இவ்வாறு மாற்றியமைப்பதன் ஊடாகவே எமக்கான இலட்சியத்தையும் எதிர்கால வாழ்வையும் நாம் உருவாக்க முடியும்.

விண்ணையும் மண்ணையும் இணைத்து நிற்கும் புதிய நூற்றாண்டில் மலர்ந்துவரும் நவீன அறிவியல் போக்கிலே உலகம் வலம் வருகின்ற வேளையில், தமிழீழ மாணவர்கள் சுதந்திரமான வாழ்வின் அவசியத்தினையும் மறுக்கப்பட்ட தங்களது உரிமைகளையும், சவால்களையும், அறைகூவல்களையும் வென்றெடுப்பதற்கான புரட்சிகரமான நாளாக இன்றைய எழுச்சி நாள் அமைந்து விடுகின்றது.

புதுமையான கனவுகளுடன் புரட்சிகரமான சிந்தனைகளோடு வாழ்வியலைத் தீர்மானிக்க வேண்டிய மாணவர்சக்தி அதனைப் பெற்றுக் கொள்ள முடியாமல், மறுக்கப்பட்ட ஒன்றாகவே தொடர்ந்தும் இருந்து வருகின்றது. மாற்றங்களை உருவாக்கும் மாணவர் சமூகம் தனது சொந்தக் காலில் நின்று தமது எதிர்காலத்தின் முன்னேற்றத்திற்குத் தடையாகவுள்ள அனைத்துத் தடைகளையும் உறுதியுடன் வென்றெடுப்பதன் ஊடாகவே மாணவர் சமூகம் தங்களது ஆரோக்கியமான இலக்கினை அடைந்து கொள்ள முடியும் என்பது இன்றைய மாணவர் எழுச்சி நாளின் முதன்மையான செய்தியாகின்றது.

மனித வளர்ச்சிக்கும் சமூக மேம்பாட்டிற்கும் அடிப்படையான கல்விச் சுதந்திரம் தமிழ் மாணவர்களுக்குக் கேள்விக்குறியாகவே நீண்ட காலம் இருந்துவருகின்றது. அறியாமையில் இருந்து விடுபட்டு தனது வாழ்க்கை, தான் வாழும் சூழல் பற்றி அறிந்து கொள்வதற்கும், ஆற்றலை வளர்த்து, ஆளுமையை மேம்படுத்தி, சுதந்திரமாய்ச் சிந்திக்கும் உரிமை இந்த மண்ணிலே வாழுகின்ற ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. இந்த மூலாதார உரிமையை தமிழ் மாணவர்கள் இழந்துவிட்ட நிலையில் அதனைப் பெற்றுக் கொள்வதற்காக குரல் கொடுப்பதுடன் இந்நாளிலே ஒன்று திரண்டு செயற்படுவது அவசியமாகின்றது.

விஞ்ஞான தொழில்நுட்பத் துறைகளில் உண்டான புரட்சிகர மாற்றங்களும், அம்மாற்றங்களுக்கு அமைவாக சர்வதேச மாணவர்கள் உள்ளீர்க்கப்பட்டு, மாறிவரும் உலகின் தேவைகளுக்கேற்பத் தம்மை மாற்றிக் கொண்டுள்ளமையை உணர முடிகின்றது. கல்விக்கான வாய்ப்புக்களும், வசதிகளும் தேடல்களும் தமிழ் மாணவர்களுக்கு வழங்கப்படாது மறுப்பதும் இவை அனைத்தையும் முழுமையாகப் பெற்றுக் கொள்ளும் சிங்கள மாணவர்கள் கல்வியில் பண்புரீதியாகவும், அளவுரீதியாகவும் அடைந்து கொள்ளும் வளர்ச்சிகள் எங்களது மாணவர்களின் மனங்களில் நீங்காத வடுக்களாகவே தொடர்கின்றன.

"மாணவம் மதிக்கப்படும்போதுதான் மாண்புறும், மதிகெட்டவரால் மிதிக்கப்படும்போது மணந்தராது" என்ற கல்வியியல் கோட்பாட்டுக்கு அமைவாக சிங்கள ஆயுதப்படைகளின் இனவாதச் செயற்பாடுகளாலும் பொருளாதார நெருக்கடிகளாலும் எமது மாணவர்களின் வளங்கள் அழிக்கப்படுகின்றன. இதன் காரணமாக எத்தனையோ இடர்பாடுகளின் மத்தியில் வாழ்ந்து வரும் தமிழ் மாணவர்கள் தமக்கான அடிப்படைக் கல்வியைத் தொடர வேண்டியுள்ளது. தங்களது ஆர்வத்தினாலும், திறமையினாலும், கடும் உழைப்பினாலும் எடுக்கப்படும் முயற்சிகள் வெட்டுப்புள்ளித் திட்டத்தினூடாக உயர்கல்வி வாய்ப்பினை எமது மாணவர்கள் இழக்கின்ற சம்பவங்கள் தொடர்கின்றமை வேதனைக்குரியது. உயர்கல்வி வாய்ப்புக்கள் மறுக்கப்படுவதுடன் தமக்கான தொழில் சார் கல்விகளும், வெளிநாட்டுக்கல்விகளும் முற்றாக மறுக்கப்படுகின்ற வாய்ப்புக்களும், தாம் பெற்ற கல்விக்கமைவாக ஏற்ற தொழில் வாய்ப்பினை கூடப் பெற்றுக் கொள்ள முடியாமல் எமது மாணவர்கள் காணப்படுவது அதிகரித்துள்ளது.

கல்வியில் சமவாய்ப்புச் சந்தர்ப்பம், கட்டாயக்கல்வி, என்ற சுலோகங்கள் வெறும் கொள்கைப் பிரகடனங்களாகவே தமிழர் பகுதியில் காணப்படுகின்றது. கல்விக்கான அடிப்படை வசதிகளில் பாரபட்சமும் தடைகளையும் விதிக்கும் இனவாத அரசு மாணவர்களைக் கைது செய்தல், சிறையில் அடைத்தல், காணாமற் போதல், கொலை செய்தல், பாலியல் வல்லுறவுகளை மேற்கொண்டு புதைகுழிகளில் புதைப்பது போன்ற அழிப்பு முயற்சிகளை தொடர்ச்சியாக எம்மண்ணில் மேற்கொண்டு வருகின்றது. இன அழிப்பு, ஆக்கிரமிப்பு என்ற போர்வையில் நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகள், உயர்கல்வி நிறுவனங்கள் இராணுவ முகாம்களாக மாற்றப்பட்டுள்ளதுடன் எறிகணை வீச்சுக்களாலும் விமானக்குண்டு வீச்சுக்களாலும் பாடசாலையின் பௌதீகச் சூழலும் வளங்களும் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு வருகிறது.

பாடசாலை வளாகத்தின் உள்ளும், வெளியிலும், வீதிகள் தோறும் சோதனை நிலையங்களைப் போட்டு, மாணவர்களைக் கல்வி கற்க முடியாதவாறு சிங்கள அரசும் இராணுவமும் தொடர்ச்சியாகத் திட்டமிட்டு செயற்பட்டு வருவதால் அவர்களின் கல்வி வாய்ப்பு என்பது கேள்விக் குறியாக உள்ளது.

தமிழ் மாணவர்களின் கல்வியில் காட்டப்படும் உரிமை மறுப்பிற்கும், பாரபட்சத்திற்கும் எதிராக எமது மாணவர்களும் போராட வேண்டியது காலத்தின் தேவையாகிவிட்டது. மாபெரும் சக்தியான மாணவர் சக்தி இவ்வெழுச்சி நாளில் ஒன்றுதிரண்டு எழுவதன் ஊடாக மனித விடுதலை, மனித சுதந்திரம் என்பனவற்றை அடைந்து கொள்ள முடியும் என்ற வரலாற்று உண்மைக்கு உயிர் கொடுப்போம்.

**(05.06.2001 அன்று தமிழீழ மாணவர் எழுச்சி நாளை ஒட்டி தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையிலிருந்து....)**

## மாணவரே! எழுந்திடுங்கள்
## மண்மீட்கத் துணிந்திடுங்கள்

**தமிழீழத்து மாணவர்**
**தாயகத்தின் விழியானவர்**
**வருங்கால ஈழமதை**
**வாழ வைக்கும் ஒளியானவர்.**
**தேசத்தின் சிறப்புக்காய்**
**தினமுழைப்பவர் இவரே.**
**தேகத்தை வருத்தியிப்போ**
**தொண்டாற்றுபவரும் இவரே.**
**பொங்குதமிழ் என்றெல்லாம்**
**எங்கும் எழுந்தனர்.**
**செந்தமிழ் நிலைபெறலே**
**சிறுத்தையாகிப் போர் புரிபவர்.**

**மானமது காத்திடவே**
**மாணவரெத்தனை பேர் புலியாகி**
**மண்ணிற்காய் இறந்தனர்.**
**ஈழத்து மாணவர்கள்**
**எழுதுவர் புதுவரலாறு**
**காலத்தை வென்றிவர்கள்**
**புனைவர் புதுப் புறநானூறு.**
**மாணவர் சக்தியெங்கள்**
**மண்மீட்க எழுந்திடட்டும்.**
**பாரிலிந்தத் தமிழீழம்**
**விரைவாக ஒளிர்ந்திடட்டும்.**


**யோ.புரட்சி (போராளி)**





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சென்ற இதழ் தொடர்ச்சி...

# குழந்தைப் பரு

சரியான முறையில் கணக்கிட்டால் 8 வாரங்களில் வட்டியுடன் சேர்த்து முதலையும் கட்டலாம் என்ற நிலை இருப்பினும், வட்டிக்கு மட்டும் இந்தக்கூலி கழிக்கப்படும் நிலையில் பரம்பரை பரம்பரையாகவே அடிமைத்தொழில் தொடருவதற்கு மக்களின் வறுமை, அறியாமை, பண்பாடு போன்றவையே காரணமாக அமைகின்றன.

குழந்தை உழைப்பைச் சுரண்டும் இன்னோர் முக்கிய தொழில் வீட்டுப்பணி, உழைப்பு மட்டுமன்றி பாலியல்ரீதியாகவும் சுரண்டப்படும் ஆபத்து இவர்களுக்கு அதிகம்.

சுரண்டலானது சிலசமயம் தேசிய எல்லைகளையும் தாண்டி உள்நுழைந்துவிடுகின்றது. தனது குழந்தைகளின் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்காக ஏழைநாட்டுக் குழந்தைகளைப் பலியாக்கும் பணியிலும் அமெரிக்காவே முன்நிற்கின்றது. ஹொண்ரோஸ்-காற்சட்டைகள், பிறேசிலின் தோடம்பழச்சாறு, தாய்லாந்தின் கரடிப்பொம்மைகள்தான் அமெரிக்கக் குழந்தைகளுக்குப் பிரியமானவை. பிஞ்சு விரல்களின் அடையாளம் பதிந்திருந்தால் மட்டுமே 700 டொலர்களுக்குள் மிக மலிவாக நிலவிரிப்புக்களை வாங்கலாம் என்பதுதான் அமெரிக்கர்களின் கருத்து. இந்தோனேசியாவில் இயங்கும் அமெரிக்காவின் 'நைக்' கம்பனியில் 10 வயதுக்குட்பட்ட குழந்தைகளே பாதணிகளைச் செய்யும் தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்றனர் எனவும் உலகளாவிய அளவில் குழந்தை உழைப்பைச் சுரண்டுவதில் அமெரிக்கக் கம்பனிகளே முன்னணியில் நிற்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

**பெண்ணுக்குப் பதில் குழந்தையை குறிபார்க்கும் மனிதவக்கிரங்கள்:**

சிறுவர் விற்பனை, சிறுவர் விபச்சாரம், சிறுவர் ஆபாசப்படத் தயாரிப்பு, போதைப் பொருள் வியாபாரம் அனைத்தும் இணைந்து இன்று உலகளாவியரீதியில் வளர்ச்சியடைந்துவரும் தொழில்துறையாக மாறியிருப்பது பலருக்கு அதிர்ச்சியூட்டும் ஒன்றாகவே இருக்கும். வறுமை, குடும்ப வன்முறை, குழந்தைகள் மீதான இம்சை என்பன இத்தொழில் அதிகரிக்கக் காரணமாகும். ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா, ஐரோப்பா, தென் கிழக்காசிய நாடுகளில் சிறுவர் விபச்சாரம் நிறுவனமயப்படுத்தப்பட்ட தொழிலாக விளங்குவதுடன் இலட்சக்கணக்கான சிறுவர்கள் இதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தமது பிள்ளைகளை சிறந்த முறையில் வளர்ப்பதற்கு எத்தனையோ திட்டங்களையும், அணுகுமுறைகளையும் உருவாக்குகின்ற பணக்கார நாட்டினர்தான் சிறுவர் விபச்சாரத் தொழிலின் வாடிக்கையாளர்களாக இருக்கின்றனர் என்பது கேலிக்குரிய ஒன்று. பால்வடியும் முகங்களும் கள்ளமற்ற சிரிப்பும் மாறாமலேயே, 'தமக்கு என்ன நடக்கின்றது, தாம் செய்வதென்ன' என்ற அறிவோ உணர்வோ சிறிதுமின்றி மனித வக்கிரங்களின் பலிக்கடாக்களாக பயன்படும் அவலம் இன்றைய உலகைப் பீடித்திருக்கும் அபாயகரமான நோயாகும்.

இயற்கை அழகால் உல்லாசப் பிரயாணிகளை ஈர்ப்பதில் கணிசமான வருவாய் ஈட்டும் சிறீலங்கா, தான் பாலியல் சுற்றுலாவிலும் உலகின் கவனத்தை ஈர்க்கின்றது. இங்கும்கூட பாலியல் வேட்டைகளில் ஐரோப்பியர் மட்டுமன்றி ஆசியர்களும் பாலியல் சுற்றுலாவிற்காக குவிந்துகொண்டிருக்கின்றனர். கடந்த வருடம் ஏப்ரல்மாத சண்டே ரைம்ஸ் செய்தித்தாளை அலங்கரித்த அரைப் பக்கக் கட்டுரை மனித சமூகம் முழுவதுமே வெட்கித்தலைகுனிய வேண்டிய ஒன்றாகும். சிறீலங்காவில் உள்ள ஹிக்கடுவ என்ற இடத்தில் 6-14 வயதிற்கிடைப்பட்ட சிறுவர்களின் வறுமையைப் பயன்படுத்தி அவர்களை தேர்ச்சிபெற்ற பாலியல் தொழிலாளர் ஆக்கும் வகையில் 3வார செய்முறைப் பயிற்சி (சோடி சோடியாகவும், குழுவாகவும்) அளிக்கப்பட்டு அதற்குச் சான்றுகளும் வழங்கப்படுதல் பகிரங்கமாகவே நடைபெறுகின்றதாம். பயிற்சிக் காலத்திலேயே இவர்களை வைத்து ஆபாசப்படங்கள் தயாரிக்கப்பட்டு பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றது. இந்தச்சான்றுகளை வைத்திருப்பவர்களுக்கு உல்லாசப் பிரயாணிகளிடமிருந்து அதிக கூலி கிடைப்பதால் இந்தப் பயிற்சி வகுப்பிற்குச் செல்லும் சிறுவர் தொகை மிக அதிகம். இதில் நெஞ்சைப் பிழிவது என்னவென்றால், இந்தச் சிறுவர்களின் வருமானத்திலேயே பெரும்பாலான வீடுகளில் அடுப்பு எரிவதன் காரணமாக பெற்றோர்களே தமது பிள்ளைகளை இந்த வகுப்பிற்குக் கொண்டுபோய் சேர்த்து விடுவதுதான்.

வறுமையால் விபச்சாரத்தில் ஈடுபடுவது வறிய நாடுகளின் பண்பாக இருக்கும் அதேசமயம், அதிகூடிய வசதிகளின் காரணமாக விபச்சாரத்தில் ஈடுபடுவது செல்வந்த நாடுகளின் பிரதான பண்பாக இருக்கின்றது. ஜப்பான் இதற்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டு. விதம் விதமாக உடையணியும் ஒரு ஆசைக்காகவே பணத்திற்காக விபச்சாரத்தில் ஈடுபடும் பாடசாலைப் பிள்ளைகளின் தொகை ஜப்பானில் அதிகரித்துச் செல்கின்றது. நடுத்தர வர்க்க ஆண்களின் பாலுறவு சார்ந்த கீழ்த்தர செயற்பாடும், தகப்பன் நாள் முழுவதையும் வேலைத்தளத்தில் செலவழிக்க நவீன பாணியில் உடையணிவது எவ்வாறு என்பதைத் தவிர வளர்ந்துவரும் அறிவியல் தொழில்நுட்பத் துறைகளில் குழந்தைகளின் கேள்விகளுக்குப் பதிலளிக்கத் தெரியாத அம்மாமார்களும் இங்கு சிறுவர் விபச்சாரம் அதிகரிப்பதற்கு காரணம் என்று சொல்லப்படுகின்றது.

**ஆழ வேரோடும் நச்சுவிதைகள்:**

குழந்தைகளை பாலியல் இலக்காகப் பயன்படுத்துபவர்களை அங்கமாகக்கொண்டு உலகளாவிய அமைப்பொன்றின் மையமாக சிறீலங்கா இருப்பது கடந்த வருடமே இனங்காணப்பட்டுவிட்டது. வாடிக்கையாளர்களை இனங்கண்டு அவர்களின் சொந்த நாடுகளில் வைத்தே அவர்களிடம் முற்பணத்தைப்பெற்றுப்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

— அர்த்தநாரீ

# வத்தைப் பாதிப்பது யுத்தம் மட்டுமா?

பணிகளை இந்த அமைப்பு மேற்கொள்ளும். இங்குவந்து உள்ளூர் முகவர்கள் மூலம் சிறுவர்கள் பெறப்படுவர். இதற்காக முகவருக்கு குறிப்பிட்ட தொகை வழங்கப்படும். தொழிலில் ஈடுபடுத்தப்படும் சிறுவர்களுக்கு 200-500 ரூபா மட்டுமே கிடைக்க, மிகுதித் தொகை அவ்வளவும் தொழில் நடத்தும் அமைப்புக்குப் போய்விடும்.

குழந்தைகளைப் பாலியல் பண்டமாகப் பயன்படுத்தும் நிலையிலிருந்து இன்னுமொருபடி மேலே சென்று அவர்களை பலவந்தமாக பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கொலைசெய்யும் தன்மையும் தற்போது பெருகிவருவது

வல்வைப் படுகொலைகளில் தொடங்கி நவாலி, நாகர்கோயில், மந்துவில், சுதந்திரபுரத் தாக்குதல்கள் வரை அரச பயங்கரவாதம் நூற்றுக்கணக்கான குழந்தைகளைப் பலிகொண்டிருக்கின்றது. ஆயிரக்கணக்கானவர்களை அங்கவீனமாக்கியிருக்கின்றது. பெற்றோரை இழந்து அனாதைகளாக்கியுள்ளது. வீடிழந்து, பசிபட்டினியுடன் தெருவோரத்திற்கு தள்ளியிருக்கின்றது. குடும்பப் பாரத்தைச் சுமப்பதற்காக பள்ளிப்பருவம் மறுக்கப்பட்டு







ஜப்பான், பிரிட்டன் போன்ற நாடுகளில் இனங்காணப்பட்டு இருக்கின்றது. கடந்த வருடம் பிரிட்டனில் வைத்து சாராபேனே என்ற 8 வயதுச் சிறுமி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டது தொடர்பாக ஆய்வுகள் மேற்கொண்டபோது பிரிட்டனில் கிட்டத்தட்ட 250,000 பாலியல் குற்றவாளிகள் இருப்பதாகவும் அதில் 110,000 சிறுவர்களை குறிவைப்பதாகவும் தெரியவந்தது.

**சிந்தனையில்தான் மாற்றம் தேவை:**

யுத்தம் நடைபெறும் பெரும்பாலான நாடுகளைப் போன்றே இந்த மண்ணின் குழந்தைகளும் யுத்தத்தின் தாக்கத்தை நேரடியாகவோ மறைமுகமாகவோ அனுபவித்து வருபவர்கள்தான் என்பதை மறுப்பதற்கில்லை. குமுதினிப்படகு,

விளையாடும் வயதிலேயே வியாபாரிகளாக, மீன்பிடிப்பவர்களாக, கூலித்தொழிலாளர்களாக, வீட்டுவேலை செய்பவர்களாக ஆக்கியிருக்கின்றது. ஆனால், குழந்தை உழைப்பை சுரண்டும்வகையில் நிறுவனமயப்படுத்தப்பட்ட தொழில்களோ, அடிமைத்தொழில்களோ இந்த மண்ணில் யுத்தத்திற்கு முன்னரோ பின்னரோ பெரிதாக இனங்காணப்படவில்லை என்பது மனதிற்கு ஆதரவு தரக்கூடிய விடயமொன்றாகும். அதேசமயம், யாருமற்று வீதியில் அலையும் சிறுவர்களைப் பராமரிப்பதற்கென பல பராமரிப்பு இல்லங்கள் இங்கு நிலைகொண்டிருப்பதையும் பல சர்வதேச மனிதநேய அமைப்புக்கள் அறியும்.

மேற்குறித்த தகவல்களில் இருந்து ஒன்றுமட்டும் தெளிவாகத் தெரிகின்றது.

விடுதலைப் போராட்டங்களை நசுக்குவதன் மூலமோ அல்லது முடிவுக்குக்கொண்டு வருவதன் மூலமோ சிறுவர் உலகத்தைக் காப்பாற்றிவிட முடியாது. அருகிக்கொண்டு செல்லும் மனிதத் தன்மையை மீட்டெடுப்பதற்கென பல திட்டங்களும் ஆய்வுகளும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுவதன் மூலமே சீரழிந்துகொண்டு செல்லும் சிறுவர் உலகத்தை மீட்பதும், மீளப்புனரமைப்பதும் சாத்தியம் என்பதை சிறுவர் நலன்பேணுபவர்களும், சிறுவர் நலனில் அக்கறை கொண்டோரும் உணர்ந்து கொள்வார்களேயானால்,

இந்த நூற்றாண்டு முடிவடைவதற்கிடையிலாவது முன்னேற்றத்திற்கான சில சமிக்ஞைகளை உலக சமூகம் எதிர்பார்க்க வாய்ப்புண்டு.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அக்காவிற்கு கால்களை மடக்கி இருக்க சிரமமாக இருந்தது. மூச்சு பெரிதாகி சற்று ஓசையோடு வெளிப்பட்டபோதும் அங்கு எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கும் மனித ஆத்மாக்களின் சோகக் குரல்களிடை அம் மூச்சின் ஓசை வெளியே ஒலிக்கவில்லை.

அக்கா அம்மாவைத் திரும்பிப் பார்த் தாள். முகத்தில் நாடி எலும்பு தனியாக வெளித்தெரிய குழியினுள்ளே உருளும் கருமணிகள் கண்ணீரால் அடைபட்டிருக்க, அம்மா வயிற்றைப் பிடித்தபடி பெரிதாகக் கத்திக்கொண்டிருந்தாள். 'என்ர இந்துக் குஞ்சே! அம்மாவை விட்டுப் போக உனக்கு மனம் வந்ததோ'

அக்கா மனதுள் ஓயாமல் அழுது கொண்டே இருந்தாள். அவளால் கத்தி அழ முடியவில்லை. கிட்டப்போய் இந்துக் குட்டியின் பூவுடலைத் தடவிப்பார்த்து முத்தமிட்டு அழ முற்பட்டபோது அவளது வயிறு இந்துக்குட்டியைச் சுமந்திருந்த பொட்டகச் சட்டங்கள் மீது நசிய அக்கா துடிப்போடு நிமிர்ந்து வயிற்றைத் தடவிக் கொண்டாள்.

'என்ர இந்துக்குட்டி! நீ குடியிருந்த வயிறு எரியுதெணை' அம்மா எழுப்பிய அவல ஓலம் அக்காவின் ஆன்மாவை பிசைந்து கொண்டிருந்தது. அம்மா இந்துக்குட்டியைச் சுமந்திருந்தபோது எவ்வளவு கனவுகளைத் தனக்குள் கண்டிருப்பாள். இன்று அவை அனைத்தும் தகர்ந்து போய்விட்டது.

'இந்துக்குட்டி! அம்மா என்று ஒருக்கா கூப்பிடுபிள்ளை' அம்மா இந்துக்குட்டியின் முகத்தைத் தடவித்தடவிக் கத்தினாள்.அந்த நிகழ்வைக் காணப் பிடிக்காமல் அக்கா முகத்தைக் கைகளால் மூடினாள்.


இந்துக்குட்டியின் விம்பம் அக்காவின் மனதோடு கதை பேசுவதைப் போலிருந் தது. 'அக்கா! ஒருதாயின் கடமை என்ன வென்று நினைக்கிறாய்' இந்து கேள்வியைக் கேட்டுவிட்டு அக்காவின் பதிலிற்காய் காத் திருந்தாள். அக்கா பதில் சொல்லவில்லை. தன்னை உற்று நோக்கிக் கொண்டிருந்த இந்துவின் புற, அக மாற்றங்களைக் கணக் கிட்டுக்கொண்டிருந்தாள்.

கன்னத்தில் இருந்த சதைகள் குறைந்து சொக்கு உள்ளுக்குள் போய்விட்ட பின்பும் கூட இந்துவின் பால்வடியும் முக அழகு மாறவில்லை. தீவிரமான ஆழ்ந்த பார்வை யுடைய அவளது விழிகளில் அறிவுக்கூர்மை சுடர்விடுவதைப் போலிருந்தது. செல்ல மொழி பேசி விளையாடித் திரிந்த இந்து வின் இயல்புகள் மாறியிருந்தது. எதையும் கூர்ந்து நோக்கிற தன்மை அவள் சார்ந்த சூழலால்தானே உருவானது.

'அக்கா! ஒரு தாயின் கடமை குழந்தை யைப் பெற்று வளர்க்கிறதோடு முடிந்து போய்விடவில்லை' இந்து ஆணித்தரமான குரலில் கூறினாள். அக்கா எதுவுமே கதைக் கவில்லை. இந்துவே தொடர்ந்து சொன் னாள். 'அந்தக் குழந்தையைப் பரந்துபட்ட சிந்தனைத்திறனோடு கூடிய செயற்பாடு டையதாக, மனிதப் பண்புடையதாக சமுதா யத்தில் நாளை தனது கடமையுணர்ந்து வாழக்கூடியதாக வளர்க்க வேணும்' இந்து வின் குரல் அக்காவின் மனதுள் எதிரொ லித்துக்கொண்டிருந்தது.

'என்ர செல்லம், உனக்கு பூப்பூவாய் போடுகினமே. என்ர பூக்குஞ்சே எழும் பெணை' அக்கா நிமிர்ந்து இருந்தாள். கண்களால் அணைகளற்று வழிந்துகொண் டிருந்தது. அம்மாவின் குரல் கட்டிப்போய் சத்தங்கள் சுரங்கள் மாறி தொடர்ந்து ஒலித் துக்கொண்டிருந்தது.

'தாய்மையின் அன்பு அளவில்லாதது. தனக்காக எதையும் செய்யாமல் பிள் ளைக்கு, பிள்ளைக்கு என்றுதன்னை உருக் கிற அம்மாக்களின் தன்னலமற்ற செயல்கள் மேன்மையா னது' இந்து வீட் டை விட்டுப்போய் சிலவருடங்கள் கடந்து வந்த போது



—விண்ணரசி

அக்காவின் மடியில் தலைவைத்துப்படுத் தபடி அம்மாவைப் பற்றிக் கதைத்த போது சொன்ன ஒவ்வொரு வரிகளிலும் உன்னதமான உணர்வுகள் உலாவியதை அக்கா இப்போதெல்லாம் உணர்ந்து கொள்கிறபோது, இதைப்பற்றி இந்துவோடு பகிர்ந்துகொள்ள வேண்டுமென்று எண்ணி யபோது இந்துக்குட்டி வந்திருக்கிறாள். எதுவுமே கிரகிக்கமுடியாத நீண்ட மௌனத் தோடு.

'அம்மா' இந்தச் சொல்லை மனதிற்குள் உச்சரிக்கிறபோதே உடல் சிலிர்த்துப்போகி றது. மனம் பாரிய சுமைகளால் அழுத்தப் படும் போதெல்லாம் 'அம்மா' என்று நினை வுகூர அனைத்துச் சுமைகளும் விடுபட்டு சிறகு முளைத்தவர்களாகிவிடும் நிலை எனக்குள் ஏற்பட்டுவிடும். இந்துக்குட்டி இந்த உண்மையின் உணர்வுகளோடு ஒன்றிப் போயிருக்கிறாள். அதனால்தான் அவள் அக்காவிடம் அடிக்கடி 'அம்மா கவனம்' என்று சொல்லியிருக்கிறாள்.

'இந்துக்குட்டி! அம்மா தலையைத் தடவி விடுங்கோ என்று ஒவ்வொரு முறையும் என்னிடம் வந்தால் சொல்லுவியே. அம்மா தலை தடவி விடுறன். எழும்பி வா செல்லம்' அம்மா கண்களில் இருந்து நீர் வெளியேற முடியாத அளவு உப்பிப்பெருத்த கண் களோடும், வீங்கி விகாரமாய்ப்போன முகத் தோடும் இருந்தாள். தலையில் தன்னை மறந்து ஓங்கி அறைய முற்பட்டுக் கொண் டிருக்கிறாள். அருகே இருப்பவர்கள் அம்மாவிற்கு தமக்குத் தெரிந்த வழிமுறை களில் எல்லாம் ஆறுதல் கூறிக்கொண் டிருக்கிறார்கள். ஆனால் அம்மா எதையும் உள்வாங்கும் நிலைமையில் இல்லை. அம்மாவைப் பொறுத்தவரையில் அவள் சுமந்து பத்திரப்படுத்தி வளர்த்த ஐந்தாவது சுடர் அணைந்துபோயிருப்பதே பெரிதா னது.

அக்கா அம்மாவின் வலியை உணர்ந்து கொள்ளும் நிலையில்தானிருந்தாள். தாய் மையில் ஏற்படும் உடல், உள உணர்வு களோடு ஓயாது உழன்றபடி புதிய ஜீவனின் வரவிற்காய் அவள் படும் துடிப்பை அவள் மட்டுமே அறிவாள். இவ்வளவு வேதனை களோடு மல்லுக்கட்டி ஈன்று அந்த உயிரின் சின்னச்சின்ன அங்க அசைவுகளை, வளர்ச் சியை இரவுபகல் என மாறி இமையோடு இமை மூடாமல் வளர்க்கும் துளிர் கருகிப் போனால்....

அவ்வுணர்வுகளிற்குள் வாழ்ந்தவர்களால், வாழ்பவர்களால் மட்டுமே தெளிவாகப் புரிய முடியும்.

'அக்கா! நான் ஒரு உயிர் மடிந்து போனால் எனது வாழ்நாளின் எல்லைவரை அந்த உயிரை மீளவும் காணமுடியாது என்றுதான் துன்பப்படுவேன். ஆனால்

உயிர்ப்பான உணர்வுகளோடு...



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உயிர்ப்பூத்த உணர்வுகளோடு...

நான் சந்தித்த அம்மாக்கள் எல்லாம் கத்துகிறார்கள். என்னால் அவர்கள் அழும் நிலையைப் புரியமுடிகின்றது. ஆனால் அவர்களின் உணர்வுகளை உள்வாங்க முடிவதில்லை' இந்துக்குட்டி விடுமுறையில் வந்து நின்றபோது சொன்ன ஒவ்வொரு சொல்லும் அக்காவின் மனதுள் யதார்த்த உலகை உணர்த்திக்கொண்டிருக்கின்றது.

அக்கா இந்துக்குட்டியை உற்றுப் பார்த்தாள். முகம் அதே சாந்தத்தோடு இருக்க, நிறம்மாறியிருந்தது. வெற்றுடலிற்குரிய மணம் காற்றோடு கலந்திருந்தது. நாசித் துவாரம் வழியே உள் நுழையும் அந்தக் காற்றை சுவாசித்தபோதும் அக்கா காற்றை வெறுக்கவில்லை. அது இந்துக்குட்டியின் பூவுடலில் இருந்து எழும்பும் நெடி அல்லவா! மனித மனங்கள் தமக்கு விருப்பமானவற்றை வெறுப்பதில்லை. அவை எவ்வளவோ கொடூரமானவையாக இருந்தாலும்கூட.

'என்ர குஞ்சே! உனக்கு அம்மா சாப்பாடு தீத்தவேணும். எங்கையும் போறது எண்டாலும் அம்மா வேணும். இப்ப மட்டும் அம்மாவை விட்டிட்டு போக எப்படி மனம் வந்தது' அம்மா தலையிலும் வயிற்றிலும் அடித்துக் குழறினாள். அம்மாவின் செயலால் அக்காவின் உடல் மெலிதாக நடுங்கியது. தாய்மையின் வேதனையை அவள் தனக்குள் உள்வாங்கிக் கொண்டிருந்தாள்.

இந்து அக்காவின் பிற மாற்றங்களை அவதானித்துவிட்டு அடித்த பகிடிகளை நினைத்தபோது .... அக்கா, எங்கட சமுதாயத்திலை பெண், ஆண் என்று பிள்ளைகளிலை சிறு வயதிலேயே வித்தியாச உணர்வுகளை இனங்காட்டித்தான் வளர்க்கப்படுகிறார்கள். பெண் பிள்ளை என்றால் அந்த மழலை மனதுள்ளையே அதன் ஆளுமைகளை வளரவிடாமல் தடைசெய்து வளர்க்கிற அறிவுரைகள்தான் அந்த மகவுகளிற்குக் கூறப்படுகின்றது' இந்துவின் முகம் இறுகி கண்கள் பெரிதாகி தூர நோக்கியவாறிருக்க அவள் அன்று சொன்னாள்.

இந்துவின் மனதுள் பெண் உருவாய் உருவானதில் வளர்ப்பு முறைகளில் ஏற்பட்ட மாற்றங்களால் மனதில் மாறாத வடு ஏற்பட்டிருந்தது. அவை ஏற்படுத்திய தாக்கங்களால் இந்து சொல்வாள். 'அக்கா, அம்மா எங்களிற்கு தாயாகி உணவு தந்து, உடை தந்து, கல்வி தந்து, கவனித்தா வேதவிர எமது உணர்வுகளை விளங்கி நடக்கவில்லை' உண்மைதான். பெரும்பாலும் எமது சமூகத்தில் அம்மாக்கள் பிள்ளைகளின் சின்னச்சின்ன அபிலாசைகளை நிறைவு செய்வதில்லை. மாறாக எதிர்ப்பதிலேயே நிறைவடைகிறார்கள். இந்தச் செயல்கள் வளரும் தளிர்களின் மனோநிலைகளில் ஆழமான தாக்கங்களை ஏற்படுத்த வாய்ப்பாகிவிடுகின்றது. பிள்ளைகளால் ஏற்படக்கூடிய கோரிக்கைகள் முன்வைக்கும்போதும்கூட அதை ஏற்று அவர்களை உற்சாகப்படுத்தி வழிநடாத்திச் செல்லும் பொறுப்பு பெற்றோர்களையே சார்ந்திருக்கின்றது.

'இந்துச் செல்லம், நீ போன பிறகு அம்மாவின்ர மனமே இருண்டு போய் விட்டது' அம்மா தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் ஓயாது ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தாள். தன் மன ஆறுதலிற்காய் வார்த்தைகளைக் கோத்து இந்துவின் இயல்புகளைச் சொல்லிக்கதறுகிறாள் எட்டாத தொலைவிற்குச் சென்ற மகள் வரமாட்டாள் என்ற உண்மை புரிந்த பின்னும் அதை ஏற்கும் திராணியற்றிருக்கிறாள்.

இந்து நிஜ உலகின் படிமங்களைத் தெளிவாகப் புரிந்திருந்தாள். ஒவ்வொரு தடவையும் 'அக்கா, இந்த மண்ணில் அதுவும் இந்தக் காலத்தில் பிறந்து வாழ்வதற்காய் நான் நிறைவடைகின்றேன். பிற்போக்குக் கருத்துக்களால் வளர்ந்த எங்களை சிந்தனையில் கூர்மையாக்கி, செயலாற்றும் ஆளுமையை வளர்க்கும் அண்ணாவின் நிழலில் நிற்பதால் நாங்கள் நிமிர்வுற்றுள்ளோம் என்ற உண்மையை எமது சமூகமும் படிப்படியாக உணர்ந்து கொள்ளத்தொடங்கியுள்ளது. இந்தவளர்ச்சி நாளை பெண்ணினத்திற்கு புதிய வழிமுறையொன்றை கட்டியப்படுத்தும்' இந்துவின் பார்வையில் புலனாகத் தொடங்கிய புதிய சமூகமொன்றின் விடியலில் இடர்பாடுகள் பலவற்றை உற்று நோக்கி அதற்காக விசனப்பட்ட நிகழ்வுகள் அக்காவின் மனப்பதிவேட்டில் அழிக்க முடியாத பதிவுகளாகியுள்ளது.

பூமியைச் சூடாக்கிக் கொண்டிருந்த சூரியக்கதிரின் தாக்கத்தால் உடலில் இருந்து வியர்வை வழிந்துகொண்டிருந்தது. இலைகளில் நீர் ஆவியாகி வெளியேறிக் கொண்டிருக்க அவை உற்சாகம் இழந்து சோர்ந்துபோயிருந்தன.

எப்பவும் வரும்போது உற்சாகமாய் குரல் எழுப்பும் இந்து மௌனமாய் வந்து திண்ணையில் படுத்திருந்தாள். பாதத்தில் விரல்களின் அசைவுகளைப் பார்த்தால் அவள் நித்திரை கொள்ளவில்லை எனப் புரிந்தது. வலது கையை மடக்கி நெற்றியில் அழுத்த வைத்தவாறிருந்தாள்.

அக்கா நிமிடங்களை மௌனத்திலேயே கழித்துக்கொண்டிருந்தாள். இந்து எழும்பவில்லை. பொறுமையைத் துலைத்த அக்கா 'இந்துச் செல்லம்' என்றவாறு நெற்றியில் மடக்கியிருந்த கைகளை எடுத்தபோது, அவளது விழிகள் துயருள் தோய்ந்திருந்தது. குரலில் சோகம் இழையோட 'அக்கா பத்து, பதினொரு வயதுள்ள சின்னத் தம்பியொன்று என்னிடம் காசு கேட்டதக்கா, தம்பியின் நிலைமையைப் பார்க்க கவலையாய் இருக்கு. தலைமயிரெல்லாம் அழுக்கேறித் திரண்டு போயிருக்க, உடல் முகமெல்லாம் புழுதியும், வியர்வையும் படிந்திருந்தது. பெற்றோர் ஆரோக்கியமாக இருந்தும் பசி என்று அந்தப் பாலகனை பிச்சைக்கு அனுப்பியிருக்கினம். அந்தத் தளிரின் எதிர்காலம் எப்படியிருக்கப்போகுதோ?' வினாடிகள் கழிய இந்து மீளவும் 'ஏனக்கா! பெற்றவர்களிற்கு எப்படி தங்களின் கடமை மறந்து போகும். இல்லாது போனால்....' இந்துவின் உதடுகள் வேதனையை அடக்கிக்கொள்ளப் படாதபாடுபட்டது.


இந்து நாளைமலரும் தேசம் இந்த மழலைகளின் கைகளில் தங்கியுள்ளதை, அவர்கள் நெறிப்படுத்தப்படாமல் வளர்க்கப்பட்டால் அது சமூகத்தைப் பாதிக்கும் என்பதைச் சொல்லிச் சொல்லியே வேதனையடைந்தாள்.

ஒரு சமூகத்தின் வளர்ச்சிப்பாதையை, இளந்தளிர்களின் மனதுள்போடும் அத்திவாரக் கருக்களே நிர்ணயிக்கிறது. அவை உயிர்ப்பாகி தேசத்தை உன்னத நிலைக்கு இட்டுச் செல்லும். அதைவிடுத்து அர்த்தமற்ற வழிமுறைகளால் வளர்க்கப்பட்டால் மகவுகள் தேசத்தின் வீழ்ச்சிக்கே அடிகோலும்.

இந்துவின் கனவுகள், கற்பனைகள் காத்திரமானவை. அதற்காக அவள் நடந்த தடங்களும் உன்னதமானவை என்பதை அக்கா அறிந்துகொண்டாள். நாளை தன் மடிமீது தவளும் மகளின் எதிர்காலத்தை இந்து காட்டிய சுவட்டில் பயின்று கொள்வாள்.

ஒன்றின் இருப்பிற்காய் இன்னொறின் மறைவு என்பது எமது தேசத்தின் விடிவு வரை அவசியமானது. அதை ஏற்றுக் கொண்டு அந்த ஒளியில் உலாவி ஆன்மாக்களை நிறைவு செய்யவேண்டிய கடமைகளைப் புரியவேண்டும். மூக்கின் வழியே உள் நுழையும் சாம்பிராணித் தூள் வாசனைகள் அக்காவை நிஜ உலகிற்கு இழுத்து வந்தது.

'இந்து என்னைவிட்டுப்போறியோ என்ர செல்லம் எப்பவம்மா உன்னைப் பார்க்கப் போறன்' உறவுகளின் கண்மலர்களில் இருந்து வழியும் கண்ணீர்ப்பூக்களோடும், அம்மாவின் இறுதி ஆற்றாமைப் புலம்பல்களோடும் இந்துவின் இறுதி யாத்திரை ஆரம்பமானது.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 18.11.1987

அன்று ஆனந்தராஜா 'மாஸ்ரர்' குளித்து விட்டு முன்மண்ட நாற்காலியில், அவருக்கே உரிய சிரிப்போடு உட்காரும்போது இரவு ஏழு மணி.

மனைவி கொண்டுவந்த தேநீரைக் குடித்துவிட்டு அவர் சொன்னார்.

'உலகத்திலை ஒரு பெரிய படையான இந்தியப் படையோடு மோதுறதெண்டு புலிகள் முடிவெடுத்ததே ஒரு பெரிய வெற்றிதான்'

கிளிநொச்சியில் மாஸ்ரர் புதிதாகக் கட்டிய வீடு அது. மகிழ்ச்சியாக அந்த வீட்டை அனுபவித்து அவர் இன்னும் வாழவில்லை. அது அவர் நோக்கமும் இல்லை. தமிழீழ விடுதலைப் போரில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு புலிகளோடு அவர் இரண்டறக் கலந்து, நீண்ட காலமாகின்றது.

மாஸ்ரருக்கு தமிழீழ மண்ணின் ஒவ்வொரு அங்குலமும் வீடுதான். எந்த மணித்துளியில் அவர் எங்கு நிற்பார் என்று சொல்லமுடியாது.

நீண்ட வயல் வெளிகளின் நடுவில், குறுகிய செம்மண் பாதைகள் ஊடாக, நடு இரவில் அவர் மிதிவண்டி விடுதலைப் புலிகளை ஏற்றிப்பறக்கும்.

மேற்கே வன்னேரிக்குளம் தொடக்கம் கிழக்கே விசுவமடுவரை... முள்குத்தி, சில்லு காற்றிழந்துபோக- மிதிவண்டியை மாஸ்ரர் நெடுந்தூரம் உருட்டி அலைந்த நாட்களும் உண்டு.

அளவான உயரம் - இறுக்கமான உடற்கட்டு, பொது நிறம், மிடுக்கான மீசை, கலகலப்பான பேச்சு, ஆனந்தராஜா மாஸ்ரருக்கு நாற்பத்திமூன்று வயதுதான்.

கிளிநொச்சியில் பள்ளிக்கூட மாணவர்களுக்கு கலங்கரை விளக்கமாய் இருந்தவர் மாஸ்ரர். மாணவர்களின் எதிர்காலம், தன்னில் அல்ல, தமிழீழத்திலேயே தங்கியுள்ளது என்பதைத் தெரிந்துகொண்டு, விடுதலைப் புலிகளுக்கு உறுதுணையானார் அவர்.

மாஸரர் அடிக்கடி சொல்லுவார், 'விடுதலைப் புலிகள் எப்படியெல்லாம் அலைகிறார்கள்... அவர்கள் நடக்க என் காலைப் பயன்படுத்துகிறேன்'

-0-

கிளிநொச்சியை ஒட்டினாற்போல் நெடிய தென்னந்தோப்புக் கிடந்தது. சடைத்து வானத்தைத் தழுவி பச்சைக் காடாக நிலத்தை மூடிய தென்னைகள்.

1985 இல் இத்தோப்பு வரலாற்றில் தன்னை ஆழப்பதித்துக்கொண்டது.

விடுதலைப் புலிகள், முதியவர்களுக்கு இங்கே தற்காப்புப் பயிற்சி அளித்துக்கொண்டிருந்தார்கள். பதினைந்து நாட்கள் ஒரு மணித்துளியும் ஓய்வில்லாத பயிற்சி.

ஆனந்தராஜா மாஸ்ரர் என்றைக்குமே அந்த நாட்களை மறப்பதில்லை.

துப்பாக்கியால் குறிபார்த்துச் சுடப்பழகிய காலம்.... சில முதிர்ந்த நண்பர்களோடு அவரும் ஒருவராக....

யாழ்ப்பாணத்தில் கிழட்டுப் பனைகள் சூறைக்காற்றில் ஆடி நிமிர்ந்து நிற்குமே... அப்படி.... போர்க்காலத்தின் கட்டாயம்....

இரவு நேரங்களில் புலிகளின் தலைவர்களோடு உட்கார்ந்து அவர்கள் மனம்விட்டுப் பேசுவார்கள்.

பழைய தமிழீழ அரசியல், அந்தக் கால அறப்போர். தன்னலவாதிகள் சிலர் அரசு ஓய்வூதியம் பெற்றுக்கொண்டு போராட்டத்திற்கு வந்த கதைகள். இவையெல்லாம் அலசப்படும்.

புலிகள் விடுதலைப் போரில் தாங்கள் கொண்டுள்ள நிலைப்பாட்டை தெளிவாக விளக்குவார்கள்.

காற்று இதமாக வீசும்.

ஓரிரு காய்ந்த தென்னை ஓலைகள் உதிர்ந்துவிழும்.

மின்மினிப் பூச்சிகள் விளக்குத் தூக்கித் திரியும்.

-0-

1987 ஒக்டோபர் 10

தமிழீழ விடுதலைப் புலிகள் மேல் இந்தியப் படை போர்ப் பிரகடனம் செய்த நாள்.

குண்டுவீச்சு விமானங்களும் - 'கெலிகொப்ரர்' களும் வானத்தில் உறுமிப்பறந்தன.

'செல்'கள், பிணக்குவியல்கள்- மரண ஓலங்கள், இந்திய வல்லரசின் கொடிய பற்கள் யாழ்ப்பாணத்தைக் கடித்துக் குதறத் தொடங்கிய காலம்.

விடுதலைப் புலிகளின் பொறுப்புவாய்ந்த தளபதிகளில் ஒருவர் களத்தின் முக்கிய பகுதிக்கு வந்தார்.

விடுதலைப் புலிகள் துப்பாக்கியும் கையுமாக எதிரியைத் தேடிப் பறந்துகொண்டிருந்தார்கள்.

ஒரு களத்தில் போராடிவந்த சில புலிகள் அடுத்த களத்திற்குப் புறப்படுவதற்கு முன்பு, அவர்களுக்கு உணவு பரிமாறிக்கொண்டிருந்தார் ஆனந்தராஜா மாஸ்ரர்.

தளபதி கேட்டார்.

'என்ன மாஸ்ரர் இங்கே நிற்கிறீர்கள்....?'

'நீங்கள் எங்கே நிற்கிறீர்களோ அங்கேதான் நானும் நிற்கிறேன்'

பக்குவமான ஒரு சிரிப்பை உதிர்த்துவிட்டுத் தளபதியைப் பார்த்தார் மாஸ்ரர்.

தளபதிக்கு மாஸ்ரரைப் பற்றிய எண்ணங்கள் நெஞ்சில் அடுக்கடுக்காய் எழுந்தன.

ஆங்கிலத்தில் எம். ஏ. படித்தவர் மாஸ்ரர். விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கப்டன் பண்டிதர் உயிரோடு இருந்த காலத்தில் மேஜர் மாறனால் இயக்க வளையத்திற்குள் கொண்டுவரப்பட்டார். மாஸ்ரர் விடுதலைப் புலி அல்ல. ஆனால் விடுதலைப் போரில் தங்களை அழித்துக் கொள்கிற புலிகளுக்கு, எப்போதும் உறுதுணையாக இருக்கவேண்டும் என்றே விரும்பினார்...

அந்த நோக்கோடுதான் புலிகள் வழங்கிய தற்காப்புப் பயிற்சிக்கும் அவர் போனார்.... போரில் இறங்கிய புலிகளை அழிக்க வந்த அந்நிய ஆக்கிரமிப்பாளனை நினைக்க நினைக்க அவருக்குக் குருதி பொங்குகின்றது...

'மாஸ்ரர்.... கிளிநொச்சி மக்களுக்கு உங்களைப் போல ஆதரவானவங்க இப்ப பக்கத்துலை இருந்தா நல்லா இருக்கும். நீங்கள் அங்கேதான் போகவேணும். போறதுதான் நல்லது'

கிளிநொச்சிக்கு மாஸ்ரர் அன்றே கிளம்பிவிட்டார். புலிவீரர்களின் சொற்கள் மதிக்கப்பட வேண்டியவை. தூய, அப்பழுக்கற்ற நெஞ்சின் வேரில் அவை துளிர்க்கின்றன.

-0-

கிளிநொச்சி பரபரப்பாயிற்று. போரின் அடையாளங்கள் கிளிநொச்சியில் தலைகாட்டத் தொடங்கின.

இந்தியத் துருப்புக்களை ஏற்றிப்பறக்கும் 'கெலிகொப்டர்கள்' உறுமிக்கொண்டு தெருவில் இந்தியப்படை 'ட்றக்' வண்டிகள் ஓடும்.

யாழ். நகரில் கடுமையான குண்டுவீச்சாலும் 'செல்' தாக்குதலாலும் பாதிக்கப்பட்ட பெண் அகதிகள் கூட்டம் ஒன்று கிளிநொச்சிக்கு வந்தது.

கண்ணீரும் கம்பலையுமாக வந்த அவர்கள் இந்தியப் படையின் கைக்கூலிகள் 'குழு' ஒன்றிடம், தெரியாமல் மாட்டிக்கொண்டார்கள்.

அந்தக் 'குழு' பெண் அகதிகளைக் கொண்டுபோய் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் உட்காரவைத்தது.

குளுமாடுகளின் குழு.



# ஓயாத கால்கள்


தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவர்களோடு தமிழ்ப் பெண்கள்.

விலங்குத்தனத்தின் வெறியாட்டமும், இழிவுகளும், தொடங்குவதற்கு முன்பு அந்தப் பெண்களை எப்படியோ காப்பற்றிவிடவேண்டும் என்று நினைத்தார் ஆனந்தராஜா மாஸ்ரர்.

நேரே அவர் மகாவித்தியாலயத்திற்குள் நுழைந்தார். எத்தனையோ ஆண்டுகளாக மாஸ்ரர் பாடம் கற்றுக்கொடுத்த பள்ளிக்கூடம் அது.

அவர் எழுதிய கரும்பலகைகள், அவர் உலாவிய வகுப்பறைகள் அதே மேசைகள் நாற்காலிகள்.




எத்தனை மாணவர்களை இந்தப் பள்ளிக்கூடத்தில் மானமுள்ள வீரர்களாய் உருவாக்கியிருக்கிறார் மாஸ்ரர்.

என்றுமே நீதிகளாலும் அறங்களாலும் பண்பாடுகளாலும் நிறைந்துபோயிருந்த அந்த மகாவித்தியாலயத்தில் சேட்டைகளும், அசிங்கங்களுமா....? மாஸ்ரரால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

ஆனந்தராஜா மாஸ்ரர் தலையிட்டார். பெண் அகதிகளை மகாவித்தியாலயத்திலிருந்து வேறோர் இடத்திற்கு அழைத்துச் சென்றார். வெறியர்களிடமிருந்து அவர்களைக் காப்பாற்றினமாதிரித்தான்.

ஒரு 'குளுமாடு' பள்ளிக்கூட வாசலில் மாஸ்ரரை முட்டிமோதிக்கொண்டு போயிற்று. இந்த முரட்டுத்தனங்கள் எல்லாம் மாஸ்ரருக்கு இப்போது பழகிப்போனவை. கடலில் இறங்கிவிட்ட படகா அலைகளைப்பற்றிக் கவலைப்படும்.

மாஸ்ரருக்கு நன்றாகவே தெரிந்தது. இந்தக் 'குழுக்களுக்கு' கொலைதான் கொள்கை.

ஆனால்....

தனக்குள்ளேயே அவர் சொல்லிக்கொண்டார், நான் எதற்கும் ஆயத்தமாகவே இருக்கிறேன்.

-0-

தெருவில் ஒரு நாய் ஊளையிட்டுக்கொண்டு ஓடிற்று. எங்கோ தூரத்தில் அதிர்ந்து வெடிக்கும் 'செல்களின்' இடியோசை.

ஆனந்தராஜா மாஸ்ரர் நாற்காலியில் உட்கார்ந்திருந்தவர் மெதுவாக எழுந்து வானொலியை முறுக்கிவிட்டார்.

செய்திகள்...

'இந்திய அரசையும் சிறீலங்கா அரசையும் துதிபாடும் வழமையான அதிகார வழிபாடு'

வானொலியை ஆத்திரத்தோடு திடீரென்று நிறுத்தினார் மாஸ்ரர்.

'பொய்ச்செய்திகளாலை விடுதலைப் புலிகளை அழிக்க முயலுகினம்.... செய்திகளைமறைச்சா, உண்மைகளை மறைச்சா, புலிகளையும் அவர்களின் ஆதரவாளர்களையும் அழிச்சா, தமிழீழ விடுதலைப் போர் ஓய்ந்துபோகும் எண்டு நினைக்கினம்...'

தன்பாட்டில் உறுமினார் அவர்.

மனைவியைப் பார்த்து மாஸ்ரர் சொன்னார். 'எத்தனை விதமான ஆபத்துக்குள்ளையும், பொய்ப்பிரச்சாரங்களுக்குள்ளையும் இந்தப் பிள்ளைகள் நிண்டு போராடுகினம் பார்த்தியே....!'

அப்போதுதான் புத்தம்புதிய மாஸ்ரரின் வீட்டுக் கதவை உடைத்து விடுவதுபோல் யாரோ தட்டினார்கள்....

'யார் அது....' கதவை அவர் மெதுவாகத் திறந்தார்.

அங்கே.

வெறிபிடித்த அந்தக் குழுதான் காத்திருந்தது.

முரட்டுத்தனமாக மாஸ்ரர் வெளியே இழுத்துச் செல்லப்பட்டார்.

மனைவியின் ஓலம் காற்றைக் கிழித்தது....

அவளுக்குத் தெரியும்....

இனி அவர் திரும்பமாட்டார்...

-0-

அடுத்தநாள்

கிளிநொச்சி மகாவித்தியாலயம் நெருப்பாயிற்று.

மாணவர்கள் கிளர்ந்து எழுந்தார்கள்.

ஒவ்வொரு மாணவனின் கண்களிலும் நீர் தேங்கி மணிகளாய் உருண்டது....

'எங்கள் நெஞ்சில் நிறைந்த மாஸ்ரரை எங்கள் கையில் ஒப்படை!'

'கொலைகாரர்களே! ஆசிரியர்களைக் கொல்லவா குழு அமைத்தீர்கள்?'

'மாற்றானை மகிழ்விக்க சொந்த நாட்டானைக் கொல்லாதே!'

கிளிநொச்சித் தெருவெல்லாம் சுவரொட்டிகளாய்... ஒரு மாணவன் கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்கள் முன் உருக்கமாகப் பேசினான்..

'நண்பர்களே!'

நெஞ்சில் நிறைந்த நம் ஆசிரியர் இனி வரமாட்டார். ஆனால் அவர் வருவார் என்று நாம் காத்திருப்போம்!

அவர் குரலை இனி நாம் கேட்க மாட்டோம். ஆனால் அவர் பேசுவார் என்று நாம் எதிர்பார்ப்போம்!



பறவை — சம்பவம்-4



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Brandenburg

# ஒப்பறேசன் பார்பறோசாவில் பிற ஒப்பறேசன் ஜெயசிக்குறு தொட்டு படையணி அனுபவிப்பதும்

ஒளித்தா

'ஒரு படை நடவடிக்கையில் முக்கிய மானது வெற்றியே தவிர பிடிவாதமல்ல' என்கிறார் சீன போரியல் அறிஞர் சன்சூ.

ஒப்பறேசன் பார்பறோசாவும், ஒப்பறேசன் ஜெயசிக்குறுவும் போரியல் வரலாற்றில் பலத்த அடியை வாங்கி மண்ணோடு மண் ணாகிப் போன போர் நடவடிக்கைகளுள் முக்கியமானவை. விடுதலையின்பாற் தீவிர பற்றுக்கொண்ட தமிழீழ மக்களுக்கு இவ்விரு நடவடிக்கைகள் குறித்ததும் அவற்றின் முடிவு கள் சொல்லும் சேதியும் நன்குணரப் படவேண்டியவை. ஒப்பறேசன் பார்பறோசா நடவடிக்கைக்கும், ஒப்பறேசன் ஜெயசிக்குறு விற்கும் பல வேறுபாடுகள் உள்ள போதிலும் அவற்றிடையே ஒரு பொதுமைப்பாடு என்ன வெனில் ஆக்கிரமிப்பாளர்களின் பிடிவாதத் தால் அவர்களது மண்பிடிப்பு நோக்கத்திற் காகமேற்கொள்ளப்பட்டு எண்ணிறைந்த உயிரிழப்புக்களையும் ஏற்படுத்தி இறுதியில் படுதோல்வியைத் தழுவின என்பதேயாகும்.

இரண்டாம் உலகப் போர் காலத்தில் மிகநீண்ட காலம் மேற்கொள்ளப்பட்ட நடவ டிக்கையாக ஒப்பறேசன் பார்பறோசா விளங் குகிறது. இரண்டாம் உலகப் போர் காலத்தின் பின்னர் மிக நீண்டகாலம் மேற்கொள்ளப் பட்ட இராணுவ நடவடிக்கையாக ஜெயசிக் குறு விளங்குகின்றது. ஒப்பறேசன் பார்பறோ சாவில் முக்கிய பங்கினை வகித்து முன் னணிப் படையணியாக விளங்கிய பிறன்டன் பேக் படையணி (Brandenburg) இந்நட வடிக்கையின் முடிவிலும், இரண்டாம் உல கப் போர் முடிவின் பின்னர் இருந்த சுவடே தெரியாமல் இல்லாமற் செய்யப்பட்டது. ஜெய சிக்குறுப் நடவடிக்கையின்போது அந்நடவடிக் கையில் முதுகெலும்பாகவும் போரிடும் சூர்வாளாகவும் விளங்கிய 53வது படையணி பலத்த அடிவாங்கியது. தொடர்ந்தும் அண் மைய அக்கினிச்சுவாலை -1 வரை அது புலி வீரர் எதிர்ப்பில் அடிவாங்கியவாறே உள்ளது.

முதலில் ஒப்பறேசன் பார்பறோசாவையும் அதில் முக்கிய பங்கேற்றுச் செயற்பட்ட பிறன் டன்பேக் படையணி பற்றியும் சற்றே விரி வாய்ப் பார்ப்போம். 1940இன் நடுப்பகுதி யில் பிரித்தானியாவைக் கைப்பற்றும் கிட்ல ரின் 'கடற்சிங்க நடவடிக்கை' வெற்றியளிக் காத நிலையில் கிட்லர் தனது கவனத் தை சோவியத்யூனியன் பக்கத்திற்குத் திருப் பினார். அந்நடவடிக்கையின் முக்கிய பங் காற்றும் முன்னணித் தாக்குதல் அணி யாக பிறன்டன்பேக் படையணி தெரிவு செய்யப்பட்டு 'குவின்சீ' பகுதியில் பயிற்சிகள் வழங்கப்பட்டு தயார்ப்படுத் தப்பட்டது.

1941ஆம் ஆண்டு யூன் 1ஆம் நாள் ஒப்பறேசன் பார்பறோசாவின் தொடக்க நாள். ஜேர்மானியப் படையணிகள் சோவியத் எல்லைக் கோட்டைக் கடந்து உள்நுழைந்தன. அதற்கு மறுநாள் அதா



வது ஆனி 22ஆம் திகதி கருங்கடலின் வடபுற பால்டிக் பிராந்தியத்தில் சமர் வெடித்தது. இந்நடவடிக்கைக்கு முதல் வருடமே இப் பகுதிகளில் ஊடுருவிய பிறன்டன்பேக் படை யணிகள் 'Blitzkrieg' தந்திரோபாயம் எனப் படுகின்ற நாசகார ஊடுருவித் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டன. முதற்கட்டமாக 22ஆம் திகதி முன்னகர்ந்த மூன்று படையணி கள் ஒப்பறேசன் பார்பறோசா ஆரம்ப மானதை உலகிற்குச் சொல்லின. மொஸ் கோ வரைக்குமாகத் தனது கிழக்கெல்லயை விஸ்தரிப்பதே கிட்லரின் நோக்கமாக இருந் தது. அந்நோக்கின் முதற்கட்டமாக கீவ், ஸ்மோன்லஸ்க் பிராந்தியங்களையும்

லெனின்கிராட் நகரையும் கைப்பற்று வதாக இலக்கு வைக்கப்பட்டது.

இந்நடவடிக்கையின் முன்னராக ஊடுரு விய பிறன்டன்பேக் படையணிகளால் சோவி பட்டன. காகஸ் பிராந்தியத்தில் கிட்லர் தனது இரண்டாம் கட்ட படைநடவடிக்கையை 1942 யூலையில் ஆரம்பிக்கும் மட்டும் பிறன்டன் பேக் படையணிகளின் நாசகார ஊடுருவல் நடவடிக்கைகள் தொடர்ந்தன.

ஒப்பறேசன் பார்பறோசாவின் முதற்கட்ட நடவடிக்கையில் சோவியத் யூனியன் படைகள் எதிர்பார்க்காத வகையில் லெனின்கிராட் முனையில் ஜேர்மன் படைகள் தாக்குதலை மேற்கொண்டன இதன்போது ரஸ்யப் படை தனது வானூர்திப் பலத்தில் பெரும்பகுதியை இழந்தது. சுமார் இரண்டு வாரங்களில் 300 மைல்களைக் கடந்தது ஜேர்மானியப்படை. சோவியத் யூனியனின் இருபத்தெட்டு படை யணிகளைச் சேர்ந்த நான்கு இலட்சத்து இருபதினாயிரம் படையினர் பலியாயினர். லெனின்கிராட் ஜேர்மனியரின் முழுமையான முற்றுகைக்குள் அகப்பட்டது.

'நீ சமபல நிலையில் இருந்தால் நீ சம ராடுவது முறை. நீ பலமற்றநிலையில் இருந் தால், நீ போராடுவதைத் தவிர். நீ தயாரற்ற நிலையில் இருப்பின் கூடுமானவரை பின் வாங்கிக் கொள்" என்கிற சீனப் போரியல் அறிஞரின் தத்துவத்திற்கு அமைய சோவியத் படையணிகள் பின்வாங்கின. பின்வாங்கலை பலவீனமாக எண்ணி கிட்லர் லெனின் கிராட் டைப் பிடிக்க பல்வேறு காலக்கெடுக் களை விதித்தார்.

கிட்லரின் கனவுகளை நனவாக்கும் கதா நாயகர்களைக் கொண்டிருந்த பிரன்டன்பேக் படையணியில் பின்னர் உக்கிரேனிய இனத்த வர்களும் இணைத்துக்கொள்ளப்பட்டனர். ஒப் பறேசன் பார்பறோசாவின் முன்னணிப் படை யான பிறன்டன்பேக் முதலாவது பட்டாலி யனில் 3 கொம்பனிகள் இணைக்கப்பட்டன. ஜேர்மனியத் தளகர்த்தரும் பிறன்டன்பேக் படையணியின் வழிநடத்துனர்களில் ஒருவரு மான wehrmacht இன் திட்டத்தின் பிரகாரம் உக்கிரேனிய இனத்தவரும் உள்ளடக்கப் பட்டிருந்த பிறன்டன்பேக் முதலாவது பட்டா லியனுக்கு பிறிமைசல் நகர், சான் ஆற்றிற்கு குறுக்காகச் செல்லும் மேம்பாலம் ஆகிய இரு நிலைகளையும் கைப்பற்றுவதற்கு உத்தர விடப்பட்டது. ஆனால் இவ்விரு முனை களிலும் ருஸ்சியர்கள் பலம்வாய்ந்த நிலை யில் இருந்தமையால் பலத்த இடர்பாடு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ...ன்டன்பேக் படையணி பட்டதும் அக்கினி கீல–01 வரை 53வது

களை பிறன்டன்பேக் முதலாவது பற்றாலியன் எதிர்கொண்டது. இதன் பின்னராக யூன் 29இல் Lvov நகர் உக்கிரேனியக் கம்பனிகளால் கையகப்படுத்தப்பட்டது. ஆக்கிரமிப்பு ஜேர்மனியருடன் சேர்ந்தியங்கிய இந்த உக்கிரேனியப் படையணிகள் Lvov நகர வானொலி நிலையத்திற்குள் புகுந்து உக்ரெயின் தேசம் சுதந்திர நாடு என அறிவித்தன. ஆனால் அவர்களின் எஜமானர்களான ஜேர்மனியர்கள் உக்கிரேனியர்களின் இந்நடவடிக்கையை விரும்பவில்லை. எந்தவொரு ஆக்கிரமிப்பாளனும் தேசிய இனம் ஒன்று விடுதலைக் காற்று சுவாசிப்பதை விரும்பமாட்டான் அந்த வகையில் ஜேர்மனி தனது கையில் அகப்பட்ட உக்கிரெயின் தேசத்தை இழக்க விரும்பவில்லை. 1941ஆம் ஆண்டின் இறுதி வரையில் ஜேர்மனியரோடு இணைந்து சோவியத் யூனியனுக்கு எதிரான போர் நடவடிக்கையில் ஈடுபட்ட உக்ரேனியர் இறுதியாக ஜேர்மனியரால் புறந்தள்ளப்பட்டதோடு, அவர்களது சுதந்திரப் பிரகடனமும் அற்பாயுளில் முடிந்து போனது.

ஜேர்மனி கிழக்குப் போர்முனையில் பெருமளவு பிரதேசங்களை சோவியத்யூனியனிடமிருந்து கைப்பற்றியபோதிலும் அதனால் சாதகமான அமைதியான சூழலை ஏற்படுத்த முடியவில்லை. அவர்களது பாதுகாப்புக் குறைந்த வழங்கல்கள் அனைத்தும் ஸ்டாலினின் கரந்தடி குழுக்களால் வேட்டையாடப்பட்டன. இந்த நகர்வுத் தாக்குதல் அணிகளால் தளபதி wehrmacht இன் முன்னணிப் படைகளுக்கான வழங்கல் இக்கட்டான நிலையை அடைந்தது. இதனால் 1943இன் இறுதியில் ஜேர்மனிய மரபு வழி இராணுவம் முக்கிய பெருந்தெரு மற்றும் தொடரூந்துத் தடங்களில் நிலை கொள்ள வேண்டிய நிலையேற்பட்டது.

உக்கிரெயின் மற்றும் போலந்துக் காடுகளுக்குள் அமைந்திருந்த தேசபக்த கரந்தடி நகர்வுப் படைகளின் தளங்களை கண்டறிந்து தேடியழிக்கும் நடவடிக்கைக்கு மிகச்சிறந்த ஜேர்மனியரின் போர்வாழ் எனப்பட்ட பிறன்டன்பேக் படையணி ஈடுபடுத்தப்பட்டது.

இதுகாறும் மரபுவழி தாக்குதலணியாகவும் (Conventional force) அதேவேளை மரபு சாரா தாக்குலணியாகவும் (Clandestine force) ஈடுபட்ட பிறன்டன்பேக் படையணிகளால் காட்டுபுற தேடுதல் நடவடிக்கையில் தனியே மேற்கொள்ள முடியவில்லை. சில ருஸ்சியக் கோடாரிக்காம்புகளின் உதவியோடு பிறன்டன்பேக் படையணி காட்டுப்புறத் தேடியழிக்கும் பணியில் ஈடுபட்டது. ஒவ்வொரு பிறன்டன்பேக் படையணியோடு ஒரு கொம்பனி காட்டிக் கொடுக்கும் ருஸ்சியர்கள் இணைக்கப்பட்டனர். ஆரம்பத்தில் ஒரு சில கொம்யூனிச நகர்வு அணிகளின் தங்ககங்கள் பிறன்டன்பேக் படையணிகளால் தகர்க்கப்பட்டபோதிலும் அவர்களால் காலப்போக்கில் எதனையும் சாதிக்க முடியவில்லை. எப்போதும் தாக்குதலணியாக விளங்கிய பிறன்டன்பேக் அணிகள் Partisan warfare எனப்படுகின்ற சோவியத் தேசபக்த நகர்வுத்தாக்குதலணிகளின் கரந்தடி தாக்குதல் முறையால் தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்டன. தொடர் அலைச்சலால் சலிப்படைந்த நிலையில் பிறன்டன்பேக் அணிகளால் மேற்கொள்ள தேடியழிப்பு நடவடிக்கைகள் அனைத்தும் பலத்த அடியை வாங்கின. இவ்வாறான நிலை 1944 கோடை வரைக்கும் தொடர்ந்தது. கிழக்குப் போர்முனையில் ஜேர்மனிய களச்சூழலில் பாதக நிலை தோன்றியமையால் பிறன்டன்பேக் அணிகள் மரபுவழி இராணுவமாக கடமையாற்ற முன்னணி நிலைக்கு அழைக்கப்பட்டன. தோற்றுக் கொண்டிருக்கும் ஆக்கிரமிப்பாளனின் கடைசி அஸ்திரமாக விளங்கிய பிறன்டன்பேக் படையணிகள் இறுதியில் அவர்களின் எஜமானனான கிட்லரோடு அழியுண்டு போயின. அன்னை மண்ணை அளவிலா காதல் செய்த சோவியத் மக்கள் வீரமும் உறுதியும் மேவ சமராடி, தற்காத்து பின் தாவிப்பாய்ந்து வெற்றிக்கனியைச் சுவைத்தனர்.

'அவலத்தைத் தந்தவனுக்கு அவலத்தையே திருப்பிக் கொடு' என்ற உண்மையை உணர மறுத்த கிட்லர் பல ஆயிரம் ஜேர்மனியரோடு அழிந்தார். அவரது பார்பறோசா படை நடவடிக்கை தொடங்கி இம்மாதத்துடன் 50ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டது. ஆனாலும் அவர் வழியில் பயணிப்பவர்கள் இலங்கைத் தீவிலும் இருக்கவே செய்கின்றார். 62வீத வாக்குகளுடன் சமாதானம் கோரி தேர்தலில் வென்ற அம்மையாரால் யாழ் குடாநாட்டின் மீதான நடவடிக்கைக்காக அமைக்கப்பட்ட படைப்பிரிவுகளுள் முக்கியமானது 53வது படையணி. இதனை போரில் வல்லவர், தமிழர்களை வேட்டையாடி நிலம் கவர்வதில் சூரர் என பேரினவாதிகள் நம்பும் ஜானக பெரேரா உருவாக்கி முதல் கட்டளைத் தளபதியாகவும் வழிநடத்தினார். 1,10000 பேரைக் கொண்ட சிறீலங்கா இராணுவத்தின் 8000 பேர் கொண்ட 53வது படைப்பிரிவு பல்வேறு களமுனைகளில் புலி வீரரிடம் பலத்த அடி வாங்கியுள்ள நிலையிலும் போர்வாளாகக் கருதப்படுவது இன்று வரை தொடர்கிறது.

இந்தவகையில் தமிழர் தாயகத்தின் நெஞ்சறைக்கூட்டிற்குள் ஊடுருவி இரு கூறாக்கி அவர்களது பாரம்பரிய தாயகக் கோட்பாட்டைச் சிதைத்து விடுதல் என்ற நீண்ட நோக்கோடு, யாழ் குடாநாட்டில் நிலை கொண்டுள்ள தமது மிகப்பெரும் இராணுவ இயந்திரத்திற்கு தீனி போடுவதற்கு இலகு வழியைத் தேர்ந்தெடுத்தல் என்ற உடனடி நோக்கத்தையும் நிறைவேற்ற சோதிடர்கள் நாள் கொடுக்க மாமா நெறிப்படுத்த 13.05.1997இல் ஆரம்பித்த நடவடிக்கைதான் ஜெயசிக்குறு. இதுதான் தமிழீழ வரலாற்றிலும் சரி, இரண்டாம் உலகப் போர் காலத்திற்கு பின்னரான உலகப் போரியல் வரலாற்றிலும் சரி மிக நீண்ட காலம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும். 1998ஆம் ஆண்டின் இறுதிப்பகுதி வரைக்கும் இப்படை நடவடிக்கை நடைபெற்றது. தேசியத் தலைவரால் சமர்களுக்கெல்லாம் தாய்ச்சமராக வர்ணிக்கப்பட்ட ஜெயசிக்குறுவிற்கு எதிராக புலிவீரரும் தமிழீழ மக்களும் வீரம் செறிந்த எதிர்ச் சமரினை நடத்தினர். புளியங்குளம் தொட்டு மாங்குளம் வரையான குளங்களை தம் பெயரின் பின்னே கொண்டிருந்த நகர்கள் யாவும் வேங்கைகளின் குருதிக் குளத்தால் நிமிர்ந்து நின்றன. சிங்களத்தின் போர்வாளான 53வது படையணி கரப்புக்குத்தி, விஞ்ஞானகுளம், மன்னம்பிட்டி என பலஇடங்களில் தனது கட்டளையதிகாரி உட்பட ஆயிரக்கணக்கில் படைவீரரை இழந்தது. இறுதியில் மாங்குளத்தோடு ஆயுளை விட்ட ஜெயசிக்குறு, அலையடிப்பு மூன்றில் வந்த இடத்திற்கே புலிவீரரால் திருப்பி வைக்கப்பட்டது.

ஜெயசிக்குறுவில் பாடங்கற்கவும், கற்ற பாடத்தின் வழி ஒழுகியும் பழக்கப்படாத சிங்களமும் அதனது 53வது படையணியும் அண்மையில் அக்னிகீல-1 வரைக்கும் பலத்த அடிவாங்கியுள்ளன புலிவீரர்களிடம். தமிழர் தாயகத்தில் அகலப் பரவி புடைத்து நிற்கின்ற சிங்கள இராணுவ அரக்கனின் தலைவிதி தமிழ் மண்ணின் புதல்வர்களால் எழுதப் படுகின்ற போது. அவ் அரக்கனின் போர் வாளும் உடைந்து வீழ்வது உறுதி. இன்று உலகப் போரியல் பல்கலைக்கழகங்களில் பிறன்டன்பேக் படையணிக்கு நடந்த கதி ஆராயப்படுவது போல் இனிவரும் காலங்களில் சிறீலங்காவின் பல்நாட்டுப் பயிற்சி பெற்ற 53வது படையணிக்கு நடந்த கதியும் ஆராயப்படுவதும் தவிர்க்கப்பட முடியாததே.

இப்புதுயுகம் எமக்குச் சொந்தமானது என்ற தலைவனின் வாய்வழிச் சொல்லை சிரமேற் கொண்டு அன்னை வயலின் ஆனந்த முகிழ்ப்பிற்கு அனைவரும் கரங்கோர்ப்போம்.



சிறீலங்கா இராணுவத்தின் 53வது படைப்பிரிவு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சென்ற இதழ் தொடர்ச்சி...

# தமிழீழ வரலாறு

நாகபுரம், நாகத்வீபம், நாகநாடு போன்ற பல இடப்பெயர்கள் சங்ககாலத்திற்கு முன்னரே தமிழகத்திலும், ஈழத்திலும் வழக்கில் இருந்திருக்கின்றன. அதுபோலவே நாகபட்டினம், நாகர்கோயில் என தமிழகத்திலும், ஈழத்திலும் நாக என்று தொடங்கும் இடப்பெயர்கள் இருப்பதை இன்றும் அவதானிக்கலாம்.



அது தவிர, நாக வழிபாடு தமிழகத்திலும், ஈழத்திலும் இன்றும் வழக்கிலி ருந்து வருகின்றது. நாகபூசனி அம்பாள், நாகதபிரான் என வழி பாட்டுத் தலங்கள் இன்றும் எமது பகுதிகளில் இருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

மேலும், நாகன், நாகி, நாகமுத்து, நாகநாதன், நாகரத்தினம், நாகமணி, நாகம்மாள், நாகம்மை, நாகப்பன், நாகலிங்கம், நாகராஜா, நாகேந்திரன் என ஏராளமான நாக என்று தொடங்கும் பெயர்கள் தமிழக, தமிழீழ மக்களால்இன்றும் பயன்படுத்தப்பட்டு வருவதும் நோக்கற் பாலது.



பூம்புகாரின் சிறப்பைக் கூறப்புறப்பட்ட இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில்,

‘நாகநீள் நகரொடு நாகநாடு - அதனொடு
போகம், நீள் புகழ் மன்னும் புகார்நகர்!’

என்னும் அடிகள் மூலம் (1:21-22) நாக நாட்டையொத்தது புகார் நகர் என்று கூறியிருப்பதிலிருந்து, அன்றைய நாக நாட்டின் சிறப்பு நன்கு வெளிப்படுகின்றது.

கடல்கோளுக்கு முன் குமரிக்கண்டத்தில் வாழ்ந்த நாகர்களுக்கும் தமிழகத்தவர்களுக்கும் இடையே மொழி, பண்பாடு, பழக்கவழக்கம் என்பவற்றில் ஓர் ஒற்றுமை இருந்ததை எம்மால் அறிய முடிகின்றது. இவற்றின் பூர்வீகத் தன்மையை ஆராய்ந்து பார்க்குமிடத்து, கடல்கோளினால் பிரிக்கப்பட்ட பண்டைய தமிழகமே இன்றைய தமிழகமும் ஈழமும் என்ற முடிவுக்கு வரமுடிகின்றது. இதனால், நாகர்கள் பூர்வீகத் தமிழ் மக்களின் ஒரு குடிப்பிரிவினரே என்பதும், ஈழம் தமிழர்களின் தாயகந்தான் என்பதும் தெள்ளத் தெளிவாகின்றது.



### சிவ வழிபாடு தமிழர் பண்பாடு

விஜயன் வருவதற்கு முன்னரே ஈழத்தில் சிவவழிபாடு வழக்கிலிருந்திருக்கின்றது. மாதோட்டத்தில் அமைந்திருந்த திருக்கேதீஸ்வரர் ஆலயத்தை விஜயன் புனருத்தாரணம் செய்தான் என்று ‘யாழ்ப்பாண வைபவமாலை’ குறிப்பிடுகின்றது. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில், வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனாரும் பாலாவிக் கரையிலமைந்துள்ள திருக்கேதீஸ்வரர் ஆலயத்தைச் சிறப்பித்துக் கூறுவதிலிருந்து, அது தொன்மை வாய்ந்த ஆலயம் என்பது அறியக்கூடியதாக இருக்கின்றது.

கி.மு. 1300ஆம் ஆண்டு, மனுராசா அல்லது மாணிக்கராசா எனும் தமிழ் மன்னன் இலங்கையை ஆண்டான் என்றும், அவன்தான் திருக்கோணேஸ்வரர் கோயிலைக் கட்டுவித்தான் என்றும் கோணேசர் கல்வெட்டுக் கூறுகின்றது. (அஜூடா நூல்நிலையச் சுவடி, கொண்டு விஸ்ரா பக்.51) கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் குளக்கோட்டு மன்னனால் அக்கோயில் புனருத்தாரணம் செய்யப்பட்டதாகவும், வரலாறு சான்றுபகர்கின்றது. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ் மன்னன் இராவணனால் வழிபடப்பட்ட சிவத்தலம் திருக்கோணேஸ்வரம் என புராண இதிகாசங்கள் எடுத்தியம்புகின்றன. திருக்கோணேஸ்வரரை பழந்தமிழ் மன்னன் இராவணன் வழிபட்டு வந்தான் என்பதை கி.பி.ஏழாம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தரும் தன் தேவாரப் பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார். தமிழ்க் கடவுள் எனப்போற்றப்படும் முருகனுக்கு தமிழ்மக்கள் தென்னிலங்கை கதிர்காமத்திலுள்ள மாணிக்க கங்கைக்கரையில் கோயிலமைத்து நீண்டகாலத்திற்கு முன்னிருந்தே வழிபட்டுவருகின்றனர்.

இலங்கைத்தீவின் கிழக்குக் கரையோரமாக திருக்கோணேஸ்வரம், மாமாங்கேஸ்வரம், மேற்குக் கரையோரமாக திருக்கேதீஸ்வரம் முன்னேஸ்வரம், வடக்குக் கரையில் நகுலேஸ்வரம், தெற்குக் கரையில் தேவேந்திரமுனையில் உள்ள சந்திரமௌலீஸ்வரர் ஆலயம் என பல்லாயிரம் ஆண்டுகளாகத் துலங்கிவரும் திருத்தலங்கள், பண்டைத் தமிழர் இலங்கைத் தீவு முழுவதிலும் சிவவழிபாட்டைச் சிறப்புற நடத்தி வந்ததை உறுதிப்படுத்துகின்றன.

பல்வேறு வகையிலும் தமிழர்கள் ஈழத்தின் பல்வேறு திசைகளிலும் தனித்துவமான சிறந்த பண்பாட்டு, வழிபாட்டு நெறிகளுடன் நாகரீகமாக வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். விஜயன் வருகைக்குமுன்னரே ஈழத்தின் நாற்றிசையிலும் தமது பண்பாட்டுச் சின்னங்களை நிறுவியிருந்திருக்கின்றனர். ஈழத் தமிழர்கள் கல்வியில் சிறந்தவர்கள், பண்பாட்டில் உயர்ந்தவர்கள், உழுதுண்டு வாழ்வதிலும் உயர்ந்த இடத்தைப் பிடித்திருந்தனர். தமது தேவைக்கு அதிகமாக நெல்மணிகள் குவிந்து கிடந்தபோது, அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்திருக்கின்றார்கள். சோழநாட்டுத் தலைநகரான காவிரிப் பூம்பட்டினத்து அங்காடிக்கு ஈழத்து உணவுப் பொருட்கள் விற்பனைக்குச்சென்றது குறித்து கடியலூர் உருத்திரங்கண்ணனார் பட்டினப்பாலையில் குறிப்பிட்டுள்ளார்.



முற்றும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போராளிகளின் படைப்புக்கள்

## உணர்வுத் தீ

அடங்கிக் கிடந்த என்னுள்
நான் அறியாமலேயே
உட்புகுந்தது உணர்வுத் தீ
நிமிர்ந்தேன் – நினைவுகளில்
நெருப்பை அணிந்தேன்
தாயகக் கனவு
என் கண்களெங்கும்
படர்ந்து நிறைந்தது
புதுவேகத்தோடு பயணித்தேன்
இலட்சியப் பாதை
தியாகத்தின் உச்ச மனிதர்களால்
செப்பனிடப்பட்டிருந்தது.
இரத்தக் கறைகள்
பாதை நீட்சியெங்கும்
பரவிக்கிடந்தன.
பயண வழியில்
இன்னும் பல தோழர்கள்
ஒளி கொண்ட ஒரு பெரு மனிதன்
வழி நெடுகிலும்
எம்மை அழைத்துச் செல்கின்றார்.
இலக்கை அடைந்துவிடும் நம்பிக்கை
எமக்குள் வலுவாய் இருக்கின்றது.

செ. இராணிமைந்தன்

## வெற்றியை நோக்கி

அடிக்கின்ற அலைவீச்சில்
அணைந்தது அக்கினிச்சுவாலை
அலைகின்றார் – அன்னியர்கள்
அகதியாய் அன்றெம்மை ஆக்கியவர்
அவதியாய் இன்றெங்கே ஒடுகிறார்.
ஓயாது அடிக்கின்ற
ஓயாத அலையினால்
பிடிபட்டுப்போன – எம்
வெட்ட வெளி நிலத்தில்
பட்டபனை மரத்தை – தன்
பாட்டன் நட்டான் – என்று
என்பாட்டன் சொன்னான்.
எத்தனை மனித
விதைநட்டு பெற்றோம்
இந்த வெற்றி – இதற்காய்
விதையாகிப் போன
வீழாக் கரங்களுக்கு
விழாக் காலம் இது – வீரரே
வீணாகிப் போகவில்லை உம் வாழ்வு
வீழ்ந்துவிடவில்லை உம் துவக்கு – அது
வீழ்த்தி வீழ்த்தி எதிரியை வீழ்த்தி
வீறுநடை போடுகிறது வெற்றியை நோக்கி

த. அகிலன்

## கதை கூறுமிவர்

பள்ளி வாத்தி சொன்னதும்
ஞாபகமாய் என் நெஞ்சில் நிறைந்தது
காலை எழும்பு பாடம்படி
இன்று நான் அதை நினைக்கையில்
மனம் புல்லரித்தது

இன்று நான் காலையில் விழித்ததும்
சுடுதவன் கரமெடுத்து
தோழிற் சுமையுடன்
தொலை தூரம் நடக்கிறேன்
வால் மறையா அம்புலி
வடிவாய் எமைப் பார்த்தது
கையசைத்து நான் விடைபெற
கண்சிமிட்டாது நின்றது.

முகிலுடன் ஓடியே நான்
போகும் திசை தேடிவந்தது
இக்கதை கூறி
வெடிசுமந்தா னொருவீரன்
இப்பவும் நான்
அண்ணாந்து பார்க்கின்றேன்
வானத்து வெளியை
அதனுடன் நிலவை அதன் எழிலை
வாயிருந்தால் கூறிவிடும்
அந்த வாசமலர் போனதிசை
நேசமுடன் நாளை வந்து
கூறிவிடு நிலவே!
அவர்களே எங்களின்
இதயத்துக் கோயில்கள்

இ. தில்லைவெற்றி



## சின்னவர் வாழ்விற்காய்

நோக்கியபடியிரு!
இயற்கை செயற்கைகளின்
தாக்கங்கள்
உன்மேல் விழலாம்
தளராதே...
உறுதியுடன்
நோக்கியபடியிரு!

களைக்கும்
மனவழுத்தம் ஏற்படும்
தளர்ந்துவிடாதே...
பலவுயிர்கள் தத்தளிக்கும்
அதையெண்ணி
தொடர்ந்தும்
நோக்கியபடியிரு!

தூரம் குறுகியது
உளமுடைந்தால்
மீள எழுவது கடினம்
அந்தம் நெருங்கும் வரை
உன் பின்னவர் வாழ்விற்காய்
அசையாமல்
நோக்கியபடியிரு!

நா. கானகன்

## அழியாமல்

அழியா நினைவுடன்
அனலாகிப் போனாய் – நண்பா!
அதனால் என் மனம்
அவதிப்படுகின்றது!
அன்பின் அதிபதியாய்– என்னை
அரவணைத்தாய்
அன்னியனை விரட்டிவிட
அடிபணியாதுதிடம் பூண்டாய்
அன்னியன் உனைக்கண்டு
அவதிப்பட்டான் நண்பா!
அவனை அழித்திட ஓயாத
அலையாய்
அலைமதில் அனலானாய்
எனினும் உன்
அடிப்பாதம் தொடர்வோம்
நண்பா...
அழியா உன் நினைவுடன்
அயராது தொடரும் எம்
போராட்டம்

எல்லாளன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



—நதி—

**உடனே** அதற்கேற்ற மாதிரி யாரும் சொல்ல முன்பே தன் நிலையை அமைத்து, தேவையான இடங்களில் சூழ்ச்சிப் பொறிகளை இணைத்து, இரண்டு நாட்களுக்குள் நிலாமதியின் ஆட்கள் சண்டைக்குத் தயார். அம்பகாமத்தில் Watershed நகர்ந்து வந்த பாதைகளில் ஒன்று நிலாமதிக்கு நேரே தனது ரவைகள் முடியும்வரை நிலாமதி அடித்துக்கொண்டேயிருந்தார்.

1990இல் தன்னை இணைத்துக் கொண்ட கப்டன் அருந்தா ஆனையிறவு ஆ.க.வெ. நடவடிக்கையில் தலையில் காயமுற்றார். அதன் பின் சிலகாலம் Screen Printing வேலை பயின்று பணியாற்றிவந்தார். பின்னர் வேவுப் பயிற்சி பெற்று லெப். கேணல் மைதிலியின் வழிநடத்தலில் வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டார். பின்னர் சிலகாலம் எமது அமைப்பின் சிறப்புப் பயிற்சியொன்றில் ஈடுபட்டவர், மறுபடியும் மாலதி படையணிக்கு வந்து எமது அணியொன்றின் பதில் பொறுப்பாளராகக் கடமையாற்றினார்.

அருமை அடர்வனமே! இவர்களில் எவரை, எப்போது, எப்படி எங்களால் மறக்கமுடியும் சொல்லு? எங்கள் உயிரணுக்களிலும், உன் ஒவ்வொரு துணிக்கைகளிலும் அல்லவா இவர்கள் இணைந்துவிட்டிருக்கின்றார்கள்!

வீட்டில் இருக்கும்போதே முறிந்த வலது கையுடன் லீமா-05 பாசறையில், கயிற்றில் ஏறுவது தவிர்ந்த அனைத்துப் பயிற்சிகளையும் சிறப்பாகச் செய்தவர் லெப். மலர்நிலா, ஓட்டத்தில் தனது அணியில் அநேகமாக முதலாவதாகவே வருவார். ஜெயசிக்குறு எதிர்நடவடிக்கைச் சமர்க்காலத்திலேயே பின்னணி விநியோக அணியொன்றின்- 2ஆவது பொறுப்பாளராகி, பின் மேஜர் தமிழ்நிலாவினதும், கப்டன் சரவணாவினதும் 81 mm மோட்டார்களில் நின்றார்.

ஓயாத அலைகள்-2இன் பின் குழுவொன்றின் பொறுப்பாளர் ஆனார். வாய் பேசமாட்டாத அன்னைக்கு மலர்நிலா பிறக்க முன்னரே தந்தை பிரிந்துவிட்டார். இதனால், மேஜர் பரா எப்போதும் மலர்நிலாவிடம் பரிவுடன் நடந்துகொள்வார். இவர் தனது அணியினருடன் சிறப்புப் பயிற்சி ஒன்றைப் பெற்றுக்கொண்டார்.

எப்போதுமே குறும்புகள் செய்பவர் லெப். தோகைமயில். இவரின் முதற்சண்டை 1997 தாண்டிக்குளம் மீதான தாக்குதல். ஜெயசிக்குறு காலப் பகுதியிலேயே சாதாரண நிலையிலிருந்து படிப்படியாக ஒரு குழுப் பொறுப்பாளர் நிலைக்கு உயர்ந்தார். ஓயாத அலைகள்-2இன் பின் எதிரி முன்னகர்ந்த சிறு சண்டையொன்றில் நிலமை சற்று இறுக்கமாகிவிடவே, யாரும் எதிர்பாராத வண்ணம் எழும்பி, தனியாக50m வெட்டையைக் கடந்து ஓடி, மறைப்பொன்றில் நிலையெடுத்து, தன்னிலிருந்து 25mஇல் நின்ற எதிரியைச் சுட்டு, சண்டையின் போக்கை எமக்குச் சாதகமாக மாற்றி அமைத்தார். சிறப்புப் பயிற்சி பெற்ற குழுவொன்றின் பொறுப்பாளராக அம்பகாமத்தில் நின்றார். மணலாற்றில் நின்ற போது எதிரியின் பகுதியினுள் நுழைந்து திடீர்த் தாக்குதல் ஒன்றைச் செய்துள்ளார்.

1997 கரப்புக்குத்தி, விஞ்ஞானகுளச் சண்டைதான் லெப். இசைநெறியின் முதல் சண்டை. அதற்கு முன் அடிப்படைப் பயிற்சி எடுத்துக்கொண்டு இருந்தபோதே ஜெயசிக்குறு எதிர்நடவடிக்கைச் சமருக்கு பின்னணி விநியோக வேலைகளைச் சிலகாலம் செய்தார். எமது அணி மூன்றுமுறிப்புப் பகுதியில் நின்றகாலத்தில் குழுவொன்றின் 3ஆவது பொறுப்பாளராக இருந்த இவர், ஓயாத அலைகள்-2 நடவடிக்கையில் பங்குகொண்ட பின் குழுப் பொறுப்பாளராக பயிற்றுவிக்கப்பட்டு, அம்பகாமம் வந்து குழுவொன்றின் பொறுப்பாளராகப் பணியாற்றினார். இடையில் சிலகாலம் மாங்குளத்தில் நின்று, மறுபடியும் அம்பகாமம் வந்தார். அமைதியான முகம், மிக அமைதியான இயல்பு. அதிர்ந்து பேசமாட்டார். பிழைகளை அமைதியாகக் கதைத்துத் திருத்துவார், எல்லோருடனும் மிக மரியாதையாக நடந்தார். மன்னகுளத்தில் சிறப்பாகச் சண்டை செய்ததற்காகத் தேசியத் தலைவரின் பரிசைப் பெற்றிருந்தார்.

1994இல் இணைந்துகொண்ட லெப். ஆதிரை களம் பல கண்டவர். கப்டன் அன்பழகியின் அணியினருடன் சிறப்புப் பயிற்சி ஒன்றைப் பெற்றுக்கொண்டவர். தனது 40mm உடன் Watershedஐ எதிர்கொண்டார்.

1998இல் அடிப்படைப் பயிற்சி முடித்ததும் லெப். செவ்வந்தி அம்பகாமத்தில் கால்வைத்தார். சில காலத்தின் பின் LMG பயிற்சிக்கு எனத் தெரிவுசெய்யப்பட்டு, பயிற்சி பெற்று, LMGயுடன் களங்களில் நின்றார். LMG உதவியாளராக ஆரம்பத்தில் இருந்த இவர் தனது திறமையான செயற்பாடுகளால் LMG இயக்குநராக உயர்ந்திருந்தார். மேஜர் வாணியின் அணியின் குழுவொன்றுடன் அம்பகாமத்தில் இவர் நின்றிருந்தார்.

1996இல் அமைப்போடு தன்னை லெப். வில்லவள் இணைத்துக் கொண்டபோது மிகவும் சிறியவர் என்றதால் படைத்துறைப் பள்ளியில் விடப்பட்டார். நன்றாகப்படித்தார். மிகவும் பொறுமைசாலி. கவிதை வாசிப்பதில் எப்போதுமே முதலிடம். ஆள் இருப்பதே தெரியாதளவுக்கு அமைதியானவர். தானும் சுத்தம், தன் ஆயுதத்தையும் சுத்தமாகவே வைத்திருந்தார். படித்துக் கொண்டிருக்கும்போதே T 56-11துப்பாக்கி வழங்கப்பட்டது. கராத்தே பயின்றிருந்தார். 1999இன் ஆரம்பத்தில் மாலதி படையணிக்கு வந்த இவர் சாதாரண நிலையில் இருந்து குழுவொன்றின் 2ஆவது பொறுப்பாளராக உயர்ந்திருந்தார்.

அம்பகாம அடர்வனமே! அதில் வீசும் இளங்காற்றே! இந்த மாவீரர்களின் தீரத்தை நீங்கள் பேசும்போதெல்லாம் உரத்துப் பேசுங்களேன்.

1993இல் தன்னை அமைப்போடு இணைத்த லெப். அன்புவிழி படைத்துறைப்பள்ளியில் இருந்த காலத்தில் படிப்பில் கெட்டிக்காரி, மெலோடிக்கா, ஒக்ரோபட் வாத்தியங்களை வாசிக்கவும், நடனம் ஆடவும், கராத்தேயும் பழகியிருந்தார். கொத்துவேலை, மரவேலை, கட்டுமானம் என்று எல்லாமே தேவையான ளவுக்குப் பழகியிருந்தார். படிப்பு முடிந்ததும் R.P.G. பயிற்சி எடுத்து, அதன் இயக்குநராக விடப்பட்டார். ஓயாத அலைகள்-1, தாண்டிக்குளம், விஞ்ஞான குளச் சண்டைகளுக்கு பின்னணி ஆயுத விநியோக வேலைகளைச் செய்தார். மாலதி படையணிக்கு வந்தபின்னர் கிளிநொச்சி, பள்ளமடு, அம்பகாமம் பகுதிகளில் நின்றிருந்தார்.

சரியான உயரம், கம்பீரமான நடை. குழந்தைத்தனமான இயல்பு. மேஜர் பராவின் ஒன்றுவிட்ட சகோதரியான அன்புவிழி ஒரு தென்னையில் இருந்து மறு தென்னைக்குத் தாவியே போவார்.

ஆரம்பத்தில் சிறுத்தை மகளிர் அணியில் இருந்து நடவடிக்கைகளில் பங்குபற்றிய லெப். தர்மாவதி, மாலதி படையணிக்கு வந்து அம்பகாமத்தில் மேஜர் சந்திராவின் அணியின் குழுப் பொறுப்பாளர்களில் ஒருவராகப் பணியாற்றினார்.

1997இன் ஆரம்பத்தில் பயிற்சியை முடித்துக்கொண்ட 2ம் லெப். அமுதவிழி சரியான குழப்படி. ஆனால், சண்டைகளில் சொன்னதைச் செய்யும் திறமைசாலி. ஒருவேலையைப் பொறுப்பாகக் கொடுத்தால் சிறப்பாகச் செய்வார். கம்பீரமான கட்டளையிடும் குரல். அவருக்கு லீமா-10 பாசறையின் ஆசிரியர்களில் ஒருவராகச் செயற்பட்ட பின் மறுபடியும் சண்டைக் களங்களிலேயே நின்றார். மேஜர் சந்திராவின் அணியில் குழுவொன்றின் 2ஆவது பொறுப்பாளராக கடமையாற்றினார்.

1997இல் பயிற்சி எடுத்த 2ஆம் லெப். சோழமணி பார்வைக்குப் பலவீனமானவர் போல் தெரிவார். சரியான நித்திரைச்சாமி.

அடைகாத்
அலைக



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒருமுறை மழைபெய்து வெள்ளம் நிறைந்திருந்த நிலையொன்றுள் நித்திரை தூங்கி விழுந்தவரை லெப். இசைநெறிதான் இழுத்து எடுத்துவிட்டார். யார் சொனாலும் வேலை செய்யக்கூடிய தன்னடக்கமுள்ள போராளி. மேஜர் சந்திராவின் அணியுடன் நின்றிருந்தார்.

1997இல் இணைந்துகொண்ட 2ஆம் லெப். நகைமலர் பயிற்சிகளில் முன்னணியில் இல்லாவிட்டாலும், கடுமையாக வேலைகள் செய்வார். காவற்கடமையில் கவனம் அதிகம். இவரது பொறுப்பில் விடப்படும் வேலைகள் சிக்கல்கள் இன்றி முடியும். ஜெயசிக்குறு எதிர்நடவடிக்கைச் சமரில் தாண்டிக்குளம், புளியங்குளச் சண்டைகளுக்கு பின்னணி விநியோக வேலையாக நின்றவர், மன்னகுளச் சண்டையில் பங்கேற்றார். அம்பகாமத்தில் மேஜர் வாணியின் அணியில் ஒருவராக நின்றார்.

வெவ்வேறு சூழ்நிலையில் பிறந்து, வேறுவேறு பண்புகளைக் கொண்டவர்களாக வளர்ந்து, எங்கள் தாயகத்தை மீட்டெடுக்க, தலைவரின் இலட்சியத்தை ஈடேற்ற உன் மடியில் ஒன்றாய் நின்று உழைத்தார்களே இந்த வீரக்குழந்தைகள். அவர்களுக்குள் இருந்த கற்பனைகளையும் அவர்களின் குறும்புகளையும் எங்கள் எல்லோரையும்விட நீதான் அறிவாய் நெடிதுயர்ந்த காடே!

1998இல் இணைந்த 2ஆம் லெப். மலர்மகள் அடிப்படை பயிற்சியில் கெட்டிக்காரி. அது முடிந்ததுமே PK பயிற்சிக்குப் போய்விட்டார். எதற்குமே இயலாது என்று பின்னின்றதில்லை. எல்லோருடனுமே மரியாதையாகப் பழகினார். சிலகாலம் மாங்குளத்தில் லெப். கேணல் மைதிலியின் கொம்பனியுடன் நின்றார். கடைசி நாட்களில் அம்பகாமத்தில் கப்டன் நிலாமதியின் PK இயக்குநராக சண்டையில் பங்கெடுத்தார். சரியான குழந்தைத்தனம் கொண்ட இவர், ஒரு குழுப்பொறுப்பாளராகச் சிறப்புப் பயிற்சி ஒன்றைப் பெற்றிருந்தார். வேலை செய்து கொண்டிருக்கும் நேரங்களிலேயே சக போராளிகளுக்கு நல்லவிடயங்களை அறிவுறுத்திக் கொண்டிருப்பார்.

எல்லோரையும்விடச் சிறியவராக 2ஆம் லெப். அகத்தமிழே இருந்தார். யார் மிரட்டினாலும் மிரண்டுவிடும் இயல்பு அவருக்கு. 1998இல் பயிற்சி முடிவடைந்ததும் புதியவராக வந்ததே அம்பகாமத்துக்குத் தான். நெருக்கடி மிகுந்ததாக ஏழு மாதங்கள் வரையில் நீண்ட மாங்குளச் சண்டையில் ஜெயசிக்குறுப் படைகளைத் தடுத்து நிறுத்தியவாறு இவரும் மாங்குளத் தளத்தினுள் நின்றார். மேஜர் கனிபாவின் அணியுடன் ஓயாதஅலைகள்-2 நடவடிக்கையில் பங்குகொண்டார். 1998 முடிவில் பயிற்சி முடிந்ததும் கிளிநொச்சியில் குடிகொண்டிருந்த பகையைச் சூழ்ந்து அரண் அமைத்த அணியில் 2ஆம் லெப். அணியரசியும் நின்றிருந்தார். ஓயாத அலைகள்-2 நடவடிக்கையில் பங்குபற்றி பின் கப்டன் அன்பழகியின் அணியுடன் அம்பகாமத்தல் நின்றார்.

1998இன் ஆண்டிறுதியில் பயிற்சி முடிந்து வெளியேறிய 2ஆம் லெப். ஈழவள் RPG யுடன் ஒரு காவல் நிலையின் பொறுப்பாளராக நின்றார். மேஜர் சந்திராவின் அணியில் நின்ற இவர் வேலைளைப் பொறுப்புணர்வுடன்செய்யக்கூடியவர். லெப். இசைநெறிக்கு அடுத்த பொறுப்பாளராக இவர் Watershedஐ எதிர்கொண்டார். 1998இன் இறுதிப் பகுதியில் தன் அடிப்படைப் பயிற்சியை முடித்துக் கொண்ட 2ஆம் லெப். அருந்தா, மேஜர் சந்திராவின் அணியில், லெப். தர்மாவதியின் குழுவில் ஒருவராகச் சண்டையில் கலந்துகொண்டார்.

1995இல் அமைப்போடு இணைந்த 2ஆம் லெப். ஜீவிதாவின் குடும்பம், அவரின் சிறுவயதிலேயே தந்தை இறந்ததால் மிகவும் சிரமப்பட்டது. மூன்று தம்பிமார்களுடன் வளர்ந்த இவருக்கு வீட்டில் இருந்தபோது கிடைக்காத கல்வி வாய்ப்பு, படைத்துறைப்பள்ளியில் கிடைத்தது. கராத்தே, வலைப்பந்தாட்டம், கூடைப் பந்தாட்டம், கட்டுமானப்பணி, எக்கோர்டியன் வாத்தியம் எல்லாமே பழகினார். யாரையும் கண்டவுடனேயே கதைக்கத் தொடங்கிவிடுவார். ஆரம்பத்தில் வேவு அணியுடன் நின்றவர், மாலதி படையணிக்கு வந்தபின் தடை உடைக்கும் அணியாக நின்றார். மணலாற்றில் எமது படையணி நின்றபோது லெப். தோகைமயிலுடன் எதிரியின் எல்லைக்குள் போய் திடீர்த் தாக்குதல் ஒன்றில் சுடுபட்டார்.

1993இல் 2ஆம் லெப். கீர்த்தனா, தான் பணியாளாக வேலைக்கு நின்ற இடத்தில் இருந்து வந்து இணைந்துகொண்டார். படிப்பில் முன்னணியில் நிற்கவில்லை. எல்லாவற்றையும் செய்யும் விருப்பத்தில் முயற்சிகள் செய்துபார்த்துக்கொண்டே இருப்பார். கராத்தேயில் மண்ணிறப்பட்டி வாங்கியிருந்தார். தானாகக் கதைக்காத அமைதியான இயல்பு. கேட்டகேள்விக்கு மட்டும் பதில் வரும். படித்துக்கொண்டிருந்தபோதே தன்னைச் சண்டைக்கு விடுமாறு கேட்டார். கடுமையாகப் பயிற்சி செய்யமுடியுமா என்று பொறுப்பாளர் கேட்டபோது, கடும் பயிற்சிகளைச் செய்து காட்டினார். எல்லோருக்காகவும் வேலை செய்து கொடுப்பார். அவர் தயாரிக்கும் தேநீரையும், சமையலின் சுவையையும் யாராலுமே மறக்கமுடியாது.

குறும்புத்தனத்தின் உச்சம் 2ஆம் லெப். சூட்டி 1999இல் பயிற்சி எடுத்து அம்பகாமம் வந்துநின்ற இவரைச் சரியான முறையில் கையாளுவதற்கிடையில்குழுப் பொறுப்பாளர்கள் களைத்தேவிட்டார்கள். 'கண்ணீரில் காவியங்கள்' என்ற மேஜர் செங்கதிரால் எழுதப்பட்ட பாடலை அடிக்கடி பாடுவார். எந்தப் பாடலுக்குமே நடனம் ஆடுவார். உருமறைப்புச் செய்யுமாறு விட்டால், முகம் முழுவதும் கரி பூசிக் கொண்டு வந்து தண்டனை வாங்குவார். யார் தண்டிப்பதைப் பற்றியும் கவலைப் படுவதில்லை, சரியான உற்சாகம். மேஜர் சந்திராவின் அணியில் லெப். இசை நெறியின் குழுவில் ஒருவராக நின்று Watershedஐ எதிர்கொண்டார்.

1998இல் தன் அடிப்படைப் பயிற்சி முடிந்ததும், கிளிநொச்சியில் குடிகொண்டிருந்த பகையைச் சூழ நிலையமைத்து நின்ற அணியில் வீரவேங்கை இசைக் குட்டியும் நின்றார். ஓயாத அலைகள்-2 நடவடிக்கையில் பங்கெடுத்து சிலகாலம் மேஜர் உமாவின் அணியில் மணலாற்றிலும், கிளிநொச்சியிலும் நின்றபின் அம்பகாமம் வந்திருந்தார். அமைதியான போராளி. எல்லோரின் வேலைக்கும் ஒத்துழைப்புக் கொடுப்பார்.1999இல் இணைந்த கனிமொழியின் குறும்புகள் தாங்காமல், பயிற்சிப்பாசறையில் குழு ஒன்றின் பொறுப்பாளராக விடப்பட்டார். அதன் பின்பும் குறும்புத்தனம் குறையவில்லை. ஆனால், தன் குழுவினரில் கவனம் அதிகம். வீரவேங்கை இசைக் குட்டியுடன் இவர் அம்பகாமத்தில் நின்றார்.

1997இல் பயிற்சியை முடித்து 82mm மோட்டாரில் நின்ற வீரவேங்கை கனிவிழி, மேஜர் தமயந்தியுடன் இணைந்து ஓயாத அலைகள்-2இல் மோட்டார் சூட்டாதரவை வழுத்திருத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டார். கிளிநொச்சியை விட்டு எதிரி கும்பலாகத் தப்பியோட முயன்றபோது எதிரியால் மிதிபட்டுக்காயம் அடைந்து விழுந்த இவரைக் காப்பாக வைத்து, எதிரி ஒருவன் LMG அடித்ததைச் சுவையாகச் சொல்லிச் சிரித்தார். அம்பகாமத்தில் மேஜர் இளம்பிறையின் அணிக்கு மோட்டார் ஆதரவுச் சூட்டைப் பெற்றுக்கொடுப்பவராகப் பணியாற்றினார். முன்னர் பள்ளமடுவில் நின்றபோது மேஜர் தமயந்தி, மேஜர் ஐயனுடன் எமது காவலரண் வரிசையை நேர்ப்படுத்து வதற்காக எதிரி வரக்கூடிய பகுதிகளில் போய் நிலைகளை அமைப்பதற்கானஇடங்களைப் பார்த்துக் கொடுத்தார். யாரைக் கொடுத்தாலும் பொறுப்பாக நின்று வேலைகளைச் செய்விக்கக்கூடியவர்.

தொடரும்......

து வனமும்
ழுந்த விதமும்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குடாரப்பு



ஆனையிறவு வீழ்ச்சிக்குக் காத்திரமான அடித்தளம் அமைத்துக்கொடுத்த குடாரப்பு தரையிறக்கத்தை, நேசநாடுகள் மேற்கொண்ட நோமண்டி தரையிறக்கத்திற்கு ஒப்பிட்டு ஆய்வுக் கட்டுரைகளிலும் உரைகளிலும் பேசப்படுகின்றன. இது எந்தளவுக்கு நியாயமானது என்று ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம். 1944ஆம் ஆண்டு யூன் மாதம் நேசநாடுகளின் அணியில் அமெரிக்கா, பிரித்தானியா, ரஷ்யா, அவுஸ்திரேலியா, யூகோஸ்லாவியா, இந்தியா, பிரான்ஸ், எகிப்து, சீனா, கனடா உள்ளிட்ட 52 நாடுகளின் வளங்கள் குவிந்திருந்தன. எதிரணியிலோ ஜேர்மனி, ஜப்பான், இத்தாலி உட்பட ஒன்பது நாடுகள். நேச நாட்டு விமானங்களின் குண்டுவீச்சில் ஜேர்மனியின் போர்த்தளபாட தொழிற்சாலைகள், வளங்கள், அமைப்புகள் சிதறடிக்கப்பட்டு, கட்டளையிடல், கட்டுப்படுத்தல் அமைப்புக்கள் சீர்குலைந்து போய் உளவுரம் அதலபாதாளத்தில் வீழ்ந்திருந்த நேரம். ஜேர்மனியின் விமானப்படை மோசமான இழப்புக்களுக்குட்பட்டு, நேசநாடுகளின் விமானப்படைகள் தீர்க்கமான மேலாதிக்கத்தைப் பெற்றுவிட்டிருந்தன. ஜப்பானும் இத்தாலியும் கிட்டத்தட்ட முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டிருந்த நேரம் அது.

இப்போது நோமன்டிக்கு வருவோம். நோமன்டி என்பது பிரான்சின் வடபுறத்தில் அமைந்திருக்கும் கடற்கரைப்பகுதியாகும். இங்கே 1944-06-06ஆம் தினமன்று மொஸ்கிற்றோ (Mosquito) குண்டுவீச்சுவிமானங்கள் குண்டு வீசி காப்புக் கொடுக்க, நோமன்டிக் கரையோரங்களுக்கு அப்பால் பரசூட் துருப்பினர் தரையிறங்குகின்றனர். தங்களைத் தொடர்ந்து வரப் போகின்ற துருப்புக்காவிக் கிளைடர் விமானங்களுக்கும் போக்குவரத்து விமானங்களுக்குமென தரையிறங்கும் களங்களை ஆயத்தம் செய்கின்றனர். வான்வழி நெருங்கித் தாக்கும் துருப்புகள் கரையோரப் பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தாக்கி ஜேர்மனிய சேமப்படைகளின் முறியடிப்புத் தாக்குதலுக்கு தாக்குப்பிடிப்பதற்கான நிலைகளை அமைக்கின்றனர். இதற்கிடையே பிரதான தரை இறங்கல் படை நகர்கின்றது. முன்னணியில் வரும் கண்ணிவாரிக்கப்பல்கள் ஆங்கிலக்கால்வாயில் கண்ணிவெடிகளை அகற்றிக்கொடுக்கின்றன. அலையலையாக விமானங்கள் பொழிந்த குண்டு மாரிக்கு மேலதிகமாக ஆறு சமர்க்கப்பல்கள் ஜேர்மனியர்களின் கரையோர நிலைகளை குண்டு வீசித் தாக்குகின்றன. இந்தக் காப்புத் திரையின் பின்னால் 800 போர்க்கப்பல்களின் பாதுகாப்போடு வீரர்கள், உபகரணங்கள் மற்றும் ஆரம்ப நெருங்கித் தாக்குதலுக்கான வழங்கல்களோடு, 4,000 தரையிறங்கும் கலங்களில் வந்த நேசநாட்டுப் படையினர் 80 மைல்கள் நீளமான கடற்கரையை உள்ளடக்கிய ஐந்து இடங்களில் தரையிறங்குகின்றனர்.ஐந்து நாட்கள் நடந்த சண்டையின் பின்பு, அதாவது 11-06-1944 அளவில் 80 மைல்கள் நீளமும் 20 மைல்கள் அகலமுமான நிலப்பரப்பிலே நேசநாடுகளின் 16 டிவிசன்கள் நிலைகொள்கின்றன. ஏறக்குறைய 18-06-1944 அளவிலே அமெரிக்க டிவிசன்கள் 13, பிரித்தானியடிவிசன்கள் 11, கனேடிய டிவிசன் 1 ஆகியவை அடங்கிய 25 டிவிசன்களைச் சேர்ந்த 10,00,000 துருப்புகள் நூகனரக சுடுபடைக்கலன்கள், பிரமாண்டமான எண்ணிக்கையிலான டாங்கிகள், ஆட்லறிகள், வான் கலங்கள் சகிதமாக அங்கே நிலைகொண்டிருந்தன. இதேயளவு ஜேர்மன் துருப்புகளும் நேசநாட்டுத் துருப்புக்களுக்கெதிராக போரிட்டதாகச் சொல்லப்பட்டாலும் அவர்களுடைய போரிடும் வலுவும், உளவுரனும் பெரிதும் சீர்குலைந்து இருந்தன.

இந்தத் தரையிறக்கம் ஏன் மேற்கொள்ளப்பட்டது என்பது ஒரு பில்லியன் டொலர்கள் கேள்வியாகும்.

1. பிரான்சின் கரையோரங்களிலிருந்த ஏவு தளங்களில் இருந்து ஏவப்பட்ட ஏ1 மற்றும் ஏ2 றொக்கட்டுக்கள் இங்கிலாந்திற்கும் அங்கு குவிக்கப்பட்டிருந்த நேசநாட்டுப் படைகளுக்கும் ஏற்படுத்திய அச்சுறுத்தல் இவற்றுக்கெதிரான பயன் விளைவுள்ள முறியடிப்புகள் எதுவுமில்லாமல் நேசநாட்டுப் படைகள் திணறின. றொக்கட் தொழில்நுட்பத்தைக் கைப்பற்றுவதிலும் ஜேர்மனி தான் கைப்பற்றிய இடங்களிலிருந்து கொண்டுவந்து குவித்திருந்த செல்வம் விஞ்ஞானிகள் முதலியோரைக் கைப்பற்றிக் கொள்வதிலும் அமெ



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரிக்கா, பிரிட்டன், ரஷ்யா ஆகிய நாடுகளுக்கிடையே நிலவிய போட்டி.

2. கிழக்குப் போரரங்கில் முன்னேறி வந்த ரஷ்யப் படைகள் ஜேர்மனியை முதலில் கைப்பற்றும் ஏதுநிலை தோன்றியிருந்தது. ரஷ்யா ஜேர்மனியைக் கைப்பற்றினால் ஐரோப்பா முழுவதும் கொம்யூனிச மயமாகிவிடும் என்ற அச்சம் முதலாளித்துவ நேசநாடுகளிடையே எழுந்திருந்தது. ரஷ்யப்படைகளுக்கு முன் தாம் பேர்லினுக்குள் சென்றுவிட வேண்டுமென்ற நோக்கம் உருவாகியிருந்தது. நோமன்டித் தரையிறக்கம் மேற்கொள்ளப்பட்டதற்கான காரணங்களில் இவை முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

இனி குடாரப்புக்கு வருவோம்:

குடாநாட்டில் நிலைகொண்டிருந்ததாகக் கருதப்படும் ஏறத்தாழ 30,000 படையினரின் ஆள் வலு, கிபிர், எம்,ஐ.24 வான்கலங்களின் தாக்குதல் வலு, கண்ணுக்கெட்டாத உயரத்தில் வேவு விமானம், அதற்கும் மேலே முதுகில் குத்துவோரின் செய்மதிகள், ஏராளமான டாங்கிகள், குறுந்தூர, நெடுந்தூர எறிகணைச் செலுத்திகள், ஆட்லறிகள், கண்காணிப்பு ராடர்கள், கடலில் மிதக்கும் கோட்டையாய் கட்டளைக்கப்பல், 16ற்கும் மேற்பட்ட டோறாக்கள், ஏற்கனவே புலிகள் கைப்பற்றியிருந்த கட்டைக் காட்டை மீளக் கைப்பற்றவென மேஜர் ஜெனரல் காமினி ஹெட்டிஆராச்சியின் தலைமையில, ஒருவருக்கு ரூபா 3,75,000 செலவிலே பயிற்சி அளிக்கப்பட்டு போராயத்தத்தோடு காத்திருந்த 53வது டிவிசனின் துருப்புக்கள் முதலியவை அடங்கலான எதிரிப் படையை எதிர்கொண்டு 26-03-2000 அன்று இரவிலே வான்பலம் என்பது மருந்துக்கும் இல்லாத எமது அணி நகரத் தொடங்கியதுமே, தாழையடிக்கு நேரே மோதல் ஏற்பட்டுவிட்டது. இருந்தும் அந்த நெருக்கடியிலும் திகைப் பூட்டுதல் அம்சம் நிறைவேறிவிட்டது. உயரே கட்டளைக் கப்பல், 16 டோறாக்கள் முதலியவை கரையை நோக்கிச் சூடுகளை வழங்க, கரை நெடுக நிறுத்தப்பட்டு கடலுக்குள் 7 கிலோ மீற்றர் தூரத்திற்கு டாங்கிகள் சூடுகளை வழங்க, அந்தச் சூடுகளின் நடுவால் கிட்டத் தட்ட 10 கிலோ மீற்றர் தூரம் எதிரியின் பலத் தோடு ஒப்பிடும் பொழுது மிகக்குறை வான வகைதொகையிலான கடற்புலிகளின் சண்டைப் படகுகளும், கடற்புலிகளின் மன ஓர்மமும் தந்த காப்பை மட்டும் நம்பித் தரையிறங்க விருந்த அணி நகர்கிறது. தரையிறங்கத் திட்டமிட்டிருந்த குடாரப்புவில் தரையிறங்கிய அன்றே கடல் நீரேரி, சதுப்புகள் கொண்ட கரடுமுரடான தரையமைப்பின் ஊடாக, காப்புகளற்ற பகுதிகளூடாக நகர்ந்து ஏ9 கண்டி வீதியை எதிரி அறியாமலே ஊடறுத்து நிலைகளை அமைத்துக்கொள்கிறது எமது அணி. வத்திராயன், தாழையடி, மருதங்கேணி முகாம்கள் கைப்பற்றப்பட்டு உடுத்துறை வழியான விநியோகப்பாதை 29-03-2000 அன்று திறக்கப்படும்வரை அபாயகரமான கடல்வழி விநியோகத்தை மட்டும் நம்பி, தரையிறங்கிய படை நிலைகொண்டிருந்தது. சூழவர எதிரிகள், ஒடுக்கமான விநியோகப்பாதையோடு தாக்குப் பிடித்த அணியிலே விரல்விட்டு எண்ணக்கூடிய கொம்பனிகளே இருந்தன. பின்பு இந்த அணியை அழித்துவிட எதிரி எடுத்த 8 முயற்சிகளையும் மயிர்க்கூச்செறியும் விதத்தில் நெருக்கமான முறியடிப்புச் சமர் புரிந்து முறியடித்ததிலே 53வது படையணியின் தளபதி மேஜர் ஜெனரல் காமினி ஹெட்டிஆராச்சி பதவியை விட்டுத்தூக்கி எறியப்பட்டார். இந்த வகையிலே, முழுமை யான வான் மேலாண்மை முழுமையான சூட்டுக்காப்புக்கள், குண்டு வீச்சுத் திரைகளுடன் ஆங்கிலக் கால்வாயிலிருந்து எதிரியை நேரே பின்னால் தள்ளிய நேசநாட்டுப் படைகளையும் வான் பலமே இல்லாமல், சூட்டுக்காப்புகளை குறைந்த அளவில் கொண்டு நீரின் கீழாலிருந்து தவிர ஏனைய அனைத்துப் பக்கங்களிலும் இருந்து பொழியப் பட்டுக்கொண்டிருந்த எதிரிச் சூடுகளுக்கு நடுவில் தரையிறங்கிய விடுதலைப் புலிகளையும் ஒப்பிடமுடியுமா....?

சம ஆள் வலு, படைக்கள வலுவுள்ள எதிரிக்கு எதிராக 10,00,000 நேசநாட்டுப் படை மேற்கொண்ட தரையிறக்கத்தையும், கிட்டத்தட்ட 20:01 என்ற விகிதத்தில் ஆள்வலு, படைக்கல வலுவுடன் தரையிறங்கிய புலிகளையும் ஒப்பிட முடியுமா?

5 நாட்கள் போராடி 80 மைல்கள் முகப்புத்தள பகுதியில் 20 மைல்கள் நகர்ந்த நேச அணியினரையும் ஒரே இரவில் 5 கிலோ மீற்றர் நகர்ந்து ஏ9ஐ ஊடறுத்து நிலைகளையும் அமைத்துக்கொண்டுவிட்ட புலிகளையும் ஒப்பிட முடியுமா? நிச்சயமாக ஒப்பிடமுடியாது. அப்படியானால், பிரமாண்டமான நோமன்டித் தரையிறக்கத்துடன் ஒப்பிட்டு வியப்படைவதற்கான, எமது குடாரப்புத் தரையிறக்கத்தில் உள்ள சிறப்பம்சங்கள் எவை?

- எமது மண்ணை மீட்பது தவிர வேறு நோக்கம் இல்லாமை.

# நோமன்டி



- நோமன்டியைவிடச் சிறப்பான தலைமையும், அற்புதமான நெறிப்படுத்தலும்.
- அர்ப்பணிப்புடன் நேரில் களமிறங்கிப் போராடிய தளபதிகளின் வழிநடத்தல்.
- போராளிகள், எல்லைப்படையினர், சிறப்பு எல்லைப்படையினரின் அர்ப்பணிப்பு, வீரம், ஈகம்.
- கிடைக்கும் வளங்களை உச்சப் பயன்பாட்டிற்கு உட்படுத்திய துல்லியமான திட்டமிடல்.



- பீரங்கிப் படையணியினர், விசேட கனரக ஆயுதப் பிரிவினர், முதலியோரின் இலக்குத் தவறாத தாக்குதல்கள்.
- படகுகளையும், 14 வீரர்களையும் மட்டும் இழந்து தரையிறக்கத்தைச் சாத்தியமாக்கிய கடற்புலிகளின் திறன்.


இந்தவகையிலே பார்க்கப்போனால், குடாரப்புத் தரையிறக்கத்துடன் ஒப்பிடுவதாயின் புதிதாக ஒரு தரையிறக்கம் நிகழ வேண்டும் என்றே கூற வேண்டும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அணையாத தீபம்



## மேஜர் மாறன்

**சின்னத்துரை சுகுமாரன்**
**23.06.1960– 26.06.1989**
**வவுனிக்குளம்**

பிரிட்டிஸ் ஏகாதிபத்தியத்தை இறுதிவரை எதிர்த்து நின்று போராடி வீர வரலாறுபடைத்த தமிழ் மன்னன் பண்டாரவன்னியனால் பெருமைப்படுத்தப்பட்ட மண் வன்னிப் பெருநிலப் பரப்பு. காடுகளும், குளங்களும், விளைநிலங்களும், காட்டு விலங்குகளும், மந்தைகளும் இம்மண்ணின் செல்வங்கள். இத்தகையதொரு விவசாயக் கிராமமான வவுனிக்குளம் தான் சுகுமாரன் என்ற இயற்பெயரோடு மேஜர் மாறன் பிறந்த ஊர்.

சிறுவயதிலேயே ஒழுக்கமும், இரக்க சுபாவமுடைய இவன். ஆரம்பக் கல்வியை பிறந்த ஊரிலேயே முடித்துக் கொண்டு உயர் வகுப்புப் பயில மத்தியமகாவித்தியாலயத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான். அப்பாடசாலையில் உயர் வகுப்பில் கல்வி கற்கும் பொழுது மாணவர் மன்றத்தின் தலைவராக இருந்த மாறன் சக மாணவர்களின் நன்மதிப்பையும், அன்பையும் பெற்றுக் கொண்டான்.

தமிழீழ மக்களை அடக்கி ஒடுக்கி நய வஞ்சகமாக தமிழின விரோதச்சட்டங் களைப் பிரகடனப்படுத்தி ஓர் இன அழிப்பு நடவடிக்கையில் சிங்கள அரசுகள் இறங்கியிருந்த அக்காலகட்டத்தில், தனது பாடசாலை மாணவர்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்ச்சிகளை ஏற்படுத்த மாறன் பல வழிமுறைகளைக் கைக்கொண்டான். கலை நிகழ்ச்சிகளிற்கூடாகவும், கட்டுரை வடிவங்களிலும், கிராமங்கள் தோறும் பிரச்சாரம் செய்து மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை உண்டு பண்ணினான். அத்துடன் சிங்கள இனவாதத்தின் அடக்குமுறைக்குட்பட்ட நிலையிலும் தமிழர்கள் மத்தியில் தலைதூக்கிக் கொண்டிருந்த சாதிக்கொடுமைகளுக்கு எதிரான கருத்துக்களை மக்களுக்கு குறிப்பாக மாணவர்களுக்கு வழங்கினான்.

சிங்கள இனவாதப் பிடியிலிருந்தும், பிற்போக்குத் தமிழ் தலைமைகளிலிருந்தும் தமிழீழ சமூகம் விடுவிக்கப்பட்டு ஒரு புரட்சிகரத் தலைமையினால் வழிநடத்தப்படும்போது தான் இத்தகைய சமூக ஏற்றத்தாழ்வுகளையும், சமூகஒடுக்குமுறைகளையும் களைந்தெறிய முடியும் என்ற விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கொள்கையை எடுத்துக்கூறிய மாறன் 1983ஆம் ஆண்டின் முற்பகுதியில் தன்னையும் இணைத்துக் கொண்டான்.

கிளிநொச்சி மாவட்ட விடுதலைப் புலிகளின் அரசியற் பொறுப்பாளனாக இருந்தபோது மக்கள் மீது அவன் வைத்திருந்த நேசமும், அக்கறையும் அவனை ஒரு சிறந்த போராளியாக மக்கள் மத்தியில் வெளிக்காட்டியது. சமூகரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் ஒடுக்கப்பட்ட மக்கள் வாழும் கிராமங்களே மாறனின் கவனத்தை விசேடமாக ஈர்த்தன. அம்மக்களின் நல்வாழ்விற்காக மாறன் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது.

சிங்கள வெறியர்களின் காடைத் தனங்களால் தமது சொந்தக் கிராமங்களைவிட்டு ஏதிலிகளாகத் துரத்தப்பட்ட தமிழ் மக்களிற்கு ஒரு பாதுகாப்பான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும் விடுதலைப் புலிகளின் செயற்திட்டங்களுக்கு சரியான முறையில் மாறன் செயல் வடிவம் கொடுத்தான்.

மேலும் மக்களுக்கிடையில் ஏற்படும் சாதாரண பிரச்சினைகளை சரியான கோணத்திலிருந்து அணுகி அதனைத் தீர்த்து வைக்க மாறன் கையாளும் அணுகுமுறைகள் மக்கள் மத்தியிலிருந்த அவனது மதிப்பை மேலும் உயர்த்தியது. எந்தப் பிரச்சினைகளானாலும் அவற்றைத் தீர்த்துவைக்க முற்படுகின்ற பொழுது அப்பிரச்சினைகளின் தோற்றம்,

அதற்கான காரணங்கள், அக்காரணிகளைத் தோற்றுவிக்கும் சமூகப்பின்னணி என்பனவற்றை ஆராய்ந்த பின்பே தீர்வுக்களை வழங்குவான்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில், விடுதலைக்கெனப் புறப்பட்டு பிழையான தலைமைகளால் வழிநடாத்தப்பட்டு, திசை மாறி சமூகவிரோத சக்திகளாகிய சில அமைப்புக்களால் மக்கள் துன்புறுத்தலுக்குள்ளாகிய வேளையில், அவதானத்துடன் அதேவேளையில் தீர்க்கமுடன் மக்களை அச்சக்திகளிடம் இருந்து காத்தான்.

அமைதிப்படை என்ற போர்வையில் எமது மக்கள் மீது ஆதிக்கத்தினைச் செலுத்த வந்த இந்திய அரசின் வஞ்சக நோக்கத்தை எமது மக்களிற்கும், உலகத்திற்கும் காட்டுவதற்காக விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட உண்ணாவிரதப் போராட்டத்தை மக்கள் போராட்டமாக மாற்றி மக்களுக்கு விழிப்புணர்வை உண்டாக்கப் பாடுபட்டான்.

இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிரான யுத்த காலகட்டத்தில் எமது கருத்துக்களையும், உண்மைச் செய்திகளையும் மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்காக எமது இயக்கத்தால் வெளியிடப்படும் 'உணர்வு', 'சுதந்திரப்பறவைகள்' ஆகிய பத்திரிகைகளின் உருவாக்கத்திற்கும், அவற்றை மக்களிடம் கொண்டு செல்லவும் மாறன் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பெண் போராளிகளுடைய பங்கின் முக்கியத்துவத்தைப் பற்றியும், அவர்களை அணி திரட்ட வேண்டிய அவசியத்தைப் பற்றியும் அடிக்கடி வலியுறுத்திக் கூறுவதுடன் அவைகளுக்கு செயல் வடிவமும் கொடுத்துள்ளான்.

வவுனியா, கிளிநொச்சி, முல்லை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னிப் பிராந்தியத்தில் பெண்களுக்கிடையில் அரசியல்ரீதியான விழிப்புணர்ச்சியை உண்டு பண்ணி எமது இனத்தின் விடுதலைப் போராட்டத்தில் அவர்களையும் பங்கு கொள்ள வைக்க பல நடவடிக்கைகளை எடுத்துள்ளான். இவ்வாறாக விடுதலைப் புலிகளின் அரசியல் வேலைத்திட்டங்களை மக்கள் மத்தியில் கொண்டுசென்று சரியான முறையில் செயற்படுத்திய வேலைத்திறனும், மக்கள் மீது குறிப்பாக சமூக ஒடுக்குமுறைக்குள்ளாகிய மக்கள் மீது மாறன் காட்டிய நேசமும் அவனை வன்னிப் பிராந்திய அரசியல் பொறுப்பாளனாக உயர்த்தியது.

26.06.1989 அன்று வவுனியா மாவட்டத்திலுள்ள பன்றிக்கெய்த குளம் என்னும் இடத்தில் வன்னிப்பிராந்திய அரசியற் பொறுப்பாளர் மேஜர் மாறன் உட்பட லெப். நித்திலா(மகளிர் படைப்பிரிவு), லெப். அருள், சுதன், மகேந்தி, சபா, பொபி, அகிலன், கேசவன், அச்சுதன், நவம், விஜயன், முரளி, ரூபன் ஆகிய 14 விடுதலைப் புலிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழர் விடுதலை வரலாற்றில் ஜூன்

## விடுதலைப் பாதையின் முதல் விதை

சிங்களப் பொலிசாரின் முற்றுகைக்குட்பட்டபோது, தியாகி சிவகுமாரன் அவர்கள் 05-06-1974 அன்று முதன்முதலாக தனது உயிரை விடுதலைப் போருக்காக விதையாக்கிக்கொண்டார்.

## சிங்களம் மட்டும் தனிச்சட்டம்

05-06-1956 இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க ஆட்சிக்காலத்தில் சிங்களம் மட்டும் எனும் சட்டம் பிரகடனப்படுத் தப்பட்டு தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டது. இதன்மூலம் தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக்கப்பட்டனர்.

## வந்தாறுமூலைப் படுகொலைகள்

ஆர். பிரேமதாசா ஆட்சிக்காலத்தில் வந்தாறுமூலை யில் சிறீலங்கா இராணுவத்தினரால் 25 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்டனர். 08-06-1991 நடைபெற்ற இச் சம்பவத்தில் பெண்கள் பாலியல் வல்லுறவுக்குப்பின் படுகொலை செய்யப்பட்டனர்.

## இரண்டாம் ஈழப்போர் ஆரம்பம்

சிறீலங்காவுக்கு எதிராக 10-06-1990இல் மீண்டும் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமானது.

## அம்பாறைப் படுகொலை

அம்பாறையில் 1956 யூன் 10-11 ஆகிய இரு தினங்களில் 150 ற்கும் மேற்பட்ட தமிழர்கள் சிங்கள அரசினாலும், அதன் கைக்கூ லிகளாலும் கொன்றொழிக்கப்பட்டார்கள்.

## கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள்

1991-06-12-13 ஆகிய இரு தினங்களில் வீடுகள், பாடசாலைகள், அரிசி ஆலைகளில் தங்கியிருந்த மக்களில் சுட்டும் வெட்டியும், பாலி யல் வல்லுறவிற்குப்பின் படுகொலை செய்யப்பட்டுமென 185 தமிழர் கள் கொல்லப்பட்டனர். சிறீலங்கா விசேட அதிரடிப்படையின் இவ் வெறியாட்டத்தினால் கொல்லப்பட்டவர் தவிர 300 பேர் படுகாயப் படுத்தப்பட்டும், 1500 பேர்வரை காடுகளுக்கும் துரத்தப்பட்டனர்.




## சுதந்திரபுரப் படுகொலைகள்

வன்னியின் சுதந்திரபுரம் எனும் இடத்தில் சிறீலங்கா விமா னப்படையினரின் கிபீர் குண்டுவீச்சு விமானங்களினாலும், ஆனை யிறவு படைத்தளத்தில் இருந்து ஏவிய ஆட்லறி செல்களி னாலும் 29 தமிழர்கள் கொல்லப்பட்டனர். 10-06-1998 இல் சந்தி ரிகா ஆட்சிக்காலத்தில் நடாத்தப்பட்ட இந்த மிலேச் சத்தனமான செயலினால், 60 பேருக்குமேல் படுகாயமடைந்ததுடன் பெறுமதிமிக்க சொத்துக்களும் வளங்களும் நாசமாகின.

## காரைநகரில் விமானத் தகர்ப்பு

காரைநகர் பருத்தியடைப்பில் சிறீலங்கா கடற்படையினரின் விமானமொன்று 15-06-1984 இல் குண்டுவைத்துத் தகர்க்கப்பட் டது.

## கொண்டச்சி இராணுவ முகாம் தகர்ப்பு

மன்னாரில் சிங்களக் குடியேற்றங்களுக்கு ஒரு பகுதியில் காவலாய் இருந்த கொண்டச்சி இராணுவ முகாம் 21-06-1990 இல் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது. இத்தாக்குதலில் பவள் கவச வண்டியொன்று முதன்முதலில் கைப்பற்றப்பட்டது.

## மண்டைதீவு அதிரடித்தாக்குதல்

மண்டைதீவில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் மீது ஆச்சரியமூட்டக்கூடிய வகையில், விடுதலைப் புலிகள் 26-06-1995 இல் நடாத்திய தாக்குதலில், இராணுவ லெப். கேணல் உட் பட 110 இற்கும் அதிகமான சிறீலங்காப் படையினர் கொல்லப்பட்டு பெருமளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

## எருக்கலம்பிட்டியில் சிறீலங்காக் கடற்படையினர் கொடூரம்

இந்தியாவில் இருந்து நாடு திரும்பிக்கொண்டிருந்த 25 தமிழ் அதிகள் பிரயாணம் செய்த படகு, கடலில் சிறீலங்காக் கடற் படையினரால் வழிமறிக்கப்பட்டு, கத்திகள், கோடாரிகள், வாள்களைக் கொண்டு படுகோரமாக கொலைசெய்யப்பட் டார்கள். இச்சம்பவம் மன்னார் மாவட்டத்தில் உள்ள எருக் கலம்பிட்டி கடற்பகுதியில் நடைபெற்றது.

## ஆறாம்கட்டை,தம்பலகாமம், கட்டைபறிச்சான்படுகொலைகள்

26-06-86இல் திருகோமணலை மாவட்டத்தில் உள்ள 6ஆம் கட்டை என்னும் இடத்தில் 6 தமிழர்கள் சிங்கள இராணு வத்தினரால் வெட்டிக்கொல்லப்பட்டார்கள். அத்துடன் அங்கி ருந்த 70ற்கும் மேற்பட்ட கடைகளும், வீடுகளும் சூறை யாடப்பட்ட பின்னர் எரித்துச் சாம்பலாக்கப்பட்டன. தம்பலகாமம் என்னும் இடத்தில் 30 தமிழர்கள் சிங்கள ஊர்காவல் படை யினரால் சிறைப்பிடிக்கப்பட்டு பின்னர் வில்ப்பத்து என்னும் இடத் தில் கொலைசெய்யப்பட்டார்கள்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கட்டைபறிச்சான் என் னும் இடத்தில் 30 பொதுமக்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்கள். இவர்களில் 6 பேர் பின்னர் இராணு வத்தினரால் கொலை செய்யப்பட்டார்கள்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




டுதலைவேண்டி நிற்கும் ஈழத் தமிழ்ச் சமூகத்தின் உணர்ச்சிப் பிரவாகத்தின் வெளிப்பாடாய் ஜேர்மனியின் இரு நகரங்களில்(ஸ்ருக்காட், கோ்ண்) 2001 யூன், 16ஆம், 17ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட 'பொங்குதமிழ்' எழுச்சிவிழா நிகழ்வுகளில் இருந்து....




21.06.2001 இல் திருமலையில் நடாத்தப்பட்ட தமிழ்த்தின விழாவிலிருந்து....



14-06-2001 அன்று கிழக்கு மாகாண பல்கலைக்கழகத்தினுள் சிறீலங்கா இராணுவத்தினர் அத்துமீறி நுழைந்ததைக் கண்டித்தும், 15-06-2001 இல் அப் பல்கலைக்கழக மாணவன் கைதுசெய்யப்பட்டதைக் கண்டித்தும் அவரை விடுதலை செய்யக்கோரியும் 19-06-2001 அன்று மட்டக்களப்பில் நடாத்தப்பட்ட ஊர்வலத்திலிருந்து....




கடுமையான இராணுவக் காவலையும் பொருட்படுத்தாது, உணர்வு பூர்வமாக கோசமிடும் கிழக்கிழங்கைப் பல்கலைக்கழக மாணவர்கள்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### சிறப்பு எல்லைப்படை, எல்லைப்படை வீரர்கள் கௌரவிப்பு

அக்கினிச்சுவாலை முறியடிப்புச் சமரின்போது போராளிகளுடன் இணைப்பங்காற்றிய வட்டக்கச்சி பிரதேச சிறப்பு எல்லைப்படை, எல்லைப்படை வீரர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு 31-05-01 அன்று இராமநாதபுரம் மேற்கு, கிளிநொச்சி பாடசாலையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தமிழீழ எல்லைப்படைப் பொறுப்பாளர் பாப்பா, சாள்ஸ் அன்ரனி படையணியைச் சேர்ந்த தளபதி நகுலன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். வன்னி வெற்றிக்கு எல்லைப்படையினரே முக்கிய பங்கு வகித்தனர் என்றும், அவர்களைக் கௌரவிக்க வேண்டியது கடமை என்கின்ற தலைவரின் சிந்தனையின் வடிவமே. இ வாறு பிரதேச ரீதியாக எல்லைப்படையினரை கௌரவித்து வருகின்றோம் எனவும் திரு. பாப்பா அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டார்.

### தமிழீழத்தை அழிக்க முனையும் கல்விக் கொள்கையை மாற்றவேண்டும்– மாணவர் அமைப்பு அறைகூவல்

தமிழீழமெங்கும் சிறப்பாக நடைபெற்ற யூன் 5 மாணவர் எழுச்சிநாளை முன்னிட்டு விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு 05-06-01 இவ் அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளது. அவ் அறிக்கையில்:

எமது மாணவர்களின் கல்வியை அழிப்பதன் ஊடாக எமது இனத்தின் தனித்துவத்தை அழிக்க நினைக்கும் எதிரியின் எண்ணக் கருத்துக்கு எதிராக எமது தேசிய வாழ்வையும், வளத்தையும் மேம்படுத்தும் வகையிலான கல்வியை நாம் உருவாக்கவேண்டும். காலனித்துவத்தின் சுரண்டல் தேவைக்காக அமைக்கப்பட்டதும், சிங்களப்பேரினவாதத்தின் கருத்துருவாக்கத்தையும் திணித்து எமது இனத்தை அழிக்க நினைக்கும் கல்விக்கொள்கையை எமது மாணவர் சமூகம் மாற்றியமைக்கவேண்டும். இவ்வாறு மாற்றியமைப்பதன் ஊடாகவே எமக்கான இலட்சியத்தையும், எதிர்கால வாழ்வையும் நாம் உருவாக்கமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

### இரு தமிழ்ப் பெண்கள்மீது பம்பலப்பிட்டிப் பொலிசார் பாலியல் துன்புறுத்தல்

சந்தேகத்தின் பெயரில் பம்பலப்பிட்டி தனியார் விடுதியொன்றில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட சாவகச்சேரியைச் சேர்ந்த 21 வயதுப் பெண்ணொருவரையும், வவுனியாவில் வைத்துக் கைதுசெய்த 39 வயதான பெண்ணொருவரையும் விசாரணைக்கென அழைத்துச்சென்ற பம்பலப்பிட்டிப் பொலிசார் கடந்த 24-06-01 அன்று பாலியல் ரீதியிலான துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளனர். கைதுசெய்து தடுத்துவைக்கப்பட்டிருந்தபோது தாம் மிக மோசமான பாலியல் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளதாக இருபெண்களும் மனித உரிமை ஆணைக்குழுவிடம் புகார்செய்துள்ளனர்.



அவுஸ்திரேலியத் தூதுவராக ஜானக பெரேரா நியமிக்கப்பட்டதனை எதிர்த்து அவுஸ்திரேலியாவில் (18-06-2001) அன்று ஈழத்தமிழர்களால் நடாத்தப்பட்ட வீதி ஊர்வலத்தில், ஜானக பெரேரா போன்றும், அவரது மெய்ப்பாதுகாவலர் போன்றும் வேடமணிந்து செல்லும் சிலர்...

### முரசுமோட்டையில் மனித எலும்புக்கூடுகள் மீட்பு.

கிளிநொச்சி முரசுமோட்டைப் பகுதியில் அ. யேசுதாசன் என்பவரது வீட்டுக்கிணற்றில் இருந்து 08-06-01 அன்று இரு மனித எலும்புக்கூடுகள் தமிழீழ காவல்துறையினரால் மீட்கப்பட்டு அடையாளம் காணப்பட்டுள்ளன.

சிறீலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்புக் காலப்பகுதியில் தமது வீடுகளைப் பார்க்கச் சென்று காணாமல் போனோர் எனப் புகார் செய்யப்பட்டிருந்த நாகலிங்கம் (வயது 60) பெருமாள் (வயது 50) என்பவர்களுடையதென அடையாளம் காணப்பட்டது.

### சொல்கெய்மை புறந்தள்ளும் நடவடிக்கைக்கு புலிகள் கண்டனம் – தலைமைச் செயலகம் அறிக்கை

நோர்வேயின் சமாதானத் தூதுவர் திரு. எரிக் சொல்கெய்மை புறந்தள்ளி அவரது செயற்பாட்டுத் தகைமையை குறைத்து விடுவதற்கு சிறீலங்கா அரசு மேற்கொண்ட முயற்சியை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும், நோர்வேயின்அனுசரணை முயற்சியால் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றம் குறித்த தமது அதிருப்தியையும் தெரிவித்து விடுதலைப் புலிகள் இயக்கம் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது.

09-06-01 இல் வெளியிடப்பட்ட அவ்வறிக்கையில், நோர்வேயின் முயற்சிக்கு தரம் உயர்த்துதல் என்ற போர்வையின் கீழ் திரு. சொல்கெய்ம் அவர்களின் ஆக்கபூர்வமான பாரபட்சமற்ற நடுநிலை முயற்சிக்கு பங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் சிறீலங்கா அரசு மீது விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டியிருந்தனர்.

### சிறீலங்காக் கடற்படையினர் தாக்குதல் முல்லைக் கடலில் இரு மீனவரைக் காணவில்லை

13-06-01 அன்றுமாலை முல்லை மாத்தளன் சிட்டு குடியிருப்பிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற இரண்டு இளம் மீனவர்கள் மீது சிறீலங்காகடற்படையினர்மேற்கொண்ட விசமத்தனமான தாக்குதலால் படகும் அதன் உபகரணங்களும் எரிந்து நாசமானதுடன் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களும் காணாமல்போயுள்ளனர்.

### வெள்ளிவிழா கொண்டாடும் வெரித்தாஸ் தமிழ்ப்பணிக்கு தமிழீழத் தேசியத் தலைவர் வாழ்த்து

சிங்கள அரசின் பொய்யான பரப்புரைகளுக்கு மத்தியிலும் உண்மைக்கும், நேர்மைக்கும் மதிப்பளித்து உள்ளதை உள்ளபடி உரைக்கின்ற, செய்தித்தர்மத்தைக் காத்துச் செயற்படும் தமிழ்ப்பணியின் சேவை போற்றுதற்குரியது என தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் வெள்ளி விழாக் காணும் தமிழ்ப்பணிக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேர்காணல்

## அண்ணாவியார்
## வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்
## ஒரு நேர்காணல்

**தமிழர்களின் பாரம்பரியங்களில் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழும் சேர்ந்து முழுச்சுவை கொடுக்கும் கலை வடிவமே 'நாட்டுக்கூத்து' ஆகும். அவ்வாறான கலை அடுத்த தலைமுறைகள் கையேற்காத நிலையில் அடிச்சுவடே தெரியாது அழியும் ஆபத்தை எதிர்நோக்கிய நிலையில் உள்ளது. இந்நிலையில் மூத்த அண்ணாவியாரான திரு.வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்கள் தற்போது 90 வயதைப் பூர்த்திசெய்த மூத்தகலைஞனும், 1999ஆம் ஆண்டு காலப் பகுதியில் நாட்டுக்கூத்துக்கான கலாபூசண விருதைப்பெற்றவரும் ஆவார். அத்தகைய மூத்த கலைஞனை 7ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பில் நேர் கண்டோம்**

* நீங்கள் இக்கலையை எத்தனை வயதில் பயின்றீர்கள்? இக்கலையைப் பயில உங்களைத் தூண்டியது எது?

நான் பதினெட்டு வயதில் கற்க ஆரம்பித்தேன். எனக்கு வடமோடிக் கூத்தில் இருந்த ஆர்வமும், என் குருவான தம்பையா மாணிக்கத்தின் 'கோவலமுருகரின்' கூத்தைப் பார்த்ததிலிருந்து இக்கலையில் எனக்கு ஆவல் பிறந்தது.

* நீங்கள் முதலில் ஏற்ற பாத்திரம்?

கோவலன் கூத்தில் கண்ணகியாக முதல் முதலாக நடித்தேன்.

* எப்போது அண்ணாவியார் நிலையை அடைந்தீர்கள்?

முல்லைத்தீவு தம்பையா மாணிக்கம் எனது குரு. அவரிடம் என்னுடைய இருபத்தியிரண்டாவது வயதில் குருவாக்கைப் பெற்று (குருவாக்கைப் பெறுதலே அண்ணாவியார் நிலையை அடைவதற்கான இறுதிக் கட்டம்) அண்ணாவியார் ஆனேன்.

* குருவாக்குப் பெற்ற பின் உங்கள் முதல் கூத்து எது?

கண்ணகி கூத்தை முள்ளியவளையில் அரங்கேற்றினேன்.

* உங்களது கலைப் பயணங்களையும், அரங்கேற்றிய இடங்களையும் கூறுங்கள்?

உள்ளூரில் ஆங்காங்கே மேடை ஏற்றியதைத் தொடர்ந்து, முள்ளியவளையில் எனது கூத்தைக் கண்டுகளித்த இலங்கை வானொலியைச் சேர்ந்த அருணா செல்லத்துரை, மற்றும் வாசகர் போன்றவர்களின் உதவியுடன் 1965இல் இலங்கை வானொலியில் இரண்டு மணித்தியாலமாகச் சுருக்கி அரங்கேற்றியுள்ளேன். அதன் பின் 1974இல் கொழும்பில் சரஸ்வதி மண்டபம், லும்பினி மண்டபம், பேராதனை வளாகம், பம்பலப்பிட்டி போன்ற இடங்களில் அரங்கேற்றியுள்ளேன்.

இக்காலப்பகுதியில் பல்கலைக்கழகங்கள் மற்றும் பல இடங்களிலிருந்து பலர் கூத்துக்களை அரங்கேற்ற வந்திருந்தபோது, அக்கூத்துக்களுக்கு வரையறுத்த நேரம் வழங்கிய போது நான் அதற்கு உடன்படாததும், நான் விரும்பிக்கேட்டபடியே நிகழ்வின் இறுதியில் எனது கூத்தை அரங்கேற்ற அனுமதி தந்தனர். அப்போது நேரம் இரவு 11.30 மணியாகும். எனது நிகழ்வுக்கு கொடுத்த நேரம் 2 1/2 மணித்தியாலம். ஆனால், என்மேடை அரங்கேற்றம் முடிந்த நேரம் 5.30 அதிகாலை ஆகும். இலங்கை வானொலியைச் சேர்ந்தோர், பேராசான்கள் எல்லோரும் மெய் மறந்து பார்த்து முடிவில் எனது கரம் பற்றி வாழ்த்துத் தெரிவித்தார்கள்.

இதன்பின், 1993இல் பட்டதாரிகளைக் கொண்டு பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபம், யாழ். பல்கலைக்கழகம் ஆகிய இடங்களில் அரங்கேற்றினேன். இக்காலப்பகுதிதான் எனது மேடைஏற்றங்களின் இறுதிப்பகுதி ஆகும்.

* உங்கள் நாட்டுக்கூத்திற்கான நடிகர்கள் யார்?

இக்கலை ஆர்வம்கொண்ட ஒழுக்கம் நிறைந்த இளையவர்கள். என்னிடம் ஆசிரியர்களும், பட்டதாரிகளும் பயின்றதே அதிகம்.

* இவ்வாறானவர்களை நீங்கள் நடிகர்களாகத் தேர்ந்தெடுப்பதற்கான காரணம் என்ன?

கலை ஒழுக்கம் என்று உண்டு. அதாவது, அமைதி, ஆர்வம், பணிவு, குருபக்தி, ஆளுமை போன்றவை கவனத்தில்கொள்ளப் படும். மேலும் ஒத்திகை செய்யும் இடத்தை வளைத்து சுற்றிவர அடைத்து 'கும்பம்' வைத்தபின்பு நடிகர்கள் அரங்கேற்றம் முடியும் வரை மது, மாமிசம் புசிக்கலாகாது.



* நீங்கள் எப்போது கலாபூசண விருது பெற்றீர்கள்?

நான் 1999இல் இக் கலாபூசண விருது பெற்றேன். 1993ஆம் ஆண்டின்பின் உடல் நலக்குறைவால் கூத்து அரங்கேற்றம் செய்ய வில்லை.

* உங்கள் கலைவாழ்வில் ஏதும் சோதனைகள், வேதனைகளுக்கு முகம் கொடுத்தீர்களா?

கடவுளே என்று அப்பிடி ஒன்றும் இல்லை. அன்றில் இருந்து 1993 வரை மேடையேற்றங்கள் செய்து, கொழும்பு வரை சென்று பின் 1999ஆம் ஆண்டு கலாபூசண விருதையும் பெற்றுள்ளேன்.

* ஒரு அண்ணாவியாருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் யாவை?

குருபக்தி, தாளம், ஞானம், வாத்தியம் என்பன அடங்குகின்றது. இதில் வாத்தியம் என்னும்போது மத்தளம் அடித்துப் பாடுவதுடன், கூத்து முழுவதையும் முறையான மனத்துடன் நெறிப்படுத்தத் தெரிய வேண்டும்.

* ஒரு கூத்தின் நெறி ஒழுங்கைக் கூறுங்கள் பார்க்கலாம்?

காப்பு
தோடையம்
கட்டியம்
பொது விருத்தம்
பாட்டு
மங்களம்

இதில் தோடையம், கட்டியம், பொது விருத்தம் ஆகியவற்றின் முடிவு தீர்மானம் ஆகும். அதேபோல் மங்களம் கூத்தின் இறுதி ஆகும்.

*உங்கள் கூத்து வடமோடியா? அல்லது தென்மோடியா?

வடமோடிக் கூத்து யாழ்ப்பாணம், முல்லைத்தீவின் பெரும்பகுதிகளில் காணப் படுகின்றது. இதேபோல் முல்லைத்தீவில் ஓரிடத்தில் மற்றும் மட்டக்களப்புப் பகுதிகளில் தென்மோடிக் கூத்துக்களைக் காணலாம்.

* கடைசியாக உங்களிடம் நாம் கேட்பது இப்பாரம்பரியமான நாட்டுக்கூத்து அழிந்து போகாமல் இருக்க நீங்கள் கூறுவது என்ன?

இளையவர்கள் இக்காலப் போர்ச் சூழலுக்கு ஏற்ப கருப்பொருளை எடுத்து கூத்தின் பாரம்பரியத்தைப் பின்பற்றி இக்கலை அழியாது பாதுகாக்கவேண்டும்.

தவராஜா சத்தியன்
பு.சத்தியமூர்த்தி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




## 02.05.2001



கேகாலை மாவட்டம் மாவனெல்ல பகுதியில் முஸ்லீம் மக்கள் மீது சிங்களக் காடையர்கள் மேற்கொண்ட தாக்குதலில் நூற்றிற்கு மேற்பட்ட முஸ்லிம்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள், பள்ளிவாசல்கள், தொழிற்சாலைகள் என்பன எரியூட்டப்பட்டன. இரு முஸ்லிம்கள் பலியானோதோடு பலர் காயமடைந்தனர்.

## 05.05.2001

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பொத்துவில் வீதியில் சிறீலங்கா அதிரடிப்படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித்தாக்குதலில் 5 அதிரடிப்படையினர் கொல்லப்பட்டதுடன், மேலும் இருவர் காயமடைந்தனர்.

## 06.05.2001



அக்கினிச்சுவாலை-1 நடவடிக்கையில் சிறப்பாகச் செயற்பட்ட தளபதிகள், போராளிகள், ஆகியோர் தமிழீழத் தேசியத் தலைவரால் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வின் போது அக்கினிச்சுவாலை-1 நடவடிக்கையில் சோதியா படையணியை சிறப்புற வழிநடத்தியமைக்காக லெப்டினன்ட் கேணல் துர்க்கா அவர்கட்கு கேணல் நிலை வழங்கப்பட்டு கௌரவ விருதும் வழங்கப்பட்டது. சாள்ஸ் அன்னரனி சிறப்புப் படையணியை சிறப்புற வழிநடத்தியமைக்காக மேஜர் கோபித் லெப்.கேணல் நிலை வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

## 07.05.2001

மூதூர் பகுதியில் சிறீலங்காப் பொலிசாரின் ஒத்துழைப்போடு சிங்களக் குண்டர்களால் முஸ்லிம்களுக்குச் சொந்தமான 12 வர்த்தக ஸ்தாபனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

## 08.05.2001

சென் பற்றிக்ஸ் வீதியைச் சேர்ந்தவரும் தற்போது நவாலி வீதியில் வசித்து வருபருமான நான்கு பிள்ளைகளின் தந்தையான 35 வயதுடைய பெஞ்சமின் சகாயராசா என்ற குடும்பஸ்த்தர் சிறீலங்காப் படையால் பவுசரால் மோதிக் கொல்லப்பட்டார்.

## 10.05.2001

மட்டக்களப்பு பொலநறுவை எல்லைக் கிராமமான சுங்காவில் பகுதியில் நிலையமைத்திருந்த சிங்களப்படைகள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 12 சிங்களப்படையினர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயமடைந்தனர்.

---

சிங்களப்படையினாரால் பரணகம என்ற இடத்தைச் சேர்ந்த 43வயதுடைய அப்துல் மஜீத் என்ற இஸ்லாமியத் தமிழர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

## 13.05.2001

சிறுவர் விபச்சாரத்திற்கெதிராக வன்மையான போராட்டங்களை நடத்தி வந்த வண்.பிதா பேர்னாட் கோஸ்தா பாதாள உலகக் கோஸ்டிகளால் நீர்கொழும்பில் வைத்து குத்திக் கொல்லப்பட்டார்.

## 14.05.2001

திருமலை மாவட்டம் அளுத்நுவரப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தின் றக் வண்டியொன்று விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டது இதன்போது மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், மேலும் பலர் காயமடைந்தனர்.

## 16.05.2001

வன்னிக்கு வரவிருந்த நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்கெயும் தலைமையிலான சமாதானக் குழுவினரை வரவேற்கவெனப் புறப்பட்ட விடுதலைப் புலிகளின் சமாதானக் குழுவினரின் வாகனத் தொடரணியை இலக்கு வைத்து சிறீலங்கா நாசகாரப் படையினர் மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலில், சமாதானக் குழுவினருக்குப் பாதுகாப்பினை வழங்கிக் கொண்டிருந்த பஜரோ வாகனம் ஒன்று சிக்கி பலத்த சேதமடைந்தது. மேஜர் எழிற்செல்வன் என்ற போராளி வீரச்சாவடைந்தார்.

மட்டக்களப்பில் ஒட்டமாவடி நாவலடி என்ற இடத்தில் இரண்டு முஸ்லீம் பொதுமக்கள் சிங்கள இராணுவத்தால் வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்டனர்.

## 17.05.2001



தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும், நோர்வேயின் சமாதானக்குழுவினருக்கும் இடையே மல்லாவியில் பலமணிநேரப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதன் போது தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களால் “அரசியல் பேச்சுவார்த்தை தொடங்கப்படுவதற்கு முன்னராக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீது விதிக்கப்பட்ட தடையை சிறீலங்கா அரசாங்கம் நீக்கிவிடுவது அவசியம்” என்பது நோர்வே சமாதானக் குழுவினருக்கு வலியுறுத்தப்பட்டது.

## 18.05.2001

வவுனியா மாவட்டத்தில் மூன்று இடங்களில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 13படையினர் கொல்லப்பட்டு, 21 படையினர் காயமடைந்தனர்.

## 21.05.2001

சிறீலங்கா ஆயுதப் படைகளின் அதி உயர் பாதுகாப்பு வலயமான திருகோணமலைக் கோட்டைக்கள் குண்டு ஒன்று வெடித்துள்ளது. சிங்கள இராணுவத்தின் கஜபாகு படைப்பிரிவு நிலைகொண்டுள்ள திருமலை பிரடறிக் கோட்டைக்குள் அமைந்துள்ள திருமலை மாவட்டச் செயலகத்தின் புனர்வாழ்வு அலுவலகத்தில் குண்டு வெடித்தது. இதன்போது மூவர் காயமடைந்தனர்

## 22.05.2001

சிறீலங்கா இராணுவத்தின் ஊடுருவித் தாக்குதல் நடத்தும் நாசகார அணியால் மட்டக்களப்பின் மருதங்கேணிப் பகுதியில் ஒரு பொதுமகன் கொல்லப்பட்டதுடன் மூவர் கடத்திச் செல்லப்பட்டனர்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

# "கண்கள் கூறும் வார்த்தைகள்"

www.tamilarangam.net

காணும் கண்களே,
கூறும் வார்த்தை
என்ன?
அஞ்சல் ஊடாக
எரிமலைக்கு...




ஈழப் போராட்டத்தின் முதற்குறி,
இனித் தவறாது விழும் மரண அடி,
சிறியவனல்ல இவன்,
சினங்கொண்ட சின்னப் புலி,
அணிலுக்கான குறியல்ல இது
அரசையே அசைக்கப் போகும் குறி,
அவன் கண்களைக் கவனியுங்கள்,
ஒரு ஒளி தெரியும்,
கரங்களை நோக்குங்கள்,
உறுதியொன்று தெரியும்.
சிணுங்காதே... சீறடா,
சீறிக் கொண்டே இரடா,
கடைசியில் கரம் சேருமடா தமிழீழம்.

இ.திலீபன்
பாரிஸ், பிரான்ஸ்

என் பாட்டன் எனக்காக
நட்டு வைத்த தோட்டமதில்
புகுந்துவிட்ட வானரமே!
உன்னை ஓட ஓட விரட்டும் வரை
ஓய்ந்திருக்க மாட்டேன் நான்!
ஒரு கணப்பொழுதிலினும்
உறங்காமல் காப்பதற்கும் தயங்க மாட்டேன்!
என் உரிமையினை
யாருக்கும் தரவும் மாட்டேன்!
சிறியவன் என்று எண்ணி விடாதே
இலக்கோ துல்லியமானது!

மா. பாஸ்கரமூர்த்தி
லண்டோ, யேர்மனி

கல்லும் கவணும் எடுத்தாயோ? தாவீதே!
கண்முன் நிற்பது யார்? கோலியாத்தோ?
பல்லாண்டு முன் நடந்ததிந்தக் கதை
புதிதாகப் பதிவாகுது புரிவாரிதை.
புல்லும் புடைத்தெழும் புலிவீரர் கால்பட்டால்
பூத்திடும் புதுத்தேசம் தமிழர் ஒன்றுபட்டால்.
சொல்லும் செயலும் வேறாக்கிச்
சோடினைகள் பலவாக்கிக்
கொல்லும் செயல்புரியும் கோலியாத்தைக்
குப்புறத்தள்ளிவிடும்
" தாய்நிலத்து மைந்தர் படை"

திருமதி அ.றிச்சேட்.
சின்டில்பிங்கன், ஜேர்மனி

ஏய் சிங்களமே இதோ பார்!
என் தாய்நிலம் பறித்தாய்
அப்பு ஆச்சி வாழ்ந்த மண் பறித்தாய்
என்னைத் தாலாட்டிய ஏணை பறித்தாய்- இனி
உன்னால் என்னிடம் எதைப்பறிக்க முடியும்
முடியாது ஆம் இது ஒரு உண்மை வரலாற்றை
படைத்துக் கொண்டிருக்கும் புதிய குருசேத்திரம்
என் கண்களுக்குத் தெரிவது
சிங்களப்படையே உனது முகாம்களே!
சந்தர்ப்பம் தருகின்றோம்
நானும் என் போன்ற ஆயிரமாயிரம்
வீரர்கள் ஏற்றிய நாண்கள்
விடுபட முன் ஓடி விடு பகையே ஓடிவிடு...

கானப்பிரியன்
பலர்மோ, இத்தாலி

இந்தப் பிஞ்சுக் கரங்கள்
சிங்கள இராணுவத்தினரை,
விரட்டி அடிக்க இப்பவே
குறிபார்த்து பயிற்சி பெறுகின்றது
சிறுவனே நீ யுத்தகளத்தில்
காலடி வைப்பதற்கான
முதல் கட்டம் இதுதான்
உன் முகத்தில் தெரியும்
வெறுப்புணர்ச்சி நிச்சயமாக
சிங்கள இராணுவத்தை விரட்டி அடித்து
தமிழீழத்தை நமது கைக்கு
கொண்டு வரும் அது உன் கண்களில்
தெரிகின்றது சிறுவனே!

சுஜிந்தா சிவபாலசுப்பிரமணியம்
கிறினி, பிரான்ஸ்

வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் இவ்
உண்மையை உலகிற்கு உணர்த்தியவர்
எம் தலைவர்
முன்னோர் கவண் வீசி எதிரியை வீழ்த்தினர்.
இன்று ஆயிரம் ஆயிரம் எதிரிப்படை வீழ்ந்தது.
புலிக்கு கற்றுக் கொடுக்க வேண்டுமா?
புலிக்குப் பிறந்தது பூனையாகுமா- எம் மண்ணில்
எப்படை வரினும் எம் சந்ததி பணியாது
கெட்டப்பொல்லால் வீழ்த்துவோம் பாரீர்.

அ.சிவானந்தம்
மிச்சம், ஐக்கிய இராச்சியம்

கவண் வீசிக் கல்லடித்து இவன் செய்வதென்ன
கண்விழித்துக் காவல் காக்க
இவன் தயாராகி விட்டான்
கண்களின் நேரிய பார்வை அவன் நிமிர்ந்த நிலை
கையின் உத்வேகத்தால் உந்தப்படும் விசை
பார்ப்போரை பரவசத்தில் ஆழ்த்தும் அவன் செயல்
இவனும் ஒரு காவல் வீரன்தான் எமது மண்ணை
அன்னியனின் பிடியிலிருந்து காக்கப் புறப்பட்ட
புதிய வீரனின் புதிய தலைமுறையின் காவலன்
கண்இமைக்கும் நேரத்தில் இவனால்
கவண் மூலம் கல் வீசியடித்துக்கூட எதிரியின்
தலைவிதியை மாற்றும் இந்த இளைய வீரனும்
எம் ஈழத்தாய் மைந்தன்.

நயினை பாரதி
பேர்ண், சுவிஸ்

## ஏப்ரலுக்கான...





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



www.tamilarangam.net

